REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/Thinakaran.lk /ThinakaranLK

2022 பெப்ரவரி 22 செவ்வாய்க்கிழமை

தினகரன்
THINAKARAN
தினகரன்

வரு. 90 இல. 45 | Tuesday 22, February, 2022 | 16பக்கங்கள் | 30/-

உள்ளூர் கைத்தொழில்களில் முதலீடு செய்து;

நாட்டை கட்டியெழுப்புவதற்கு முன்வருமாறு ஜனாதிபதி அழைப்பு

உள்ளூர் பாரிய தொழில் முயற்சியாளர்களிடம் பகிரங்க கோரிக்கை

அரசின் அபிவிருத்தி செயற்பாடுகளில் தனியார் துறையினரை பங்குபற்ற வைக்க ஜனாதிபதி முயற்சி

உள்ளூர் கைத்தொழில்களில் முதலீடு செய்து நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு இணைந்து கொள்ளுமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உள்ளூர் தொழில் முயற்சியாளர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

பல்வேறு துறைகளில் உள்ள பாரிய தொழில் முயற்சியாளர்களுடன் நேற்று (21) முற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற 06

சர்வதேச தாய்மொழி தினம் (International Mother Language Day) பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் நடைபெற்றது. இலங்கைக்கான பங்களா தேஷ் உயர்ஸ்தானிகராலயம், கல்வி அமைச்சு, ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிட ஒருங்கிணைப்பாளர் மற்றும் இலங்கை சாரணர் சங்கம் ஆகியன இணைந்து இவ்வருட சர்வதேச தாய்மொழி தினத்தை ஏற்பாடு செய்திருந்தன. இதனை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர் ஒருவருக்கு பிரதமர் சான்றிதழ் வழங்குவதை காணலாம்.

வரிச்சலுகை வழங்காவிடின் எரிபொருள் விலை அதிகரிப்பு

தவிர்க்க முடியாது என்கிறார் உதய கம்மன்பில 03

EU, UNDP, UNICEF நிதி உதவியுடன்

நீதி மறுசீரமைப்பு நிகழ்ச்சித் திட்டம் நேற்று உத்தியோகபூர்வமாக ஆரம்பம்

ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியின் கீழ் நீதி அமைச்சு, ஐக்கிய நாடுகள்அபிவிருத்தித் திட்டம் மற்றும் ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம் ஆகியன இணைந்து இலங்கையில் நீதித்துறை மறுசீரமைப்பை நோக்காகக் கொண்டு செயற்படுத்துகின்ற "நீதி மறுசீரமைப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் உத்தியோக பூர்வ ஆரம்ப நிகழ்வு நேற்று நீதி அமைச்சில் இடம்பெற்றது.

இந்தப் புதிய நிகழ்ச்சித் திட்டத்திற்கான நிதியுதவியாக ஐரோப்பிய ஒன்றியத்தினால் 18 மில்லியன் யூரோ (இலங்கை மதிப்பில் ஏறத்தாழ 4 பில்லியன் ரூபாய்) மற்றும் ஐக்கிய நாடுகளின் 06

A/L பரீட்சையை கருத்திற்கொண்டு

சுழற்சி முறையில் இரு தடவைகள் மின் வெட்டு

நேற்று முதல் நாடு பூராவும் அமுல்

சுழற்சி முறையிலான மின்வெட்டு நேரம் மாற்றியமைக்கப்பட்டு நேற்று முதல் அமுல்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு இலங்கை மின்சார சபைக்கு அறிவித்துள்ளது.

தற்போது இடம்பெற்றுவரும் கல்விப் பொதுத்தராதர 06

கச்சதீவு திருவிழாவில் இலங்கை, இந்திய பக்தர்கள்

வெளிவிவகார அமைச்சு அனுமதி வழங்கல்

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய திருவிழாவில் மட்டுப்படுத்தப்பட்ட அளவு இலங்கை – இந்திய பக்தர்கள் கலந்துகொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

கொரோனா நிலைமையை கருத்திற்கொண்டு இரு நாட்டு பக்தர்களும் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் கலந்துகொள்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக 06

பயங்கரவாத தடைச்சட்ட திருத்த வழக்கு;

தமிழ் அரசியல் கைதிகளை பெரிதும் பாதிக்க வாய்ப்பு

ஜனாதிபதி சட்டத்தரணி தவராசா எச்சரிக்கை

தற்போது சிறையிலுள்ள தமிழ் அரசியல் கைதிகள், பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் திருத்தப்பட்ட வரைவுக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கினால் நெருக்கடிக்குள் தள்ளப்படுவார்கள்.

இந்த வழக்கு வெற்றி பெற்றால், கடந்த காலத்தில் இருந்த மிக மோசமான பயங்கரவாதத் தடைச் சட்டம் 06

மக்கள் எனக்கு வழங்கிய ஆணை செயல் வடிவில்

– அங்கஜன் இராமநாதன் பெருமிதம்

கடந்த பாராளுமன்ற தேர்தலில் மக்கள் எனக்கு வழங்கிய மிகப்பெரிய ஆணைக்கு செயல் வடிவில் நன்றி கூறி வருகிறேன் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார். பொருளாதார ரீதியாக முன்னோக்கிக் கொண்டு செல்வதினூடாக இழந்த அனைத்தையும் மீளப் பெற்று எமது இலக்கினை அடைய முடியும். 06

தனக்கு எதிராக சாட்சியளித்தோரிடம் நட்டஈடு;

அசாத் சாலியின் மனு தொடர்பில் மார்ச் 23 இல் நீதிமன்று தீர்மானம்

தனக்கு எதிராக சாட்சியமளித்தவர்களிடம் நட்டஈடு கோரி மேல்மாகாண முன்னாள் ஆளுநர் அசாத் சாலி தாக்கல் செய்த மனுவை அனுமதிப்பதா இல்லையா என்பது தொடர்பில் எதிர்வரும் மார்ச் 23ஆம் திகதி உத்தரவு பிறப்பிக்கப்படும் என கொழும்பு மேல் 06

விடையளிக்க முடியாது முழித்த மாணவர்கள்

பொருளியல் வினாத்தாளில் சிக்கலுக்குரிய 3 கேள்விகள்

குற்றச்சாட்டு குறித்து பரீட்சைகள் திணைக்களம் விசாரணை

க.பொ.த உயர்தரப் பரீட்சை 2021 பரீட்சையின் பொருளியல் பகுதி ஒன்று வினாத்தாளில் சரியாக விடை வழங்க முடியாத ஐந்து வினாக்கள் உள்ளடக்கப்பட்டதாக எழுந்த குற்றச்சாட்டை ஆராயுமாறு பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் எல்.எம்.டி. தர்மசேன 06

பொருளாதார நெருக்கடிக்கு உள்ளூரில் தீர்வு கிடையாது

தேடுவதும் பலனற்றது என்கிறார் ஹர்ஷ டி சில்வா

தற்போதைய பொருளாதார நெருக்கடியை உள்நாட்டு தீர்வின் மூலம் நிர்வகிக்க முயற்சிப்பது முட்டாள்தனமானது என ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

இலங்கையின் கடன் நிலைத்தன்மையை ஆராய்ந்து சர்வதேச நாணய நிதியம் எதிர்வரும் பெப்ரவரி 25ஆம் திகதி பணிப்பாளர் சபைக்கு அறிக்கை சமர்ப்பிக்கவுள்ளது. அரசாங்கம் 06

மூத்த ஊடகவியலாளர் கமல் லியனாராச்சி காலமானார்!

03

வடக்கிற்கான சுற்றுலாவுக்கு 34 இலட்சம் ரூபா செலவிட்ட மேயர்

மக்கள் பணம் வீணடிக்கப்பட்டதாக JVP கண்டனம்

கொழும்பு மாநகர சபையின் 80 உறுப்பினர்கள் கடந்த 19, 20 ஆகிய திகதிகளில் வடக்கிற்கான சுற்றுப்பயணத்திற்காக ரூபா 3.4 மில்லியன் (Rs34,57,900.00) செலவிட்டுள்ளதாக கொழும்பு மாநகர சபையின் ஜே.வி.பி உறுப்பினர் ஹேமந்த குமார தெரிவித்துள்ளார். இதுகுறித்து 06

முஸ்லிம் தனியார் சட்டங்கள் தொடர்பாக

முஸ்லிம் பெண்கள் முன்னெடுத்த கவனயீர்ப்பு

புத்தளம் கொழும்பு முகத்திடலில் கூடினர்

இலங்கையின் முஸ்லிம் தனியார் சட்டங்கள் தொடர்பாக கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டமொன்று நேற்று முன்தினம் (20) புத்தளம் கொழும்பு முகத்திடலில் இடம்பெற்றது.

புத்தளத்தில் உள்ள மகளிர் அமைப்புக்களின் பிரதிநிதிகள், பெண்கள், யுவதிகள் என 06

இலங்கைக்கு கடத்த தயாராக இருந்த நிலையில்

30 கோடி ரூபா பெறுமதியான போதைப்பொருளுடன் எண்மர்

தூத்துக்குடியில் கியூ பிரிவு பொலிஸாரால் கைது

இந்தியாவின் தூத்துக்குடியிலிருந்து இலங்கைக்கு கடத்த முயன்ற 30 கோடி ரூபாய் மதிப்புள்ள போதைப் பொருளை தமிழக கியூ பிரிவு பொலிஸார் பறிமுதல் செய்துள்ளனர். 06

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறிய

இந்திய மீனவர் 21 பேருக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறை

10 ஆண்டுகளுக்கு 03 வருட மறியல்

யாழ். விசேட நிருபர்

கடந்த 31ஆம் திகதி பருத்தித்துறை கடற்பரப்பிற்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடித்த 21 இந்திய மீனவர்களை பருத்தித்துறை மீனவர்கள் சுற்றிவளைத்து பிடித்தனர்.

பருத்தித்துறை மீனவர்களிடம் இருந்து இந்திய மீனவர்களை மீட்ட கடற்படை அவர்களை கைது செய்து பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் 06

விக்கல் வீராச்சாமி

SD சிவநாயகம் அய்யாவின்ட முத்திரை வெளியீட்டுக்கு வந்த இரண்டு கட்சிகளினதும் தலைவர்கள் ஆனந்தக் கண்ணீர் சொரிந்தனராமே....

தாங்க கொண்டுவந்த நல்லாட்சியில பவரா இருந்தும்கூட இப்படியானது செய்யாம இருந்து விட்டோமே எண்டு யோசிச்சு இருப்பாங்களோ...!!!

2 ஆண்டுகளுக்குப் பின் ஆஸி. எல்லை திறப்பு

அவுஸ்திரேலியா இரண்டு ஆண்டுகளில் முதல் முறையாக சர்வதேச எல்லையை திறந்துள்ளது. இது மகிழ்ச்சியான குடும்ப ஒன்றிணைவுகள் மற்றும் சுற்றுலா பயணங்களுக்கு ஊக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

கொரோனா தொற்று காரணமாக உலகின் கடுமையான பயணக் கட்டுப்பாடுகளில் ஒன்றாக அவுஸ்திரேலிய 2020 மார்ச் மாதம் எல்லையை மூடியது.

அவுஸ்திரேலியர்கள் மற்றும் மேலும் சிலருக்கு கடந்த ஆண்டு பிற்பகுதியில் அவுஸ்திரேலியா அனுமதி அளித்தபோதும் பெரும்பாலான வெளிநாட்டவர்கள் தொடர்ந்து காத்திருக்க வேண்டி ஏற்பட்டது.

இந்நிலையில் நேற்று திங்கட்கிழமை நூற்றுக்கணக்கானோர் விமானங்களில் வந்த நிலையில் சிட்னி விமானநிலையத்தில் கண்ணீருடன் கூடிய ஒன்றிணைவுகளை காணமுடிந்தது. இதில் இரு முறை தடுப்பூசி பெற்றவர்கள் தனிமைப்படுத்த வேண்டிய தேவை இல்லை என்ற போதும் தடுப்பூசி பெறாத பயணிகள் 14 நாட்கள் சொந்த செலவில் ஹொட்டல் ஒன்றில் தனிமைப்படுத்திக்கொள்ள வேண்டும்.

அவுராத் பேரணி: பாக். மத விவகார அமைச்சர் கடிதம்

சர்வதேச பெண்கள் தினத்தின் வருடாந்த அவுராத் பேரணியில் இஸ்லாமிய எதிர்ப்பு கோசங்களை அனுமதிக்கக் கூடாது என்று மத விவகாரங்கள் மற்றும் மதங்களுக்கு இடையிலான நல்லிணக்க அமைச்சர் நூருல் ஹக் கத்ரி, பாகிஸ்தான் அரசை வலியுத்தியுள்ளார்.

மதச் சுதந்திரம் பற்றிய நெருக்கடிகள் தொடர்பில் அவதானம் செலுத்தி சர்வதேச பெண்கள் தினமான மார்ச் 8 ஆம் திகதியை 'சர்வதேச ஹிஜாப் தினமாக' அடையாளப்படுத்தும்படி இம்ரான் கான் அரசை அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

"அவர்களின் சுவரொட்டிகள், பதாகைகள், கோசங்கள் உள்ளூர் சமூகம், அரசியல் மற்றும் மத விதிமுறைகளுடன் பொருந்தாததாக, முஸ்லிம்கள் முகம்கொடுக்கும் பிரச்சினைகளை அவர்கள் முற்றாக புறக்கணிக்கின்றனர்" என்று இம்ரான் கான் அரசுக்கு எழுதியுள்ள கடிதத்தில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ரொஹிங்கிய படுகொலை விசாரணைகள் ஆரம்பம்

சர்வதேச நீதிமன்றத்தில் மியன்மார் மீது தொடுக்கப்பட்டுள்ள வழக்கின் விசாரணை நேற்று மீண்டும் ஆரம்பமானது.

ரொஹிங்கிய முஸ்லிம் சமூகத்துக்கு எதிராக, மியன்மார் இராணுவம் படுகொலை நடத்தியதா என்பதைத் தீர்மானிக்க, தனக்கு அதிகாரம் உள்ளதா என்பதை முடிவெடுக்க சர்வதேச நீதிமன்றம் விசாரணை நடத்தும்.

மியன்மார் இராணுவமும் நாடு கடத்தப்பட்ட தலைவர்களும் அந்த விசாரணையில் கலந்துகொள்வதற்குத் தங்களுக்கு வாய்ப்பு கிடைக்கும் என எதிர்பார்க்கின்றனர்.

சர்வதேச செய்திகள்

புட்டினுடனான சந்திப்பு: பைடன் கொள்கை அளவில் இணக்கம்

உக்ரைன் பிரச்சினை குறித்து பேச்சுவார்த்தைக்கு ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினுடன் உச்சிமாநாடு ஒன்றை நடத்த அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் கொள்கை அளவில் ஒப்புக்கொண்டுள்ளார்.

ரஷ்யா அண்டை நாட்டின் மீது தாக்குதல் நடத்தாது என்ற நிலையில் மாத்திரமே பிரான்ஸ் பரிந்துரைத்திருக்கும் இந்த உச்சிமாநாடு இடம்பெறும் என்று வெள்ளை மாளிகை தெரிவித்தது.

ஐரோப்பாவில் கடந்த பல தசாப்தங்களில் ஏற்பட்டிருக்கும் மிக மோசமான பாதுகாப்பு பிரச்சினைக்கு இந்த சந்திப்பு இராஜதந்திர ரீதியில் தீர்வொன்றை எட்டுவதற்கு சாத்தியத்தை ஏற்படுத்தியுள்ளது.

உக்ரைன் மீது இராணுவ நடவடிக்கை ஒன்றுக்கு ரஷ்யா தயாராகி இருப்பதாக அமெரிக்க அதிகாரிகள் கூறியபோதும் ரஷ்யா அதனை மறுத்துள்ளது.

ஜோ பைடனுடன் சுமார் மூன்று மணி நேரம் தொலைபேசியில் உரையாற்றிய பிரான்ஸ் ஜனாதிபதி எம்மானுவேல் மெக்ரோன் இந்த பரிந்துரையை முன்வைத்திருந்தார்.

வரும் வியாழக்கிழமை இடம்பெறவுள்ள அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் அன்டனி பிளிங்கன் மற்றும் ரஷ்ய வெளியுறவு அமைச்சர் செர்கெய் லவ்ரொவ் இடையிலான சந்திப்பில் இந்த மாநாடு பற்றிய விபரங்கள் பேசப்படும் என்று மெக்ரோன் அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.

அமெரிக்காவின் கணிப்பின்படி உக்ரைன் எல்லைக்கு அருகில் 150,000க்கும் அதிகமான ரஷ்ய துருப்புகள் குவிக்கப்பட்டிருப்பதாக கூறப்படுகிறது.

இதன்போது ரஷ்யா மற்றும் உக்ரைன் நெருக்கடி விவகாரத்தில், 'இராஜதந்திர முறையிலான தீர்வுக்கு முக்கியத்துவம் அளிக்க' ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் சம்மதம் தெரிவித்துள்ளதாக, பிரான்ஸ் தெரிவித்துள்ளது.

மேலும், வரும் நாட்களில் உக்ரைன் – ரஷ்யா இருநாட்டு வெளியுறவு அமைச்சர்களும் சந்திப்பு நடத்த புட்டின் ஒப்புக்கொண்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த உரையாடல் குறித்து மொஸ்கோ தரப்பு கூறுகையில், பதற்றத்தை அதிகரித்ததாக, உக்ரைன் இராணுவம் மீது புட்டின் குற்றம்சாட்டியதாக தெரிவித்துள்ளது.

நைஜீரிய வான் தாக்குதலில் நைகரில் ஏழு சிறுவர்கள் பலி

நைஜீரிய இராணுவம் கொள்ளைக்காரர்களை இலக்கு வைத்து தெற்கு நைகரில் வழி தவறி நடத்திய வான் தாக்குதலில் ஏழு சிறுவர்கள் கொல்லப்பட்டு மேலும் ஐவர் காயமடைந்துள்ளனர்.

"எல்லையில் நைஜீரியர்களின் தாக்குதல்களில் ஒரு தவறு இடம்பெற்றுள்ளது. இதனால் எமது நிலப்பகுதியின் நசன்டே கிராமம் பாதிக்கப்பட்டுள்ளது" என்று நைஜீரியாவுக்கு நெருக்கமான மராடி பிராந்திய ஆளுநர் சைபு அபூபக்கர் தெரிவித்துள்ளார்.

இந்த சம்பவம் குறித்து விசாரணை ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக நைஜீரிய அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

பாதிக்கப்பட்டவர்களின் பெற்றோர் நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்றிருந்த நேரம் அந்த சிறுவர்கள் விளையாடிக் கொண்டிருந்தபோதே அவர்கள் தாக்கப்பட்டிருக்கிறார்கள் என்று அபூபக்கர் தெரிவித்துள்ளார்.

பிராந்தியத்தில் இடம்பெறும் கொலை மற்றும் கடத்தல் சம்பவங்களுடன் தொடர்புபட்ட கொள்ளைக்காரர்கள் என அழைக்கப்படும் ஆயுதக் கும்பல்களுக்கு எதிராக நைகர் மற்றும் நைஜீரியா இரு நாடுகளும் கூட்டு இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அமெரிக்க நிதிக்கு எதிராக நேபாளத்தில் ஆர்ப்பாட்டம்

அமெரிக்காவின் 500 மில்லியன் டொலர் நிதி உதவிக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேபாளத்தில் நூற்றுக்கணக்கானோர் நடத்திய ஆர்ப்பாட்டத்தின் மீது பொலிஸார் கண்ணீர் புகைப்பிரயோகம் மேற்கொண்டதோடு இறப்பர் குண்டுகளை பயன்படுத்தினர்.

நேபாளம் 2017 இல் அமெரிக்காவுடன் உட்கட்டமைப்பு நிதி தொடர்பான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டதோடு இது இரு நாடுகளுக்கும் இடையே சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. தலைநகர் காத்மண்டுவில் பாராளுமன்றத்திற்கு வெளியே கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஆர்ப்பாட்டங்களில் பலர் காயமடைந்துள்ளனர். இந்த நிதி நேபாளத்தின் இறையாண்மையை பாதிப்பதாக இதற்கு எதிர்ப்புத் தெரிவிப்போர் குறிப்பிட்டுள்ளனர்.

ஆர்ப்பாட்டக்காரர்களை கலைக்க பொலிஸார் தண்ணீர் பீச்சி அடித்ததோடு ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது கற்களாலும் வீசி எறிந்தனர்.

இந்த ஒப்பந்தத்திற்கு ஒப்புதல் அளிக்க பாராளுமன்றத்திற்கு பெப்ரவரி 28 ஆம் திகதி வரை அவகாசம் இருக்கும் நிலையில், ஆளும் கூட்டணி உட்பட அரசியல் கட்சிகளிடையே இந்த ஒப்பந்தம் பற்றி பிளவு நீடிப்பது இது தாமதிப்பதற்கு காரணமாகியுள்ளது.

தினகரன் வர்த்தக உலா

எம்.எஸ். பாஹிம் E-mail: businesstkn@gmail.com

வாடிக்கையாளர் சேவைச் சிறப்பில் தனது முதல் ஸ்தானத்தை செலான் வங்கி மீள உறுதிசெய்தது

தொடர்ச்சியான 3ஆவது வருடமாகவும் புகழ்பெற்ற LMD சஞ்சிகையின் நுகர்வோர் கருத்துக் கணிப்பின் பிரகாரம் தரப்படுத்தப்பட்டுள்ளது.

அன்புடன் அரவணைக்கும் வங்கி, செலான் வங்கி, தொடர்ச்சியானமூன்றாவது வருடமாகவும் இலங்கையின் வங்கியியல் மற்றும் நிதியியல் துறையில் சிறந்த வாடிக்கையாளர் சேவைச் சிறப்பு என்பதில் முதலாம் ஸ்தானத்தை உறுதிசெய்துள்ளது.

ஆரம்பம் முதல், செலான்வங்கி தனது வியாபார மாதிரியில் முக்கிய மற்றும் மிகவும் பெறுமதி வாய்ந்த அங்கமாக வாடிக்கையாளர்களைக் கருதுகின்றது. கூட்டாண்மை நிறுவனம் எனும் வகையில் கடந்த இரண்டு வருடகாலப்பகுதியில் கொவிட்19 தொற்றுப் பரவல்காரணமாக, மிகவும் சவால்கள் நிறைந்த காலப்பகுதிக்கு முகங்கொடுத்திருந்த போதிலும், சேவை மேம்படுத்தல்கள் மற்றும் மெருகேற்றங்களினூடாக வாடிக்கையாளர்களுக்கு சௌகரியமான மற்றும் பாதுகாப்பான சேவைகளை வழங்குவதில் தன்னைமுழுமையாக அர்ப்பணித்துள்ளது.

வாடிக்கையாளர்கள் மீது செலான் வங்கி கொண்டுள்ள அர்ப்பணிப்புக்கு மேலும் எடுத்துக்காட்டாக இந்த கௌரவிப்புஅமைந்துள்ளது.

செலான்வங்கியின்பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமானகபிலஆரியரட்னகருத்துத்தெரிவிக்கையில், "தொடர்ச்சியாக மூன்று வருடங்களாக இலங்கையில் காணப்படும் சிறந்த வாடிக்கையாளர் சேவைச் சிறப்புக்கான முதல்தர வங்கி எனும் ஸ்தானத்தைப் பெற்றுக்கொண்டுள்ளமை எமக்கு மிகவும் பெருமையளிக்கின்றது. சேவைமட்டங்களில் சிறப்பை உறுதி செய்வது என்பது மிகவும் சவால்கள் நிறைந்த காரியமாகும். எவ்வாறாயினும், வாடிக்கையாளர்களை மையப்படுத்தி வியாபாரச் செயற்பாடுகளை செலான்வங்கி முன்னெடுத்திருந்ததுடன், எமது வலையமைப்பைச் சேர்ந்த ஊழியர்களும் தமது வழமையான செயற்பாடுகளுக்கு அப்பால்சென்று, எமது சகல வாடிக்கையாளர்களினதும் தேவைகளை நிவர்த்தி செய்வதில் கவனம் செலுத்தியிருந்தனர் " என்றார்.

குருநாகலில் ரியல் எஸ்டேட் முதலீட்டிற்கான புதிய வழிமுறைகளைத் திறந்துவைக்கும் CBH Lands

குருநாகல் நகரமானது, புதிய தொழில் நுட்பம், வாடகை வீடுகளில் வாழும்மக்களின்நடவடிக்கைகளில் ஏற்பட்டுள்ள புதிய மாற்றங்கள் மற்றும் கூடுதல் வசதி என்பன தீவிர வளர்ச்சி கண்டு வருகின்றன. இது, மீரிகம முதல் குருநாகல் வரையான மத்திய அதிவேக நெடுஞ்சாலையின் இரண்டாம் கட்டப் பூர்த்தியுடன், மேலும் வலுவடைந்துள்ளது. இதன் மூலம் இப்பகுதிக்கு பெருமளவு போக்குவரத்து வசதிகளும் கிடைத்து வருகின்றன.

அதிவேக நெடுஞ்சாலைகளுக்கு அருகாமையில் இயற்கையாகவே அமைந்திருக்கும் சொத்துக்கள்,மிகத் துரிதமான விலைஉயர்வை உணர்கின்றன. அந்தவகையில், குருநாகலில் ரியல்எஸ்டேட் சொத்துக்களில் முதலீடு செய்வது முதல்படியாகக் காணப்படுகின்றது.

குருநாகல் நகர்அடைந்துவரும் வளர்ச்சியை CBH Lands நிறுவனம் நன்கு அடையாளம் கண்டுள்ளது. எனவே, அதுதற்போது பெருமளவு முதலீடுகளை மேற்கொண்டு வருகிறது. அதிகரித்து வரும் கேள்விகளுக்கும், விலைகளுக்கும் ஏற்றவகையில் முதலீட்டாளர்களுக்கு வழிவகுக்க CBH Lands நிறுவனம் உட்கட்டமைப்பு அபிவிருத்தி வசதிகளை இங்கு முன்கூட்டியே ஆரம்பித்துள்ளது. CBH Lands நிறுவனத்தின்தலைவர்யட்டில விஜேமான்ன, ரியல் எஸ்டேட் சொத்துக்களில் முதலீடு செய்வதன் மூலம் கிடைக்கும் இலாபம் மற்றும் அனுகூலங்கள் பற்றி விளக்கிக் கூறினார்.

தற்போது நிலவிவரும் குறைந்த வட்டிவீதங்கள்காரணமாக, வங்கிகளில் வைக்கப்பட்டுள்ள பணத்திற்கு பாதகமான இலாபங்களே கிடைத்து வருகின்றன. ரியல் எஸ்டேட் சொத்துக்களில் சரியாக முதலீடு செய்வதால் அதிகூடிய பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்ளலாம். என்று கூறினார்.

இலங்கையில் புதிய சாதனங்களை அறிமுகப்படுத்தியுள்ள Huawei

உலகளாவிய புத்தாக்க ஸ்மார்ட்போன் உற்பத்தியாளரும், நம்பர் வன் ஸ்மார்ட்போன் வர்த்தக நாமமுமான Huawei, அதன் புத்தம் புதிய Nova 8i கையடக்கத் தொலைபேசியுடன் மேலும் பல புத்தாக்க சாதனங்களை அறிமுகப்படுத்தியுள்ளது.

இது தொடர்பில் Huawei யின் இலங்கைக்கான முகாமையாளர் Chris Cai, கருத்துத் தெரிவிக்கையில், "இந்த ஸ்மார்ட்போனை இலங்கைச் சந்தையில் அறிமுகப்படுத்துவதில் மகிழ்ச்சியடைகிறோம். புத்திசாலித்தனம், இணையற்ற மின்கல ஆயுள், பலம் வாய்ந்த கெமரா செயல்திறன் ஆகிய உயரிய அம்சங்களுடன், நிறைவான வாழ்க்கையை அனுபவிக்க இது அவர்களுக்கு உதவும்." என்றார்.

Nova தொடரில், 6.67 அங்குல விளிம்பற்ற Huawei edgeless திரை, 8GB RAM + 128GB உள்ளக நினைவகம், 64MP பிரதான கெமரா, 8MP அல்ட்ராவைட்ஆங்கிள் கெமரா, 2MP மெக்ரோ கெமரா, 2MP depth கெமரா ஆகிய AI குவாட் (நான்கு) கெமரா அமைப்பானது, அனைத்து சிறந்த தருணங்களையும் தெளிவாகப் படம்பிடிக்க உதவுகின்றது.

Huawei Nova 8i ஆனது noisereducing algorithm கட்டமைப்பு மூலம் எவ்வேளையிலும் அழகான இரவுக் காட்சிகளைப் படம்பிடிக்க உதவுகிறது.

4,300mAh பாரிய மின்கலமானது, மின்கல சேமிப்பு AI அல்கரிதம் செயற்பாடுடன் தொடர்பை பேணி, ஒரு நாள் முழுவதும் நீடித்த மின்கலத்தை வழங்குகிறது. புதிய Huawei Nova 8i உடன், Huawei Watch GT 3 மற்றும் Huawei MateBook D 15 போன்ற புதிய தயாரிப்புகளும் இதனுடன் இணைந்தவாறு அறிமுகப்படுத்தப்படுகிறது.

Huawei Nova 8i ஆனது வெள்ளி (Moonlight Silver), நீலம் (Interstellar Blue), கறுப்பு (Starry Black) ஆகிய மூன்று நிறங்களில் வருகிறது.

மிகச் சிறந்த சேவை வழங்கும் வியாபார குறியீடாக செலிங்கோ லைஃப் தெரிவு

இலங்கையின் கீர்த்திமிக்க சந்தைப்படுத்தல் நிறுவனம் நடத்திய மிகச் சிறந்த செயற்பாடுகளுக்கான Excellence Awards விருது வழங்கும் விழாவில் செலிங்கோ லைஃப் நிறுவனத்துக்கு மிகச் சிறந்த சேவை வழங்குனர் விருது வழங்கப்பட்டுள்ளது. சகல பிரிவுகளுக்குமான மிகச் சிறந்த சேவை விருது என்ற உச்சத்தை செலிங்கோ லைஃப் தொட்டுள்ளது. அத்தோடு கோலாகலமான இந்நிகழ்வில் வழங்கப்பட்ட மிகச் சிறந்த ஐந்து விருதுகளில் ஒன்றையும் அது வென்றுள்ளது. இலங்கையின் ஆயுள் காப்புறுதித் தலைவர் எட்டு விஷேட விருதுகள் பிரிவில் இரண்டு தங்கம் விருதுகளையும் வென்றுள்ளது. 'மிகச்சிறந்த புதிய வியாபார குறியீட்டு நாமம்' என்ற விருதை தனது ஓய்வூதிய சேமிப்புத் திட்டத்துக்காக செலிங்கோ லைஃப் வென்றுள்ளது.

வருடத்தின் மிகச் சிறந்த கூட்டாண்மை சமூகப் பொறுப்பு வியாபார குறியீட்டு நாமம் பிரிவில் வெள்ளி விருதையும், வென்றுள்ளதன் மூலம் 2021ன் மதிப்பு மிக்க மூன்று விருதுகள் வெல்லப்பட்டுள்ளன.

மிகச் சிறந்த கூட்டாண்மை சமூகப் பொறுப்பு வர்த்தக முத்திரை விருதை செலிங்கோ லைஃப் தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக வென்றுள்ளது.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

தினகரன்
THINAKARAN
தினகரன்

2022 பெப்ரவரி 22 செவ்வாய்க்கிழமை

தொழுகை நேரம்
18 முதல் 24 வரை

சுபஹ்	05.11
லுஹர்	12.26
அஸர்	03.47
மஃரிப்	06.22
இஷா	07.33

இன்றைய சுபதினம்
பிலவ வருடம் மாசி 10

ராகுகாலம் : பகல் : 03.00 - 04.30வரை
சுபநேரம் : காலை : 07.30 - 09.00வரை

யோகம்: சித்தமரண யோகம்
திதி: சஷ்டி

இராசி பலன்கள்

மேஷம்	வெற்றி
ரிஷபம்	பாராட்டு
மிதுனம்	தனம்
கடகம்	போட்டி
சிம்மம்	கோபம்
கன்னி	சுகம்
துலாம்	நன்மை
விருச்சிகம்	நிறைவு
தனுசு	மறதி
மகரம்	பொறுமை
கும்பம்	செலவு
மீனம்	முயற்சி

கலாநிதி இராமச்சந்திரகுருக்கள்
(பாபு சர்மா)

பாதுகாப்புச் சட்டங்கள் தொடர்பில்

சிங்கப்பூரின் நிபுணத்துவத்தை பெறுவதற்கு இலங்கை நாடல்

அமைச்சர் அலி சப்ரி – சண்முகத்துடன் பேச்சு

இலங்கையின் தேசிய பாதுகாப்பு தொடர்பான சட்டங்களை தயாரிப்பதில் சிங்கப்பூரின் நிபுணத்துவத்தை அரசாங்கம் நாடியுள்ளது.

தற்போதுள்ள பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவதற்கான உள்ளூர் மற்றும் சர்வதேச அழுத்தத்திற்கு மத்தியில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சிங்கப்பூர் உள்துறை அமைச்சர் கே.சண்முகத்தின் அழைப்பின் பேரில், சிங்கப்பூருக்கு ஐந்து நாள் உத்தியோகப்பூர்வ விஜயம் மேற்கொண்டிருந்த நீதியமைச்சர் அலி சப்ரி, மேற்படி விடயம் தொடர்பில் உள்துறை அமைச்சருடன் கலந்துரையாடியதாக நீதியமைச்சு வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இலங்கையின் சட்டச் சூழலைப் பற்றிய புரிதலைப் பெற்றுக்கொள்ள சிங்கப்பூரிலிருந்து அதிகாரிகள் 06

பிரதமர் தலைமையில்

வெளிநாட்டிலுள்ள இலங்கை தொழில் நிபுணர்களின் வலையமைப்பு உதயம்

இலங்கையின் தேசிய அபிவிருத்திக்காக தேசிய அறிவியல் அறக்கட்டளையை(NSF) அடிப்படையாகக் கொண்ட வெளிநாட்டிலுள்ள இலங்கை தொழில் நிபுணர்களின் வலையமைப்பு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் நேற்று (21) முற்பகல் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது.

அறிவியல் தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கத் துறையின் சர்வதேச ஒத்துழைப்பை தேசிய வளர்ச்சிக்கு பங்களிக்கச் செய்யும் வகையில் தேசிய அறிவியல் அறக்கட்டளையினால் இது அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. உலகம் முழுவதும் உள்ள 950க்கும் மேற்பட்ட இலங்கையர்கள் தற்போது இந்த வலையமைப்புடன் இணைந்துள்ளனர்.

நாட்டின் அபிவிருத்திக்கு பங்களிக்க ஆர்வமுள்ள கல்வி, ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனங்கள் மற்றும் கைத்தொழில் துறையில் உயர் பதவிகளை வகிக்கும் வெளிநாட்டிலுள்ள இலங்கையின் புகழ்பெற்ற விஞ்ஞானிகள் 06

தேர்தல் சட்ட திருத்தம் குறித்து விசேட குழு இவ்வாரம் ஆராய்வு

அமைச்சுசார் ஆலோசணைக்குழுக்கள் உள்ளிட்ட பல பாராளுமன்றக் குழுக்கள் இவ்வாரம் கூடவுள்ளன.

அதற்கமைய, தேர்தல் சட்டங்கள் மற்றும் தேர்தல் முறைமை தொடர்பாகப் பொருத்தமான சீர்திருத்தங்களை அடையாளங் காண்பதற்கும் தேவையான திருத்தங்களைப் பரிந்துரைப்பதற்குமான பாராளுமன்ற விசேட குழு 24 ஆம் திகதி கூடவுள்ளது.

மேலும், இன்று (22) வலுசக்தி அமைச்சுசார் ஆலோசனைக்குழு, விவசாய அமைச்சுசார் ஆலோசனைக்குழு, வனசீவராசிகள் மற்றும் வனப்பாதுகாப்பு அமைச்சுசார் ஆலோசனைக்குழு என்பன கூடவுள்ளன. நாளை (23) தொழில் அமைச்சுசார் ஆலோசனைக்குழு மற்றும் காணி அமைச்சுசார் ஆலோசனைக்குழு என்பன கூடவுள்ளன.

இதேவேளை, பெண் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றியத்தின் கூட்டமும் இன்று (22) நடைபெறவுள்ளது.

பாராளுமன்றம் இன்று முதல் 25 ஆம் திகதி வரை கூட உள்ளது. (பா)

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகரவுக்கும் துருக்கிய தூதுவர் ரெகிபா டெமெட் செகெர்சியோகுலுவுக்கும் இடையிலான சந்திப்பு அமைச்சில் நடைபெற்றபோது.

மூத்த ஊடகவியலாளர் கமல் லியனாராச்சி காலமானார்!

மூத்த ஊடகவியலாளர் கமல் லியனாராச்சி நேற்று முன்தினம் மாலை காலமானார். இவர் இலங்கையின் பத்திரிகை முறைப் பாட்டு ஆணைக் குழுவின் பிரதித் தலைவராகப் பணியாற்றியுள்ளார். இவர் இதற்கு முன்னர் லக்பிம நாளிதழில் உட்பட பல பத்திரிகைகளில் பணியாற்றிய சிரேஷ்ட ஊடகவியலாளர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இராஜாங்க அமைச்சர் லன்சா சபையில் விசேட அறிவிப்பு

இராஜினாமா செய்ய திட்டம் ?

தனது அமைச்சுப் பதவியில் இருந்து ஒதுங்கியுள்ள இராஜாங்க அமைச்சர் நிமல் லான்சா, இன்று அல்லது நாளை பாராளுமன்றத்தில் அறிக்கையொன்றை வெளியிட உள்ளதாக அறிய வருகிறது. அமைச்சுப் பதவியிலிருந்து விலகுவதற்கான காரணங்களையும் எதிர்கால நடவடிக்கைகளையும் அவர் முன்வைப்பார் எனத் தெரிய வருகிறது.

இராஜாங்க அமைச்சர் நிமல் லான்சாவும் அமைச்சுப் பதவியை விட்டு விலகுவதற்கான காரணங்களை தெரிவித்து ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்புவதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

நெடுஞ்சாலை ராஜாங்க அமைச்சராக செயற்படும் லன்சாவுக்கும் மற்றொரு ராஜாங்க அமைச்சரான 06

வரிச்சலுகை வழங்காவிடின் எரிபொருள் விலை அதிகரிப்பு

தவிர்க்க முடியாது என்கிறார் உதய கம்மன்பில

நிதியமைச்சினால் எரிபொருளுக்கு வரிச்சலுகை வழங்கப்படாவிட்டால் மீண்டும் எரிபொருள் விலையினை அதிகரிக்க வேண்டிய தேவையேற்படும் என வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

ஹங்வெல்ல பகுதியில் நேற்று முன்தினம் (20) இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர், அந்நிய செலாவணி பிரச்சினையினால் நாடு பாரிய நிதி நெருக்கடியை எதிர்கொண்டுள்ளதாக குறிப்பிட்டார். குறிப்பாக எரிபொருள் கொள்வனவின் போது, அரசாங்கத்தினால் வரிச்சலுகை வழங்கப்பட வேண்டும். அதிக விலைக்கு கொள்வனவு செய்து, குறைந்த விலையிலேயே நாட்டில் எரிபொருளை விநியோகித்து வருகின்றோம்.

இதனால், மீண்டும் எரிபொருள் கொள்வனவுக்கான நிதி கையிருப்பில் இல்லாது போகும். எனவே, அரசாங்கம் வரிச்சலுகை வழங்காவிட்டால் எதிர்காலத்தில் ஒரு லீற்றர் டீசல் 52 ரூபாவாலும், ஒரு லீற்றர் பெற்றோல் 19 ரூபாவாலும் அதிகரிக்கக்கூடும் என வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

தினக்குரல் உதவி ஆசிரியரின் தந்தை காலமானார்

தினக்குரல் உதவி ஆசிரியர் எம்.எச்.எப். ஹுஸ்னாவின் தந்தையார் ஷெய்குல் இஹ்ஸான் எம்.இஸட். எம். ஹுஸைன் மௌலவி காலமானார். இஹ்ஸானிய்யா அரபுக் கல்லூரியின் மிக நீண்ட கால அதிபராக கடமையாற்றிய அன்னார், இரு ஆண் பிள்ளைகள் மற்றும் நான்கு பெண் பிள்ளைகளின் தந்தை ஆவார். இவர் ஊடகவியலாளர் ஜெம்ஸித் அஸீஸின் மாமனார் என்பதும் குறிப்பிடத்தக்கது. திஹாரியில் வைக்கப்பட்டிருந்த அன்னாரின் ஜனாஸா நேற்று (21) மாலை நல்லடக்கம் செய்யப்பட்டது.

மட்டு., கொழும்பு ரயிலில் மோதி பெண் ஒருவர் பலி

மட்டக்களப்பிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்று கொண்டிருந்த ரயிலினால் சந்திவெளி பகுதியில் வைத்து பெண் ஒருவர் மோதி உயிரிழந்துள்ளதாக சந்திவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த பெண் தொடர்பான விபரங்கள் இதுவரை கிடைக்கப்பெறவில்லை என்றும் குறித்த பெண் 40 வயது மதிக்கத்தக்கவர் என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். சடலம் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

பாரம்பரியம் நிகழ்ச்சியில் சுஜாதா அத்தநாயக்க

பாரம்பரியம் நிகழ்ச்சி தொடரில் ஓர் திருப்பு முனை

இது வரை முஸ்லிம் சேவைக்கு வளம் சேர்த்தோர் வரிசையில் முஸ்லிம் கலைஞர்களை மட்டுமே செவ்வி கண்டுவந்த "பாரம்பரியம்" நிகழ்ச்சியில், முஸ்லிம் அல்லாதோர் முஸ்லிம் நிகழ்ச்சிகளுக்கு வழங்கிய பங்களிப்புகளையும் நேயர்களோடு பகிர்ந்து கொள்ளும் நோக்கில் எதிர்வரும் மார்ச் 1 ஆம் திகதி (01.03.2022) செவ்வாய் இரவு 8.15 மணியளவில் இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபன முஸ்லிம் சேவையில், ஒலிபரப்பாகும் "பாரம்பரியம்" நிகழ்ச்சியில், சிங்கள திரை உலகின் பிரபல பின்னணிப் பாடகியும் முஸ்லிம் சேவைக்காக பல இஸ்லாமிய கீதங்கள் பாடிய வருமான, 06

கொழும்பு மாநகர முதல்வர் திருமதி ரோசி சேனாநாயக்க மற்றும் உதவி மாநகர முதல்வர் எம்.ஐ.எம். இக்பால் தலைமையிலான மாநகர சபை உறுப்பினர்கள் அடங்கிய அணியினர் நல்லெண்ண விஜயம் ஒன்றை மேற்கொண்டு யாழ். நகரக்கு விஜயம் செய்த போது, அங்கு வரவேற்பு அளிக்கப்படுவதை படத்தில் காணலாம்.

கலைஞர் மொழிவாணன் நெறியாள்கையில் "காணொளியில் கடி ஜோக்ஸ்"

இலங்கையில் ஜன ரஞ்சக எழுத்தாளர் கலாபூஷணம் கலைஞர் மொழிவாணனின் நெறியாள்கையில் புதிய முயற்சியாக "காணொளியில் கடி ஜோக்ஸ்" என்னும் இறுவட்டு (DVD) வெளியீட்டு விழா எதிர்வரும் மார்ச் மாதம் 06ம் திகதி கொட்டாஞ்சேனை வீதி ஐங்கரன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

புனித மிஃராஜ் தின நிகழ்வு

புனித மிஃராஜ் தின நிகழ்வுகள் எதிர்வரும் (28) திங்கட்கிழமை இரவு வெள்ளவத்தை ஜும்ஆப் பள்ளிவாசலில் இடம்பெறவுள்ளது. முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் கொழும்பு வெள்ளவத்தை ஜும்ஆப் பள்ளிவாசலுடன் இணைந்து இந்நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளது.

முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் இப்ராஹீம் அன்சார் தலைமையில் நடைபெறவுள்ள மேற்படி நிகழ்வில் நீதி அமைச்சரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான அலி சப்ரி பிரதம அதிதியாகவும் ஊவா மாகாண ஆளுநர் ஏ. ஜே. எம். முஸம்மில், பாராளுமன்ற உறுப்பினர்களான மர்ஜான் பளீல், காதர் மஸ்தான் ஆகியோர் கௌரவ அதிதியாகவும் கலந்து சிறப்பிப்பர்.

இந்நிகழ்வில், அரச உயர் அதிகாரிகள், வர்த்தகப் பிரமுகர்கள் மற்றும் உலமாக்கள், ஜமாஅத்தார்கள் எனப்பலரும் கலந்து சிறப்பிக்கவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் சார்பில் அஷ்ஷெய்க் முப்தி முர்ஸி தெரிவித்தார்.

மருத்துவ கழிவுகள் அடங்கிய இறுதி

45 கொள்கலன்கள் நேற்று திருப்பி அனுப்பப்பட்டன

இங்கிலாந்தில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட கழிவு கொள்கலன்களின் கடைசி 45 கொள்கலன் தொகுதி நேற்று (21) மீள் ஏற்றுமதி செய்யப்பட்டது.

இலங்கை சுங்கத்தின் மேற்பார்வையில் 45 கொள்கலன்கள் மீள் ஏற்றுமதி செய்யப்பட்டன.

2017 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் இலங்கைக்கு அனுப்பப்பட்ட கொள்கலன்கள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சுங்கப் பணிப்பாளர் நாயகம் ஓய்வு பெற் மேஜர் ஜெனரல் விஜித ரவிப்பிரிய தெரிவித்துள்ளார்.

இந்த கொள்கலன்கள் அனைத்தையும் மீள் ஏற்றுமதி செய்வதற்கு மத்திய சுற்றாடல் அதிகார சபை மற்றும் சுற்றாடல் அமைச்சு உட்பட பல தரப்பினரும் உதவியதாக அவர் கூறினார். இங்கிலாந்தில் இருந்து இலங்கைக்கு மருத்துவ கழிவுகள் கொண்டுவரப்பட்ட 242 கொள்கலன்களில் 06

கொலையில் முடிந்த வாய்த்தர்க்கம்

இரத்மலானையில் சம்பவம்

இரத்மலானை பகுதியில் கூரிய ஆயுதத்தால் தாக்கி ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார். இருவரிடையே ஏற்பட்ட தகராறு வலுப்பெற்றமையால் இந்த கொலை இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் கூறினர்.

மொறட்டுவை பகுதியை சேர்ந்த 43 வயதான ஒருவரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார். கொலையுடன் தொடர்புடைய நபர் அடையாளம் காணப்பட்டுள்ள போதிலும், 06

நாணய மாற்று

	வாங்கும் விலை	விற்பனை விலை
அவுஸ்திரேலியா டொலர்	141.83	147.84
கனடியன் டொலர்	153.64	159.49
யூரோ	223.85	232.67
ஜப்பான் யென்	1.7190	1.7840
சிங்கப்பூர் டொலர்	146.13	150.84
ஸ்டேலிங் பவுன்ஸ்	265.27	273.66
சுவிஸ் பிராங்க்	215.03	222.69
அமெரிக்க டொலர்	198.50	202.99

மத்திய கிழக்கு	குறித்த விலை		குறித்த விலை
பஹ்ரின் டினார்	533.10	கட்டார் ரியால்	55.20
குவைத் டினார்	664.02	சவூதி ரியால்	53.51
ஓமான் ரியால்	522.07	ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம்	54.72

தினகரன்
THINAKARAN
திகைரன்

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

பிலவ வருடம் மாசி மாதம் 10ம் நாள் செவ்வாய்க்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1443 ரஜப் பிறை 20

குறள் தரும் சிந்தனை

வினைக்குரிமை நாடிய பின்றை அவனை
அதற்குரிய னாகச் செயல்

ஒரு செயலில் ஈடுபடுவதற்கு ஏற்றவனா என்பதை ஆராய்ந்து அறிந்த பிறகே, அவனை அந்தச் செயலில் ஈடுபடுத்த வேண்டும்.

இலங்கை விடயத்தில் ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் பொறுப்பு

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 49 வது கூட்டத் தொடர் எதிர்வரும் 28ஆம் திகதி ஜெனீவாவில் ஆரம்பமாக உள்ளது. இக்கூட்டத் தொடரில் இலங்கையிலிருந்து வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் தலைமையிலான குழுவினர் கலந்து கொள்கின்றனர். இக்குழுவினர் எதிர்வரும் 25 ஆம் திகதி ஜெனீவாவுக்கு பயணமாக உள்ளனர்.

இம்முறை ஜெனீவா மனித உரிமைப் பேரவை அமர்வில் இலங்கைக்கு எதிராக பல குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட இருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அதாவது இறுதிக்கட்ட யுத்தத்தின் போது இடம்பெற்றதாக கூறப்படுகின்ற குற்றச்சாட்டுக்களுக்கான பொறுப்புக்கூறல் மற்றும் அண்மைய மனித உரிமை மீறல்கள் தொடர்பில் தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுகள் அங்கு முன் வைக்கப்பட இருப்பதாகக் கூறப்படுகின்றது.

இதன் அடிப்படையில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் இலங்கைக்கு எதிரான குற்றச்சாட்டுகளை உள்ளடக்கிய அறிக்கையைத் தயாரித்துள்ளது. 17 பக்கங்களைக் கொண்ட இந்த அறிக்கையின் நகல் பிரதி ஐ.நா. சபையின் கொழும்பு அலுவலகத்தின் ஊடாக வெளிவிவகார அமைச்சுக்கு கடந்த வாரம் அனுப்பி வைக்கப்பட்டது.

இந்த அறிக்கையை ஆராய்ந்த இலங்கை வெளிவிவகார அமைச்சின் உயரதிகாரிகள், அரசாங்கத்தின் அவதானிப்புகளையும் விளக்கங்களையும் ஜெனீவாவுக்கு அனுப்பி வைத்துள்ளனர். எனினும் ஜெனீவா மனித உரிமைப் பேரவையின் 49 வது அமர்வு 28 ஆம் திகதி ஆரம்பமாகின்ற போதிலும், இலங்கை குறித்த அறிக்கை எதிர்வரும் மார்ச் மாதம் 3 ஆம் திகதியே விவாதிக்கப்பட உள்ளது. அதற்கு அன்றைய தினமே பதிலளிப்பதற்கு அமைச்சர் பேராசிரியர் பீரிஸ் தீர்மானித்திருக்கின்றார்.

இதேவேளை, ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தின் இலங்கை குறித்த விசாரணை அறிக்கையில் முன்வைக்கப்பட்டுள்ள 08 குற்றச்சாட்டுகளையும் நிராகரிப்பதாகத் தெரிவித்துள்ள சட்டம் ஒழுங்கு அமைச்சர் சரத் வீரசேகர, 'இக்குற்றச்சாட்டுகளை தாம் ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்கு தனியாக நேரில் சென்று நிராகரித்துள்ளேன்' என்றும் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் 30 வருட காலம் ஆயுத மோதலுடன் கூடிய பயங்கரவாதம் நிலவி வந்தது. இதன் விளைவாக நாட்டு மக்கள் அச்சம் பீதியுடன் வாழும் நிலைக்கு உள்ளாகினர். அத்தோடு பலவிதமான அசௌகரியங்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய துரதிர்ஷ்டமான நிலைக்கும் மக்கள் முகம் கொடுத்தனர். இந்த யுத்தத்தின் காரணமாக நாட்டின் வளமான உயிர்கள் மாத்திமல்லாமல் கோடிக்கணக்கில் பெறுமதியான சொத்து செல்வங்களும் கூட அழிக்கப்பட்டு வந்தன. இதன் காரணத்தினால் அபிவிருத்தியில் நாடே இரண்டு மூன்று தசாப்த காலம் பின்தள்ளப்பட்டது.

இந்த நிலையில் உள்நாட்டு யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்து அச்சம் பீதியில்லாத சுதந்திர ஜனநாயக சூழல் நாட்டில் உருவாக்கப்பட்டதோடு படுகொலைகளுக்கும் சொத்து செல்வ அழிவுகளுக்கும் முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. இவையெல்லாம் ஒருபுறமிருக்க, உலகளாவிய பெருந்தொற்றான கொவிட் 19 தொற்றின் விளைவான பொருளாதார நெருக்கடிக்கு இலங்கை மாத்திரமன்றி அனைத்து நாடுகளும் முகம் கொடுத்துள்ளன. அதிலிருந்து மீட்சி பெறுவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் சூழலில்தான் இவ்வாறான குற்றச்சாட்டுகளை முன்வைப்பதற்கு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை நடவடிக்கை எடுத்திருக்கின்றது.

இது நியாயமான நடவடிக்கை என இந்நாட்டு பிரஜைகள் நோக்கவில்லை. உலகளாவிய ரீதியில் பொறுப்பு வாய்ந்த நிறுவனமொன்று இவ்வாறான குற்றச்சாட்டுகளை முன்வைக்க முன்னர், இலங்கையின் தரப்பிலுள்ள நியாயங்களையும் இந்நாட்டின் தற்போதையை நிலைமைகளையும் கருத்தில் கொள்ள வேண்டும். இதனை விடுத்து ஒரு பக்கக் குற்றசாட்டாக அறிக்கை முன்வைப்பது நியாயமல்ல. இவ்விடயத்தில் சம்பந்தப்பட்ட தரப்பினர் கவனம் செலுத்துவது அவசியம். அதுவே நாட்டு மக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது. ஆகவே இவ்வாறான குற்றச்சாட்டுகளை முன்வைப்பதற்கு முன்னர் நாட்டின் நிலைமைகளையும் மக்களின் கருத்துக்களையும் கவனத்தில் கொண்டு இவ்விடயத்தைக் கையாள்வது ஐ.நா. மனித உரிமைப் பேரவையின் பொறுப்பாகும்.

தங்களுக்கு சாதகமான அரசு ஆட்சிபீடமேறும் போது ஒரு கொள்கையையும், சாதகமற்ற அரசு ஆட்சிபீடமேறும் போது மற்றொரு கொள்கையையும் கடைப்பிடிப்பது மேற்கு நாடுகள் பலவற்றின் வழக்கமாக உள்ளது. அந்நாடுகளின் நிகழ்ச்சித் திட்டத்துக்கு மனித உரிமைகள் பேரவை இடமளிக்கக் கூடாதென்பதே நாட்டு மக்களின் விருப்பமாகும்.

editor.tkn@lakehouse.lk

அங்கவீனமுற்ற படையினர் நலனுக்காக இம்முறை மிகக் கூடுதல் நிதி ஒதுக்கீடு

ஜனாதிபதியின் பணிப்புரைக்கமைய 750 மில்லியன் ரூபா

ஜனாதிபதியின் பணிப்புரைக்கமைய ரணவிரு அதிகார சபையை நடத்துவதற்காக இம்முறை வரவு செலவுத் திட்டத்தில் 750 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக ரணவிரு சேவை அதிகார சபையின் தலைவரான ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் நந்தன சேனாதீர தெரிவித்துள்ளார்.

ரணவிரு சேவா அதிகாரசபை ஸ்தாபிக்கப்பட்டு 20 வருடங்களுக்கு மேலாகி விட்ட போதிலும், அங்கவீனமுற்ற படைவீரர்களுக்காக வரவு செலவுத் திட்டத்தில் இதுவே அதிகளவான நிதி ஒதுக்கீடாகும் எனவும் ரணவிரு சேவை அதிகார சபையின் தலைவர் நந்தன சேனாதீர குறிப்பிட்டார். போர்க்களத்தில் அங்கவீனமடைந்த மத்திய மாகாணத்தைச் சேர்ந்த படைவீரர்களுக்கு மின்சார மோட்டார் சைக்கிள்கள் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே நந்தன சேனாதீர மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கண்டி இரண்டாவது சிங்கப் படைப்பிரிவின் தலைமையகத்தில் அண்மையில் இந்நிகழ்வு நடைபெற்றது.

அங்கவீனமுற்ற படைவீரர்களுக்கு செயற்கைக் கால்கள், மூக்குக் கண்ணாடிகள் மற்றும் சுகாதார உபகரணங்களும் அந்நிகழ்வில் வைத்து வழங்கப்பட்டன.

நவிரு சேவா அதிகார சபையின் பணிப்பாளரான ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் சி.பி.ஏக்கநாயக்க, ஓய்வுபெற்ற பிரிகேடியர் திரிமான்ன, 2வது சிங்கப் படையணியின் மேஜர் திலான் மிஹிதுகுலசூரிய உள்ளிட்ட பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

"நாடளாவிய ரீதியில் கடுமையாக ஊனமுற்ற படைவீரர்களுக்கு பாதுகாப்பு செயலாளர் கமல் குணரத்னவின் பணிப்புரையின் பேரில் மின்சார மோட்டார் சைக்கிள்கள் வழங்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. மேலும், இந்த படைவீரர்களுக்கு சுயதொழில் தொடங்குவதற்கும் வீடுகளை நிர்மாணிப்பதற்கும் மிகக் குறைந்த வட்டியில் 10 இலட்சம் ரூபா கடனுதவி வழங்கப்படும். மேற்படி படைவீரர்களின் பிள்ளைகளின் கல்விக்கான புலமைப்பரிசில்கள் வழங்கும் வேலைத் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இதற்காக பல்வேறு நன்கொடைகள் மூலம் பெறப்பட்ட சுமார் 518 மில்லியன் ரூபாவை இதுவரை செலவிட்டுள்ளோம். ஜனாதிபதியின் பணிப்புரைக்கமைய ரணவிரு அதிகார சபையை நடத்துவதற்காக இந்த வரவு செலவுத் திட்டத்தில் 750 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இதுவே அதிகளவான ஒதுக்கீடாகும்.

மேலும் எலெக்ட்ரிக் மோட்டார் சைக்கிள்களின் பயன்பாடு காரணமாக இப்படைவீரர்கள் தங்களது கருமங்களை தனியாக செய்து கொள்ள முடிகிறது. இதற்கும் மேலதிகமாக சுயதொழில் செய்ய வாய்ப்பும் கிடைக்கும். கடுமையாக ஊனமுற்ற இந்த படைவீரர்கள் நாட்டுக்காக ஆற்றிய தியாகங்களை எம்மால் மறக்க முடியாது. அவர்களுக்கு இப்போது தேவை அனுதாபம் அல்ல, உதவிக் கரம்தான். அவர்களுக்காக எம்மால் முடிந்த அனைத்தையும் செய்வது இலங்கையர்களாகிய நம் அனைவரினதும் கடமையும் பொறுப்புமாகும்" என நந்தன சேனாதீர தனதுரையில் குறிப்பிட்டார்.

எம்.ஏ.அமீனுல்லா ...

நாவிதன்வெளி அன்னமலை ம.வியில் சரஸ்வதி திருவுருவச் சிலையை திறந்து வைத்த பிரிட்டனின் உலக அழகுராணி

ஐக்கிய இராச்சியத்தின் இவ்வாண்டுக்கான சர்வதேசஅழகி (MISS INTERNATIONAL UK) செல்வி இவஞ்சலின் லட்சுமணர், அம்பாறை மாவட்டத்தின் நாவிதன்வெளி அன்னமலை மகாவித்தியாலயத்தில் (தேசியபாடசாலை) அவரது செலவில் நிறுவப்பட்ட 10 அடி உயர சரஸ்வதி சிலையை நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நண்பகல் திறந்து வைத்தார்.

நாவிதன்வெளியை பூர்வீகமாகக் கொண்டவர் இவஞ்சலின் லட்சுமணர். ஐக்கிய இராச்சியத்தின் இவ்வாண்டுக்கான சர்வதேச அழகியான அவர், சரஸ்வதி திருவுருவச்சிலை திறப்பு விழாவுக்காக இலங்கைக்கு வந்திருந்தார். அவருடன் அவரது தாயார் சாந்திராஜகருணாவும் வருகை தந்திருந்தார். இலங்கை சுற்றுலா அதிகாரசபை அவர்களுக்கான விருந்தினர் அங்கீகாரத்தை வழங்கியுள்ளதுடன், கூடவே அதன் பிரதிநிதிகளும் வந்திருந்தனர்.

அதிதிகள் பாண்ட் வாத்தியம் சகிதம் மாலைசூட்டி, பூச்செண்டு வழங்கி கோலாகலமாக வரவேற்கப்பட்டனர். பாடசாலை வளாகத்தில் நிறுவப்பட்டிருந்த சரஸ்வதி சிலை திறப்புவிழா வித்தியாலய அதிபர் சீ.பாலசிங்கன் தலைமையில் நடைபெற்றது. சரஸ்வதி சிலையை இவஞ்சலின் திறந்து வைக்க, சிலைக்கான நினைவுப் படிமக்கல்லை அவரது தாயார் சாந்திராஜகருணா திரைநீக்கம் செய்து வைத்தார்.

தமிழ்ப்பாட ஆசிரியை திருமதி ஜெயரஞ்சினி தயாபரன் வரவேற்புரை வழங்க, ஆசிரியர் நடராஜா கோடீஸ்வரன் நிகழ்ச்சியை தொகுத்தளித்தார்.

சம்மாந்துறை வலய உதவிக் கல்விப் பணிப்பாளரும், பாடசாலைஇணைப்பாளருமான வி.ரி.சகாதேவராஜா கௌரவ அதிதியாகக் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். பிரதிஅதிபர் திருமதி நிலந்தினி ரவிச்சந்திரன் விசேட உரை நிகழ்த்தினார்.

உலக அழகி இவஞ்சலின் மற்றும் அவரது தாயார் சாந்தி ஆகியோருக்கு பாடசாலைச் சமூகம் பொன்னாடை போர்த்தி கௌரவித்தது. உதவிக் கல்விப் பணிப்பாளர் சகாதேவராஜா அவர்களுக்கு நன்றியுடன் கூடிய வாழ்த்துப் பத்திரத்தை வழங்கி வைத்தார்.

பின்னர் இவஞ்சலின் 'வணக்கம் நன்றி' எனும் வார்த்தைகளை தமிழில் பேசி, உரையை ஆங்கிலத்தில் பேசினார். சகோதர இனத்தைச் சேர்ந்த அவரது தாயார் சாந்திராஜகருணா தமிழில் உரையாற்றினார். பாடசாலைக்குத் தேவையான மேடை மற்றும் ஒலிபெருக்கி வசதிகளை செய்து தருவதாக அவர் உறுதியளித்தார்.

உபஅதிபர் பி.ஜெகதீசன் நன்றியுரையாற்றினார். உலக அழகியின் உறவினரான ஆசிரியை சிவானந்தரூபனின் விருந்து பசாரமும் இடம்பெற்றது.

இவஞ்சலினின் பாட்டனாரும், முன்னாள் அதிபருமான ராஜசிங்கத்திற்கு ஆத்மார்த்த அஞ்சலி செலுத்தப்பட்டது. அவரது குடும்ப உறுப்பினர்கள் பலரும் நிகழ்வில் கலந்து கொண்டனர். எதிர்வரும் ஒக்டோபரில் ஜப்பானில் நடைபெறவிருக்கும் உலக அழகி தெரிவுப் போட்டியில் கலந்து கொள்ளவிருக்கும் பிரித்தானிய உலக அழகி இவஞ்சலின், அப்போட்டியில் வெற்றி பெற வேண்டி அங்கு இறைபிரார்த்தனை நிகழ்த்தப்பட்டது. அதன் பின்னர் அவர்களால் குடியிருப்பு முனையில் நிர்மாணிக்கப்பட்ட வீடொன்று வசதி குறைந்த குடும்பமொன்றுக்கு வழங்கி வைக்கப்பட்டது. அதற்கான தளபாடங்களையும் அவர்கள் வழங்கி வைத்தனர்.

1970 களில் நாவிதன்வெளி அன்னமலை மகாவித்தியாலயத்தில் அதிபராயிருந்த ராஜசிங்கம் அவர்களின் பேத்தியான இவர், பெரிய பிரித்தானியாவின் அழகுராணியாக மூன்று தடவைகள் தெரிவு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

முள்ளாள் அதிபர் ராஜசிங்கத்தின் மகன் ஜீவராஜ்_ சாந்திராஜகருணா தம்பதியினரின் மகளான இவஞ்சலின் லண்டனில் பிறந்து வளர்ந்தவர். கிரிக்கட், வலைப்பந்து போன்ற விளையாட்டுகளில் மிகுந்த ஈடுபாடு கொண்ட அவர், அழகுக்கலையில் முத்திரை பதித்தவர்.

ராஜசிங்கத்தின் குடும்பத்தினர் இப்பிரதேசத்தில் வசதியில்லாத மக்களுக்கு வீடு கட்டிக் கொடுத்தல், பாடசாலைகளுக்கு உதவுதல் போன்ற சமூகசேவைகளில் ஈடுபட்டு வருகின்றனர். இப்பாடசாலையில் 10அடி உயர சரஸ்வதி சிலை நிறுவ அவர்கள் நிதியுதவி வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

காரைதீவு குறூப் நிருபர்

அவுஸ்திரேலியாவையும் அடிக்கடி சீண்டிப் பார்க்கும் செயலில் சீனா!

கடல் ரோந்தில் ஈடுபட்ட விமானம் மீது மீண்டும் லேஸர் ஒளி பாய்ச்சப்பட்டதற்கு கடும் கண்டனம்!

அவுஸ்திரேலியாவின் இராணுவ விமானத்தின் மீது சீனக்கடற்படையின் கப்பல் லேசர் ஒளியை செலுத்திய விவகாரம் தற்போது வெளி வந்துள்ளது. சீனாவின் இந்த செயலுக்கு அவுஸ்திரேலியா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

சீனா இந்தியாவின் எல்லைகளில் அடிக்கடி ஊடுருவி வரும் விவகாரம் பரபரப்பை ஏற்படுத்தி வருகின்றது. இதேபோல் பிற நாடுகளை உளவு பார்ப்பது, வேறு நாடுகளின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடுவது போன்ற காரியங்களிலும் சீனா ஈடுபட்டு வருவதாக சம்பந்தப்பட்ட நாடுகள் குற்றம் சுமத்தி வருகின்றன.

2018 இற்கு முன்பு தொழில் ரீதியாக சீனாவும் அவுஸ்திரேலியாவும் நட்பு நாடுகளாக இருந்தன. ஆனால் பின்னர் சீனா, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளுக்கு இடையே பிரச்சினை ஏற்பட்டது. 2019 இல் தென்சீனக் கடலில் பறந்த அவுஸ்திரேலிய விமானங்கள் மீது சீனக்கப்பல்கள் லேசர் ஒளியை பாய்ச்சின. இது பெரும் விமர்சனத்துக்கு உள்ளானது.

இந்நிலையில் 3 ஆண்டுகளுக்கு பின்னர் மீண்டும் அவுஸ்திரேலியாவின் இராணுவ விமானத்தின் மீது சீன கடற்படைக் கப்பல் லேசர் ஒளியைச் செலுத்தியுள்ளது. இதற்கு அவுஸ்திரேலியா பிரதமர் ஸ்கொட் மரிசன் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். மேலும் சீனாவின் இத்தகைய செயல் உயிரிழப்பை ஏற்படுத்தும் வகையில் உள்ளது என அவர் அதிருப்தியை பதிவு செய்தார். சீனாவின் இத்தகைய செயலுக்கு அவுஸ்திரேலிய பாதுகாப்புத்துறை அமைச்சகம் கடும் கண்டனத்தை பதிவு செய்துள்ளது.

இதுகுறித்து அந்த அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், " பெப்ரவரி 17 இல் அவுஸ்திரேலியாவின் வடக்கு பகுதியில் கடல் ரோந்துக்கான எங்கள் இராணுவ விமானம் P8A Poseidon பறந்தது. சீனக் கடற்படைக் கப்பல் பி.எல்.ஏ .என் லேசர் ஒளியை விமானத்தில் செலுத்தியது. லேசர் ஒளியை பாய்ச்சிய கப்பல் இன்னொரு கப்பலுடன் சேர்ந்து அரபுரா கடல் வழியே கீழக்கு நோக்கி பவளக் கடல் நோக்கிச் சென்று கொண்டிருந்தது. சீனாவின் இத்தகைய செயல் கடும் கண்டனத்துக்குரியது. தொழில்சார் மற்றும் பாதுகாப்பற்ற இராணுவ நடத்தையை நாங்கள் கடுமையாக கண்டிக்கிறோம். இது பாதுகாப்புகள் குறித்த சந்தேகத்தை ஏற்படுத்தும்"என கூறியுள்ளது.

இந்தச் சம்பவமானது அவுஸ்திரேலியாவின் வடக்கு கடற்கரைக்கும், நியூகினியாவின் தெற்கு கடற்கரைக்கும் இடையேயான கடலில் நடந்துள்ளது. சீனா_ அவுஸ்திரேலியா இடையே வர்த்தக ரீதியாக அக்காலத்தில் நல்ல உறவு இருந்தது. ஆனால் அவுஸ்திரேலியாவில் ஹுவாய் 5G புரோட்பேண்ட் தொழில்நுட்பம் 2018 ல் தடை செய்யப்பட்டதில் இருந்து இருநாடுகளுக்கும் இடையே மோதல் போக்கு உருவானது. இதனால் கொரோனா பரவிய நிலையில், வைரஸின் பிறப்பிடம் குறித்து உரிய விசாரணை நடத்த வேண்டும் என அவுஸ்திரேலியா வலியுறுத்தி வந்ததும், தொடர்ந்து இருநாடுகளுக்கும் இடையே மோதல் போக்கு உள்ளதும் குறிப்பிடத்தக்கது.

தேசிய ஒற்றுமையை உருவாக்குவதில் கலைஞர்கள், ஊடகவியலாளர்களுக்கு அதிக பொறுப்பு உள்ளது

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற சந்திப்பில் ஊடகத்துறை அமைச்சர் டலஸ் அழகப்பெரும

தேசிய ஒற்றுமையை உருவாக்குவதில் அரசியல்வாதிகளை விட பெரும் பொறுப்பை ஊடகவியலாளர்களும் கலைஞர்களும் கொண்டுள்ளனர். ஊடகவியலாளர்களால் அப்பொறுப்பை நிறைவேற்ற முடியுமென வரலாற்றில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று ஊடகத்துறை அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார். யாழ்ப்பாணம் மாவட்டத்தில் வெளியீட்டு காரியாலயம் ஒன்றை திறந்து வைத்த பின்னர் யாழ்ப்பாணம் மாவட்ட பிரதேச ஊடகவியலாளர்கள் மற்றும் பிரதேச நிருபர்களுடன் நடத்திய சந்திப்பின் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

"பொருளாதாரம் தொடர்பாகவும் மற்றும் கல்வி தொடர்பாகவும் எவ்விதமான பிரச்சினைகள் ஏற்பட்டாலும் இந்நாட்டில் இனஒற்றுமையே முக்கியமான அம்சமாகக் கருதப்படப்பட வேண்டும்" என்று அங்கு வருகை தந்திருந்த பிராந்திய ஊடகவியலாளர்கள் மற்றும் நிருபர்கள் மத்தியில் அமைச்சர் டலஸ் அழகப்பெரும கூறினார்.

"தேசிய ஒற்றுமையை உருவாக்குவதில் அரசியல்வாதிகளை விட அதிகமான பணியை ஊடகவியலாளர்களும் கலைஞர்களும் செய்ய முடியும். அது சரித்திரத்திலேயே உறுதி செய்யப்பட்டுள்ளது. ஜன நாயக எல்லையில் விமர்சனங்கள் காணப்படலாம், ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்படலாம், விவாதங்கள் மேற்கொள்ளலாம். அவை ஜனநாயகத்தின் அடையாளங்கள் என அறிமுகம் செய்ய முடியும். அதனை ஒருபோதும் எம்மிடையே உள்ள நட்புக்கு தடையாக்கிக் கொள்ள வேண்டாம். விவாதங்கள் நாட்டின் எதிர்கால பயணத்துக்கு அவசியம் ஆனால் அதன் இறுதியில் ஒப்புதலுக்கு வர வேண்டும்.

சிங்கள மொழியை பயன்படுத்தும் ஊடகவியலாளர் சகோதர மொழியான தமிழ்மொழியை பயன்படுத்தும் ஊடகவியலாளர்கள் எவ்வாறு சிந்திக்கிறார்கள் என்பதை அறிந்து கொண்டிருக்க வேண்டும்.

அதற்காக ஊடகவியலாளர் பரிமாற்ற நிகழ்ச்சித் திட்டம் ஒன்றை எதிர்காலத்தில் செயல்படுத்துவேன்.

அதேபோன்று மிகவும் வளர்ச்சி அடைந்த ஊடக பாவனை காணப்படும் இடம்தான் யாழ்ப்பாணம். ஏன் என்று தெரியுமா? இந்தப் பிரதேசத்தில் மாத்திரம் பிரதேச அச்சு ஊடகங்கள் ஐந்து உள்ளன. இவ்வாறான இடமொன்று இலங்கையில் வேறு எங்குமே இல்லை. அதேபோன்று மொழியின் சுதந்திரத்தை நாம் பாதுகாக்க வேண்டும். கடுமையான சட்ட திட்டங்களால் ஊடகத்தை கட்டுப்படுத்த முடியும் என நான் ஒருபோதும் நம்புவதில்லை அதற்கு சுய கட்டுப்பாடு அவசியம் அது எம்மிடமே ஏற்படவேண்டும்" என்று அமைச்சர் குறிப்பிட்டார். "ஊடகவியலாளர்களின் தொழில் தன்மையை மேம்படுத்த செயற்படுத்தப்படும் 'எசி திசி' காப்புறுதித் திட்டம் இலங்கையில் முதல் தடவையாக செயற்படுத்தப்பட்டுள்ளதோடு, முதற் தடவையாக பட்டய ஊடகவியலாளர் நிறுவனம் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது எனக் கூறிய அவர், ஊடகவியலாளர்களை பாராட்டும் ஜனாதிபதி விருது விழா தொடர்பாகவும் தெளிவுபடுத்தினார்.

கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவரும், யாழ்ப்பாணம் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத்தலைவரும், யாழ் மாவட்ட எம்.பியுமான அங்கஜன் இராமநாதன், பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி சுரேன் ராகவன், வடமாகாண தலைமைச் செயலாளர் எஸ். எம். சமன் பந்துலசேன, அரசாங்க தகவல் திணைக்கள பணிப்பாளர் நாயகம் மொஹான் சமரநாயக்க, யாழ்ப்பாணம் மாவட்ட செயலாளர் மகேசன் உள்ளிட்ட பலரும் இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டார்கள்.

வடமத்திய மாகாணத்தில் சூரிய சக்தி மூலம் 40 மெகா வாட்ஸ் மின்சார உற்பத்தி திட்டம்

தேசிய மின்சார தேவைக்கு வழங்கப்படும்

எதிர்காலத்தில் நாட்டின் தேவைக்காக 40 மெகா வாட்ஸ் மின்சாரம் சூரிய மின் உற்பத்தி மூலம் வடமத்திய மாகாணத்தில் இருந்து வழங்கப்படுமென மாகாண ஆளுநர் மஹிபால ஹேரத் தெரிவித்தார்.

வடமத்திய மாகாணத்தில் உள்ள பாடசாலைகளின் கட்டடங்கள், வைத்தியசாலை மற்றும் மாகாண சபைக்குட்பட்ட தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள கட்டடங்களின் கூரையில் சூரிய சக்தி மின்சார படல்களை அமைப்பது தொடர்பில் 'ஜே. ஏ. ஐ. ஏ. கிரீன் என்ஜர் என். சீ. என்' தனியார் நிறுவனத்துடன் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இதற்கான முழு முதலீட்டையும் தனியார் நிறுவனம் ஏற்றுக் கொள்ளவுள்ளது. அது 9000 மில்லியன் ரூபா ஆகும். தேசிய தேவைக்கு 40 மெகா வாட்ஸ் மின்சாரம் வழங்கி அதன் மூலம் கிடைக்கும் வருமானத்தில் 16,5 வீதத்தை வடமத்திய மாகாண சபைக்கு வழங்குவதற்கு நிறுவனம் முன்வந்துள்ளதாகவும் ஆளுநர் தெரிவித்தார்.

"மாகாண சபைக்கு நஷ்டம் ஏற்டாத வகையில் பொதுவாக நாடு இலாபமீட்டக் கூடிய ஒரு வணிகமாக இதை நாம் இனங் காண்கின்றோம். தற்போது மின்சாரம் தொடர்பில் நாடு பாரிய சவாலுக்கு முகம் கொடுத்துள்ள நிலையில், நாம் அந்த செயற்றிட்டத்தை ஆரம்பிக்கின்றோம். இந்தசவால்நிறைந்தகாலத்தில் பாரிய பயனை நாட்டிற்கு பெற்றுக் கொள்ளும் வகையில் தேவையான திட்டத்தை நாட்டுக்கு பெற்றுக் கொடுக்க முடிந்துள்ளமை நாம் பெற்ற பாரிய வெற்றியாகும். இது தொடர்பில் நானும் மாகாண பிரதான செயலாளரும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை சந்தித்து கலந்துரையாடி ஆலோசனை பெற்றதன் பின்பே இதில் கைச்சாத்திட்டோம்" என்று ஆளுநர் தெரிவித்தார்.

வடமத்திய மாகாணத்தில் ஆண்டு முழுவதும் சூரியன் பிரகாசிக்கும் பகுதிகளாக பாடசாலைக் கட்டடங்கள் மற்றும் ஏனைய மாகாண கட்டட கூரைகள் உள்ளன. அக்கட்டடங்களின் மேலாக சூரியப்படல்களைப் பொருத்துவதன் மூலம் இதுவரைக்கும் வீணாகிப் போன சூரிய சக்தியை நாட்டுக்கு பயனுள்ளதாக ஆக்கிக் கொள்ள முடியும். இது நாம் பெற்ற வெற்றியாகும். ஜனாதிபதி இந்த வேலைத்திட்டத்தை நாடு முழுவதும் விஸ்தரிப்பதற்கு எதிர்பார்த்துள்ளார். நாம் இந்தத் திட்டத்தை நன்கு ஆய்வு செய்து தீர்மானித்துள்ளோம்" எனவும் ஆளுநர் தெரிவித்தார். 20 வருட காலத்துக்கு குறித்த திட்டத்தை செயல்படுத்தும் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது. இதில் வடமத்திய மாகாண பிரதம செயலாளர் சந்திரசிறி பண்டார மற்றும் ஜே. ஏ. ஐ. ஏ. கிரீன் எர்னஜ் என். சீ. என் தனியார் நிறுவனத்தின் சார்பில் அதன் முகாமைத்துவப் பணிப்பாளர் சிவாஜி த சொய்சா ஆகியோர் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளனர்.

மதார் தம்பி ஆரிப்...✍
(அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்)

தொட்டவத்தை ரிதானியா புர்தா கமிட்டி ஏற்பாட்டில் நீர்த்தாங்கிகள் அன்பளிப்பு

போதைப் பொருள் பாவனை, விற்பனை மற்றும் பல்வேறு சமூகவிரோதச் செயற்பாடுகளிலிருந்து எதிர்கால சமூகத்தைப் பாதுகாப்பதில் இளைஞர்கள் உணர்வுபூர்வமாக செயற்பட வேண்டியது காலத்தின் தேவையாகும். இந்த சமூக அழிவுப் பழக்கவழக்கங்களிலிருந்து பிரதேசங்களைப் பாதுகாக்க இளைஞர்கள் அர்ப்பணிப்பு, தியாகங்களுடன் முன்வந்து கிராமங்களின் பாதுகாவலர்களாக முறையாகச் செயற்பட வேண்டியது அவசியம் என்று பாணந்துறை தொட்டவத்தை பெரியபள்ளி வாசல் கதீப் மௌலவி எம்.எம்.எம்.முஷாக்கிர் (அலவி) தெரிவித்தார்.

தொட்டவத்தை ரிதானியா புர்தா கமிட்டியின் பணிமனையில் இடம்பெற்ற, வசதி குறைந்த மக்களுக்கு நீர்த்தாங்கிகள் அன்பளிப்புச் செய்யும் நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அமைப்பின் தலைவர் எம்.என்.எம். ரிம்ஸான் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் செயலாளர் எம்.எச்.எம் ஹஸ்பி, தனாதிகாரி எம்.ஏ.எம்.ரியாஸ், எம் எஸ்.எம்.ருஷாட் உள்ளிட்ட நிர்வாகிகளும் கலந்து கொண்டனர்.

'ரிதானியா புர்தா கமிட்டி' என்ற அமைப்பு பதினான்கு வருட காலமாக பல்வேறு சமூகப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றமை பெரிதும் பாராட்டத்தக்கது. குடிநீர் வசதி பெறுவதற்கான நிலையிருந்தும் அதற்கான நீர்த்தாங்கி இல்லாமல் ஏங்கிக் கொண்டிருந்த வறுமையான குடும்பங்களுக்கு நீர்த்தாங்கிகள் அன்பளிப்புச் செய்வது உயர்ந்த தருமமாகும். வறுமை நிலையிலுள்ள குடும்பங்களைக் கண்டறிந்து அவர்களுக்கான அடிப்படை வசதிகளைச் செய்து கொடுப்பது பெரும் புண்ணியமான சேவையாகும்.

இவர்கள் பேச்சில் மாத்திரம் நின்று விடாது செயல்ரீதியாகவும் செயல்பட்டுள்ளனர். இந்த அமைப்பின் உறுப்பினர்கள் ஆன்மீக விடயங்களில் தொடர்புகளைப் பேணியவர்களாக இருப்பது இவர்களின் சேவைக்கு பெரும் சக்தியாகவிருப்பதுடன் மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். இவர்களைப் போன்று ஏனைய அமைப்புகளும் சிறந்த சேவைகளை திட்டமிட்டு முன்னெடுத்தால் வறிய குடும்பங்களுக்கு பல்வேறு அடிப்படை வசதிகளை நிறைவு செய்து கொடுக்க முடியுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

பாணந்துறை தொட்டவத்தை ரிதானியா புர்தா கமிட்டியினர் கடந்த பதினான்கு வருட காலமாக இப்பிரதேசத்தில் பல்வேறு பணிகளை அமைதியான முறையில் மேற்கொண்டு வருகின்றனர். ஐந்தாம் தரம் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களை ஊக்குவித்தல், உயிரிப்புகள் இடம்பெற்ற வீடுகளுக்கு இலவசமாக கதிரைகள், கூடாரங்கள் உள்ளிட்ட பொருட்களை வழங்குதல் போன்ற சேவைகளையும் மேற்கொண்டு வருவதாக புர்தா கமிட்டியின் நிர்வாக குழு உறுப்பினர் எஸ்.ஐ.எம்.முயீத் தெரிவித்தார். இத்தகைய இல்லங்களுக்கு ஒரு நேர உணவு வழங்கும் பரீட்சார்த்த வேலைத் திட்டமொன்றையும் ஆரம்பிக்க இந்த கமிட்டியினர் எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

எம்.எஸ்.எம். முன்தஸிர் ...✍
(பாணந்துறை மத்திய குறூப் நிருபர்)

காஞ்சி சங்கரமடம் உட்பட முக்கிய கோயில்களுக்கு பொலிஸ் பாதுகாப்பு

ஹிஜாப் உடை விவகாரத்தினால் உருவான முறுகலே காரணம்!

ஹிஜாப் உடை விவகாரம் காரணமாக தமிழ் நாட்டின் காஞ்சி சங்கரமடம் மற்றும் முக்கிய கோயில்களுக்கு அச்சுறுத்தல் நிலவி வருவதால் 24 மணி நேர பலத்த பொலிஸ் பாதுகாப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. கர்நாடகத்தில் ஹிஜாப்பிற்கு அனுமதி கோரி முஸ்லிம் மாணவிகள் ஆறு நாட்கள் போராட்டம் நடத்தி வந்தனர். இருப்பினும் ஹிஜாப் விவகாரம் தொடர்பான சர்ச்சைகள் முழுமையாக இன்னும் நீங்கவில்லை.

முஸ்லிம் மாணவிகளுக்கு ஹிஜாப் அணிய அனுமதி கொடுத்தால் காவி துண்டு அணிய இந்து மாணவர்களுக்கு அனுமதிக் கொடுக்க வேண்டும் என ஹிந்துத்துவா மாணவர்கள் போராடி வருகிறார்கள். கர்நாடகாவைத் தொடர்ந்து இன்னும் பிற மாநிலங்களில் ஹிஜாப் பிரச்சினை தலைதூக்கியுள்ளதால் இந்து ஆலயங்களுக்கு பாதுகாப்பு அளிக்க வேண்டிய அவசியம் உள்ளதாக பொலிஸ் அதிகாரிகள் தெரவித்துள்ளனர்.

தமிழகத்தில் நகர்ப்புற தேர்தலின் போது ஹிஜாப் அணிந்து வந்த பெண் வாக்காளருக்கு பா.ஜ.க முகவர் ஒருவர் எதிர்ப்பு தெரிவித்தார். முஸ்லிம் மாணவிகளுக்கு ஹிஜாப் அணிய அனுமதி கொடுக்கவில்லை என்றால் காவி துண்டு அணிய இந்து மாணவர்களுக்கு அனுமதி கொடுக்க வேண்டும் என ஹிந்துத்துவா மாணவர்கள் போராடி வருகிறார்கள். கர்நாடகாவைத் தொடர்ந்து இன்னும் பிற மாநிலங்களில் ஹிஜாப் பிரச்சினை தலைதூக்கியுள்ளதால் இந்து ஆலயங்களுக்கு பாதுகாப்பு அளிக்க வேண்டிய அவசியம் உள்ளதாக பொலிஸ் அதிகாரிகள் தெரவித்துள்ளனர்.

தமிழகத்தில் நகர்ப்புற தேர்தலின் போது ஹிஜாப் அணிந்து வந்த பெண் வாக்காளருக்கு பா.ஜ.க முகவர் ஒருவர் எதிர்ப்பு தெரிவித்தார். முஸ்லிம் மாணவி ஒருவர் இதன் காரணமாக தனது பரீட்சையை எழுதாமல் புறக்கணித்து விட்டார். ஹிஜாப் குறித்து வெளிநாடுகளும் கருத்துச் சொல்ல தொடங்கி விட்டன.

இந்த நிலையில், ஹிஜாப் விவகாரத்தால் பிரச்சினைகள் தலை தூக்காமல் இருக்க முக்கியமான கோயில்களில் பொலிஸ் பாதுகாப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. அந்த வகையில் காஞ்சிபுரத்தில் உள்ள காஞ்சி சங்கர மடத்திற்கு 24 மணி நேரமும் பலத்த பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. அதேபோல் கல்லூரிகளில் ஏதேனும் மாணவர்கள் இடையே பிரச்சினை தோன்றாமல் இருக்க பொலிஸார் தொடர் கண்காணிப்பில் ஈடுபட்டு வருகிறார்கள். சங்கரமடத்திற்கு ஏதேனும் அச்சுறுத்தல் ஏற்படுத்தக் கூடும் என உளவுத்துறை கண்காணித்து எச்சரித்ததாலேயே இந்தப் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

இதைத் தொடர்ந்து பொலிசார் சுழற்சி முறையில் சங்கர மடத்திற்கு பாதுகாப்பு அளித்து வருகிறார்கள். இதேபோல் தமிழகத்தின் முக்கியமான சில கோயில்களுக்கும் 24 மணி நேரமும் பொலிசார் பாதுகாப்பு வழங்கவுள்ளதாக பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்திய மீனவர் 21 பேருக்கு...

ஆஜர்படுத்தியபோது, 21 மீனவர்களையும் விளக்கமறியலில் தடுத்து வைக்க நீதவான் உத்தரவிட்டார்.

இந்நிலையில் குறித்த வழக்கு நேற்றைய தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது 21 மீனவர்களுக்கும் 3 ஆண்டுகளுக்கு சிறைத் தண்டனை விதித்த நீதவான் , அதனை 10 ஆண்டுகளுக்கு ஒத்தி வைத்துள்ளார்.

அசாத் சாலியின் மனு தொடர்பில்...

நீதிமன்றம் நேற்று (21) தெரிவித்துள்ளது. முன்னாள் ஆளுநர் அசாத் சாலி தனக்கு எதிராக நீதிமன்றத்தில் சாட்சியமளித்த, பாராளுமன்ற உறுப்பினர்களான மொஹமட் முஸம்மில், நிமால் பியதிஸ்ஸ மற்றும் காமினி வலேபொட ஆகியோரிடம் நட்டஈடு கோரி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

கடந்த 2021 மார்ச் 9 ஆம் திகதி அல்லது அதனை அண்மித்த தினமொன்றில் கொழும்பில் ஊடக சந்திப்பொன்றை நடத்தி, இன, மத சீர் குலைவை ஏற்படுத்தும், வன்மத்தை தூண்டும் வகையிலான கருத்தொன்றைவெளியிட்டதாகக்கூறி,பயங்கரவாத தடுப்புச் சடத்தின் கீழ் கைது செய்யப்பட்டார். பயங்கரவாத தடைச் சட்டம் மற்றும் சிவில், அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச சமவாய சட்டம் ஆகியவற்றின் அடிப்படையில் அசாத் சாலிக்கு எதிராக சட்டமா அதிபரால் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில், சாட்சிய விசாரணைகளின் அடிப்படையில் அசாத் சாலியை குற்றமற்றவராகக் கருதி கடந்த டிசம்பர் 2 ஆம் திகதி கொழும்பு மேல் நீதிமன்றம் விடுதலை செய்தமை குறிப்பிடத்தக்கது.

வடக்கிற்கான சுற்றுலாவுக்கு...

கொழும்பு மாநகர சபை யின் ஜே.வி.பி உறுப்பினர் ஹேமந்த குமார கருத்து தெரிவிக்கையில்,

சுற்றுப்பயணத்திற்கான மதிப்பீடு ரூ. 5.5 மில்லியனாக இருந்தது, ஆனால் சில சபை உறுப்பினர்கள் அதில் பங்கேற்க மறுத்ததால் அது ரூ.3.4 மில்லியனாக மாற்றப்பட்டது. "ஜே.வி.பி. உறுப்பினர்களான நாங்கள் பணத்தை வீணடிக்க விரும்பவில்லை என்பதால் நிகழ்ச்சியில் பங்கேற்க மறுத்தோம்," என்று அவர் கூறினார்.

மேற்கு மாகாண ஆளுநர் அதற்கு ஒப்புதல் அளித்ததாக எங்களுக்குத் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாண மாநகர சபை மற்றும் ஏனைய உள்ளூராட்சி மன்றங்களுடனான அனுபவப் பகிர்வாக இது அமையும் என்று கூறப்பட்டது. கொழும்பு பொது நூலகத்துடன் யாழ்ப்பாண நூலகமும் இணைக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பது எமக்குத் தெரியாது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

எவ்வாறாயினும், வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் ஏ.ஜெபநேசனிடமிருந்து 2022 பெப்ரவரி 2 ஆம் திகதி கொழும்பு மாநகர சபைக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. சுற்றுப்பயணத்தின் பயணத் திட்டத்தில் மாகாணத்தில் உள்ள சில உள்ளாட்சி அமைப்புகளுக்கு செல்லப்பட்டுள்ளது.

சுற்றுப்பயணத்திற்கான ஹொட்டல் கட்டணம் ரூ.2.6 மில்லியன், போக்குவரத்து செலவு ரூ.394,000, விளையாட்டு ஆடைகளுக்கு ரூ.229,500, தண்ணீர் போத்தல்கள் மற்றும் சிற்றுண்டிகளுக்கு ரூ.200,000 என மதிப்பிடப்பட்டுள்ளது என்றார்.

பொருளியல் வினாத்தாளில்...

பணித்துள்ளார். இது தொடர்பில் நிபுணர் குழு ஆராய்வதாகவும் அவர் தெரிவித்தார்.

வினாக்களை தயாரிப்பதில் ஏதேனும் தவறுகள் இருப்பதாக குழு கண்டறிந்தால், மாணவர்களுக்கு அதன் நன்மையை வழங்குவதாகவும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் குறிப்பிட்டுள்ளார்.

ஏறக்குறைய ஒவ்வொரு வருடமும் பரீட்சைகள் நடைபெறும் போது தனியார் வகுப்புகளை நடத்தும் சில ஆசிரியர்களால் இவ்வாறான குற்றச்சாட்டுக்கள் முன் வைக்கப்படுவதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்தார்.

க.பொ.த உயர்தரம் 2021 பரீட்சையின் பொருளியல்1 வினாத்தாளில் 33, 34, 37, 49 மற்றும் 50 ஆகிய வினாக்கள் சரியான விடையளிக்க முடியாத வினாக்கள் என குற்றச்சாட்டுகள் எழுந்தன. (பா)

கச்சதீவு திருவிழாவில்...

வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

கச்சதீவு புனித அந்தோனியார் தேவாலயத்தின் வருடாந்த திருவிழா எதிர்வரும் 11 ,12 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கொரோனா நிலைமையை கருத்திற்கொண்டு இலங்கை பக்தர்கள் 500 பேருக்கு மாத்திரம் கச்சதீவு திருவிழாவில் கலந்துகொள்வதற்கான அனுமதியை வழங்க யாழ். மாவட்ட செயலகத்தில் கடந்த மாதம் 26 ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

எனினும், தமிழக பக்தர்களுக்கும் திருவிழாவில் பங்கேற்க சந்தர்ப்பமளிக்குமாறு தமிழக அரசாங்கம் சார்பில் தொடர்ச்சியாக கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இந்த நிலையிலேயே இரு நாட்டு பக்தர்களும் மட்டுப்படுத்தப்பட்டளவில் இம்முறை திருவிழாவில் கலந்துகொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

சுழற்சி முறையில் இரு...

உயர்தரப் பரீட்சைகள் காரணமாக இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்தார்.

அதன்படி, பிற்பகல் 4.30 மணி முதல் இரவு 10.30 மணி வரையிலான காலப்பகுதியில் 2 மணித்தியால சுழற்சி முறையிலான மின்வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

முன்னதாக நாடு பூராகவும் சுழற்சி முறையிலான ஒரு மணித்தியால மின் வெட்டை அமுல்படுத்த திட்டமிடப்பட்டது.

போதியளவிலான மின் உற்பத்தி இல்லாததால் இலங்கை மின்சார சபையினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

காலை 8.30 மணி முதல் இரவு 7.30 மணி வரையிலான காலப்பகுதியில் தென் மாகாணம் தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் ஒரு மணித்தியால மின் வெட்டு அமுல்படுத்த முடிவு செய்யப்பட்டது.

தென் மாகாணத்தில் காலை 8.30 மணி முதல் பிற்பகல் 4.30 மணி வரையிலான காலப்பகுதியில் 3 மணித்தியால மின் வெட்டை அமுல்படுத்த பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அனுமதி வழங்கியிருந்தது.

இதனை மாற்றி புதிய நேர அட்டவணை அறிவிக்கப்பட்டுள்ளது. (பா)

30 கோடி ரூபா பெறுமதியான...

தூத்துக்குடி மாவட்டம், வேம்பார் கடற்கரையில் தூத்துக்குடி கியூ பிரிவு இன்ஸ்பெக்டர் விஜய அனிதா, சப்இன்ஸ்பெக்டர்கள் ஜீவமணி வேல்ராஜ், வேலாயுதம், சுரேஷ்குமார் மற்றும் பொலிஸார் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது கடற்கரையில் நின்று கொண்டிருந்த படகில் இருந்த 8 பேர் கொண்ட கும்பலை சுற்றிவளைத்து சோதனை செய்ததில் அவர்களிடம் 2 கிலோ வீதம் 5 பக்கெட்டுகளில் கிரிஸ்டல் மெத்தாம் பேட்டமைன் எனும் ஐஸ் போதைப் பொருளை வைத்திருப்பது தெரியவந்தது. மேலும் அதனை அவர்கள் இலங்கைக்கு கடத்த முயன்றதாக கூறப்படுகிறது. இது தொடர்பாக கீழவைப்பார் பரலோக மாதா கோவில் தெருவைச் சேர்ந்த இருதய வாஸ் , கிங் பேன், சிலுவை,அஸ்வின், வினிஸ்டன், சுபாஷ், கபிலன், சைமோன், ஆகிய 8 பேரை பொலிஸார் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். மேலும் அவர்களிடம் இருந்த ரூ.30 கோடி மதிப்புள்ள போதைப்பொருள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. இந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பொருளாதார நெருக்கடிக்கு...

உடனடியாக அதனை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா வலியுறுத்தியுள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக மாநாட்டில் கருத்துத் தெரிவித்த கலாநிதி ஹர்ஷ டி சில்வா, நாட்டின் தற்போதைய நிலைமையைக் கருத்தில் கொண்டு, தற்போதைய பொருளாதார நெருக்கடியை உள்ளூர் தீர்வின் மூலம் நிர்வகிக்க முயற்சிப்பது முட்டாள்தனமானது. எவ்வாறாயினும், அரசியல் காரணங்களுக்காக மத்திய வங்கியின் ஆளுநர் சர்வதேச நாணய நிதியத்தை தொடர்ந்தும் நிராகரித்து வருவதால், சர்வதேச நாணய நிதியத்தினால் எட்டக்கூடிய தீர்வை காண்பது மிகவும் கடினமாகி வருவதாக அவர் தெரிவித்தார்.

இப்போது எண்ணெய் விவகாரம் மின்சாரப் பிரச்சினையாக மாறியுள்ளது.இதனால் இலங்கையின் பிரதான அரச வங்கிகளின் ஸ்திரத்தன்மைக்கு பெரும் பிரச்சினை ஏற்பட்டுள்ளது. இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்கு கடன் வழங்க வேண்டாம் என மத்திய வங்கியின் ஆளுநர், மக்கள் வங்கி மற்றும் இலங்கை வங்கிக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

அரசியல் , கட்சி பேதமின்றி இந்நாட்டு மக்களைக் காப்பாற்றுவதற்கான திட்டத்தை வகுக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம் என்றும் அவர் குறிப்பிட்டார். (பா)

மக்கள் எனக்கு வழங்கிய...

என்றும் அவர் தெரிவித்தார்.

உடுப்பிட்டி தேர்தல் தொகுதியில் (ஞாயிற்றுக்கிழமை) நடைபெற்ற ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் யாழ் மாவட்ட மாநாட்டு நிகழ்வில் தலைமையுரை ஆற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.இது தொடர்பாக மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில்;

யாழ் மக்கள் எமக்களித்த அன்புக்கும் அரவணைப்பிற்கும் தலை வணங்கவே முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இங்கு வந்துள்ளார்.ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி குறிப்பிட்ட காலத்திற்குள் அபரிமிதமான வளர்ச்சி அடைந்துள்ளது. அன்று எனக்கு ஜனாதிபதி தேசியப் பட்டியல் ஊடாக பாராளுமன்றம் செல்ல ஒரு வாய்ப்பினையும்அதனூடாக 5மாத காலம் ஓர் அமைச்சுப் பதவியும் தந்து ஊக்குவித்தமைதான் இன்று நான் தொடர்ந்தும் மக்கள் பணியாற்றி வர பிரதான காரணம்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன யாழ் மாவட்டத்திற்கு 21 தடவைகள் விஜயம் மேற்கொண்டு யாழ் மக்களின் விவசாயம்,காணி விடுவிப்பு ,நல்லிணக்கம்,இன ஒற்றுமை உள்ளிட்ட பல வேலைத்திட்டங்களை முன்னெடுத்திருந்தார். அதுதான் இன்றும் சுதந்திரக்கட்சியை யாழில் வழிநடத்திச் செல்ல மிகப்பெரிய தூணாக விளங்குகிறது. வரலாற்றில் முதல் தடவையாக யாழ் மக்கள்ஸ்ரீலங்காசுதந்திரக் கட்சிக்கு ஓர் ஆசனத்தை தந்து மிகப்பெரிய ஆதரவைத் தந்துள்ளனர்.இந்த மண்ணின் மகிமை உலகிற்கே தெரியும். அந்த மண் நான் பாராளுமன்ற உறுப்பினராக தெரிவாக மிகப்பெரிய வாய்ப்பினைத் தந்துள்ளது. எமக்கு எதிரானவர்கள் சொல்வது போன்று சுதந்திரக்கட்சி ஓர் சிங்களக் கட்சி அல்ல.இது ஓர் தேசியக் கட்சி. சர்வ இனங்கள்,சர்வ மதங்களையும் ஒன்றுபடுத்திய கட்சி. குறிப்பாக சிறுபான்மையினரின் தமிழர்களின் அபிலாசைகளையும் உள்வாங்கிக் கொண்டு சுதந்திரக்கட்சி நிலைத்து நிற்கிறது. அதுவே கடந்த தேர்தலில் யாழ் மக்கள் எனக்கு மிகப்பெரிய ஆணையை வழங்க காரணம்.

இந்த ஆணையை வழங்கிய மக்களுக்கு மிகப்பெரிய நன்றியைத் தெரிவிக்க கடமைப்பட்டுள்ளேன்.அந்த நன்றியை 18மாத காலமாக செயல் வடிவில் ஆற்றிய வருகிறேன்.

மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவராக, நாடாளுமன்ற குழுக்களின் பிரதித் தவிசாளராக பல பரிணாமங்களைப் பெற்று 18மாத காலத்திற்குள் யாழ் மாவட்டத்தில் 3500க்கும் மேற்பட்ட வீட்டுத்திட்டங்கள்,கிராமிய பொருளாதாரத்தை மேம்படுத்த 793 நிறைவான கிராமம் வேலைத்திட்டங்கள்,16சௌபாக்கியா உற்பத்திக் கிராம வேலைத்திட்டங்கள்,450கிராமிய வீதிகள் புனரமைப்பு அதனை விட மாகாணசபை மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபை வீதிகள் என பல அபிவிருத்திகளை நிறைவு செய்துள்ளோம். அதையும்தாண்டிவாழ்வாதாரம் இன்று மிகப்பெரிய சவாலாக உள்ளது. இன்னமும் யாழ் மாவட்டம் வறுமையில் எட்டாவது மாவட்டமாக உள்ளது. இந்த மாவட்டத்தை வறுமையில் இருந்து மீட்டெடுத்து பொருளாதார ரீதியாக முன்னேக்கிக் கொண்டு செல்ல வேண்டும்.அதனூடாக இழந்த அனைத்தையும் மீளப் பெற்று எமது இலக்கினை அடைய முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

தமிழ் அரசியல் கைதிகளை...

தொடரும் என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கொழும்புக் கிளைத் தலைவரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான கே.வி.தவராசா எச்சரிக்கை விடுத்துள்ளார்.

பயங்கரவாத தடைச்சட்டம் முற்றாக நீக்கப்படும் என அனைவரும் எதிர்பார்க்கின்றனர். இருப்பினும் டிரம்பின் லட்சியங்களை தோற்கடிக்க அவர்களின் எண்ணிக்கை போதுமானதாக இல்லை என்பதை அவர் ஒப்புக்கொண்டார். 42 ஆண்டுகால பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்பட வேண்டும் என்பதில் மாற்றுக்கருத்து இல்லை. என்ன காரணத்திற்காக இச்சட்டம் கொண்டு வரப்பட்டதோ, 2009ல் இச்சட்டம் முடிவடைந்தும் இதுவரை ரத்து செய்யப்படவில்லை. திருத்தங்கள் எதுவும் செய்யப்படவில்லை. இது அடிப்படை உரிமைகளுக்கு எதிரானது.

சர்வதேச ஒருமித்த கருத்துக்கும் அரசியலமைப்பின் பல விதிகளுக்கும் முரணானது. அரசு இந்த சட்டத்தை சுயநலத்திற்காக பயன்படுத்துகிறது. அரசுக்கு எதிராக கருத்து தெரிவிப்பவர்கள் தற்போது குறிவைக்கப்படுகின்றனர். இந்த சட்டம் தமிழர்களுக்கு எதிராக கொண்டு வரப்பட்டது. இப்போது தமிழ் பேசும் இனத்திற்கு எதிராக பாயும் பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்கக் கோரி நடைபெற்று வரும் கையெழுத்துப் போராட்டம் வரவேற்கத்தக்கது. ஆனால் தற்போதைய சூழலில் இந்த சட்டம் ரத்து செய்யப்படுமா என்பது கேள்விக்குறியாக உள்ளது.

முஸ்லிம் பெண்கள் முன்னெடுத்த...

நூற்றுக்கும் மேற்பட்டோர் இந்த கவனயீர்ப்பில் கலந்துகொண்டனர்.

தனியார் சட்டம் (முஸ்லிம் திருமண, விவாகரத்து சட்டம்) எமது அடிப்படை உரிமை எனும் தொனிப்பொருளில் இந்த கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, "முஸ்லிம் திருமணம் மற்றும் விவாகரத்து தனியார் சட்டத்தால் ஆளப்பட வேண்டும்", "சிறுபான்மையினரின் மத சுதந்திரத்தை அழிக்காதே", "முஸ்லிம்களின் திருமண சட்டம் அடிப்படை உரிமை", "தனியார் சட்டத்தை நீக்குவது யாப்புக்கு முரண்பாடானது" இது போன்ற மூன்று மொழிகளிலும் எழுதப்பட்ட சுலோகங்களை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டக்காரர்கள் அமைதியான முறையில் ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

இலங்கையில் முஸ்லிம் தனியார் சட்டமானது மக்களின் நேசத்தை வென்ற தலைவர்களால் போராடிப் பெறப்பட்டதாகும் என ஆர்ப்பாட்டக்காரர்கள் இதன்போது தெரிவித்தனர்.

இந்த சட்டங்களை பற்றியும் அவற்றை சட்டமாக்கிய தலைவர்கள் பற்றியும் இன்றும் உலகில் பேசிக்கொண்டிருக்கின்றார்கள்.

இச்சட்டங்களே இலங்கை பல மதங்களை கொண்ட மனிதர்கள் வாழும் பன்முக கலாசார நாடாக உலகில் பார்க்கப்படுகிறது.

இலங்கையில் இந்த சட்டத்தை முழுமையாக இல்லாமல் ஆக்க வேண்டும் என்று ஒரு தரப்பினரும், சில மாற்றங்களை செய்ய வேண்டும் என்று இன்னொரு தரப்பினரும் தெரிவித்து வருகின்றனர்.

அத்துடன், இதுதொடர்பில் ஒருசில அரச சார்பற்ற அமைப்புக்கள் ஒன்றினைந்து, முஸ்லிம் தனியார் சட்டம் தொடர்பில் பிழையான கருத்துக்களை எடுத்து ரைத்து அதனை முழுமையாக இல்லாமல் செய்ய வேண்டும் என்ற வகையில் ஜெனீவாவுக்கு அறிக்கை ஒன்றினை சமர்ப்பித்துள்ளனர்.

எனவே, முஸ்லிம் தனியார் சட்டத்தில் சில மாற்றங்களை ஏற்படுத்தப்பட வேண்டுமே தவிர, அதனை முழுமையாக இல்லாமல் செய்வதற்கு ஒருபோதும் அனுமதிக்க கூடாது என்றும் ஆர்ப்பாட்டக்காரர்கள் குறிப்பிட்டனர்.

இதனையடுத்து, சர்வதேச மனித உரிமை இயக்கங்கள் அமைப்பின் இலங்கைக்கான ஊடக ஒருங்கிணைப்பாளர் மஹ்ரூப் முஹம்மது ரிஸ்வியிடம் மகஜர் ஒன்றும் ஆர்ப்பாட்டக்காரர்களால் கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

பாரம்பரியம் நிகழ்ச்சியில் ... (03 ஆம் பக்கத் தொடர்)

திருமதி சுஜாத்தா அத்தநாயக்க சிறப்பதிதியாக கலந்து, தன் முஸ்லிம் சேவையுடனான அனுபவங்களை பகிர்ந்து கொள்கிறார். சுஜாத்தா அத்தநாயக்க, இலங்கை வானொலியில், தமிழ்,சிங்கள மொழிகளில் அதிகமான பாடல்கள் பாடிய முதல் தர பாடகராவார்.

இவர் இலங்கையின் முதலாவது பெண் இசையமைப்பாளர் என்ற பெருமைக்குரியவர்.

தொடராக 1965, 1966 ஆம் ஆண்டுகளுக்கான "சரசவி" விருதும், 1967,1968 ஆம் ஆண்டுக்களுக்கான "சுவர்ண சங்க" விருதும் இவருக்கு கிடைத்தது. சிங்களம், தமிழ் மொழிகளில் மட்டுமல்லாது அதிகளவான மொழிகளில் பாடிய பெருமைக்கும் உரியவர்.

எம்.எஸ்.எம். ஜின்னா செவ்வி காணும் இந்நிகழ்ச்சியினை முஸ்லிம் சேவைப்பணிப்பாளர், எம்.ஜே.பாத்திமா ரினூஸியா தயாரித்து வழங்குகிறார்.

வெளிநாட்டிலுள்ள... (03 ஆம் பக்கத் தொடர்)

மற்றும் தொழில் நிபுணர்களுக்கு நம்பகமான மற்றும் யதார்த்த பொறிமுறையின் தேவையை பூர்த்தி செய்வதே இதன் முக்கிய நோக்கமாகும்.

உயர்கல்வி மற்றும் திறனை வளர்ப்பதற்கு அதிக வாய்ப்புகளை வழங்கல், கல்வி ஒத்துழைப்பு மற்றும் ஆராய்ச்சி ஒத்துழைப்பை மேம்படுத்துதல் உள்ளிட்ட பரந்த நோக்கத்தின் கீழ் தேசிய அறிவியல் அறக்கட்டளை மற்றும் இலங்கை மென்பொருள் மற்றும் சேவை நிறுவனங்களின் சங்கம் (SLASSCOM) ஆகியவற்றிற்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தமும்இதன்போது கையெழுத்தானது.

கலாநிதி பந்துல விஜே (அமெரிக்கா), பேராசிரியர் டிலந்த பெர்னாண்டோ (கனடா), பேராசிரியர் மொன்டி காஸிம் (ஜப்பான்), பேராசிரியர் சாந்தி மெண்டிஸ் (ஸ்விட்சர்லாந்து), பேராசிரியர் டிலந்த அமரதுங்க (ஐக்கிய இராச்சியம்), பேராசிரியர் சமன் ஹல்கமுகே (அவுஸ்திரேலியா) ஆகியோர் காணொளி தொழில்நுட்பம் ஊடாக நிகழ்வில் கலந்து கொண்டனர்.

குறித்த நிகழ்வில் தேசிய அறிவியல் அறக்கட்டளையின் தலைவர் பேராசிரியர் ரஞ்சித் சேனாரத்ன உள்ளிட்ட தேசிய அறிவியல் அறக்கட்டளையின் உறுப்பினர்கள் மற்றும் இலங்கை மென்பொருள் மற்றும் சேவை நிறுவனங்களின் சங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தி அதன் உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

இராஜாங்க அமைச்சர்... (03 ஆம் பக்கத் தொடர்)

சனத் நிசாந்தவிற்கும் வீதி அபிவிருத்தி தொடர்பில் இழுபறி நிலை ஏற்பட்டிருந்ததோடு கெபினட் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவுடனும் குழப்பநிலை ஏற்பட்டுள்ளதாக அறிய வருகிறது.இந்த விவகாரம் தொடர்பில் கடந்த அமைச்சரவை கூட்டத்திலும் ஆராயப்பட்டது தெரிந்ததே. (பா)

45 கொள்கலன்கள்... (03 ஆம் பக்கத் தொடர்)

கடைசியாக 45 கொள்கலன்கள் துறைமுகத்தில் உள்ள சிஐசி ரீ முனையத்தில் இருந்து திருப்பி அனுப்பப்பட்டது.

இதற்கு முன்னர் மீள் ஏற்றுமதி செய்யப்பட்ட அனைத்து கழிவுகளும் நாட்டிற்கு வந்துள்ளதாக பிரித்தானிய சுற்றாடல் அதிகாரசபை இலங்கை சுங்கத்திற்கு அறிவித்துள்ளதாக சுங்க ஊடகப் பேச்சாளர் பிரதிப் பணிப்பாளர் சுதத்த டி சில்வா தெரிவித்துள்ளார். (பா)

சிங்கப்பூரின் நிபுணத்துவ... (03 ஆம் பக்கத் தொடர்)

குழுவொன்றை இங்கு அனுப்புவது குறித்தும் இரு அமைச்சர்களும் ஆராய்ந்தனர்.

மேலும் குற்றவியல் சட்டம், மத நல்லிணக்கச் சட்டம் மற்றும் சிங்கப்பூரின் உள்நாட்டுப் பாதுகாப்புச் சட்டம் உள்ளிட்ட பல முக்கிய சட்டங்களில் சமீபத்தில் செய்யப்பட்ட திருத்தங்கள் பற்றிய விளக்கங்கள் இதன்போது நீதி அமைச்சருக்கு வழங்கப்பட்டுள்ளன.

அத்தோடு இந்த சந்திப்பின்போது இலங்கைக்கும் சிங்கப்பூருக்கும் இடையிலான ஒத்துழைப்பு குறித்து விவாதம் இடம்பெற்றதாகவும் நீதி அமைச்சு தெரிவித்துள்ளது.

கொலையில் முடிந்த... (03 ஆம் பக்கத் தொடர்)

சந்தேகநபர் பிரதேசத்திலிருந்து தலைமறைவாகியுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர். மொறட்டுவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

நாட்டை கட்டியெழுப்புவதற்கு...

கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

அபிவிருத்திச் செயற்பாடுகளில் தனியார் துறையினரின் பங்களிப்பைப் பெறும் நோக்கில் இந்தக் கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டது. அந்நியச் செலாவணி உருவாக்கம், அரச நிதிக் கொள்கை, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மேம்பாடு, முதலீட்டு ஊக்குவிப்பு, ஏற்றுமதி வளர்ச்சி, புதுப்பிக்கத்தக்க வலு சக்தி, விவசாய உற்பத்தி, போதுமான உர விநியோகம் மற்றும் சுற்றுலாத்துறை மேம்பாடு ஆகிய துறைகள் குறித்து இதன் போது கவனம் செலுத்தப்பட்டது.

புதுப்பிக்கத்தக்க வலுசக்தி, பசுமை விவசாயம், தொழில்நுட்ப பூங்காக்கள் உட்பட பல துறைகளில் பாரிய முதலீடுகள் மேற்கொள்வது அதிக அந்நிய செலாவணியை பெற சிறந்த வாய்ப்பை ஏற்படுத்தும் என்றும் ஜனாதிபதி கூறினார்.

நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு உள்ளூர் தொழில் முயற்சியாளர்கள் வழங்கிய ஆதரவைப் பாராட்டிய ஜனாதிபதி, உலகளாவிய தொற்றுநோய்க்கு முகங்கொடுத்து அரசாங்கம் தனது பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்ப முற்படுகையில், சில குறுகிய மனப்பான்மை கொண்டவர்களின் தவறான கருத்துகளை சீர்செய்யும் திறன் வர்த்தக சமூகத்திற்கு இருப்பதாகவும் ஜனாதிபதி இதன் போது தெரிவித்தார்.

கடந்த இரண்டு வருடங்களில் நிர்மாணத்துறையில் ஏற்பட்ட புத்துயிர் காரணமாக சீமெந்துக்கான தேவை அதிகரித்துள்ளதாகவும் இதன் காரணமாக சீமெந்து தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும் அமைச்சர் பசில் ராஜபக்ஷ இங்கு சுட்டிக்காட்டினார்.

சந்தையில் அத்தியாவசியப் பொருட்களுக்கு தட்டுப்பாடு இல்லை என சுட்டிக்காட்டிய அமைச்சர், மருந்துகள் தவிர்ந்த பல பொருட்களின் விலைக் கட்டுப்பாட்டை நீக்குவதற்கு எடுக்கப்பட்டுள்ள தீர்மானத்தை வியாபார சமூகம் தவறாகப் பயன்படுத்திக் கொள்ளக் கூடாது எனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

நாட்டின் பொருளாதாரம் தொடர்பான பொய்ப் பிரசாரங்களால் வெளிநாட்டு முதலீட்டு வாய்ப்புகளை இழக்க நேரிடுவதாக மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் இங்கு சுட்டிக்காட்டினார். அனைத்து வெளிநாட்டுக் கடன்களையும் திருப்பிச் செலுத்துவதுடன் கடன் அல்லாத முதலீடுகளை ஈர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் தெரிவித்தார். அரசாங்கத்தின் கோவிட் கட்டுப்பாட்டுத் திட்டத்தைப் பாராட்டிய தொழில் முயற்சியாளர்கள் அதன் காரணமாக தங்களது தொழில்கள் பாதுகாக்கப்பட்டதாக அவர்கள் கூறினர். சில நாடுகள் கொவிட் தொற்றை திறம்பட கட்டுப்படுத்த தவறியதன் காரணமாகவும் இலங்கை அதனை நல்ல முறையில் கட்டுப்படுத்தியதன் காரணமாக இலங்கைக்கு அதிகளவான வாய்ப்புகள் கிடைத்துள்ளதாக அவர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

கொரோனாவுக்குப் பிந்தைய கால கட்டத்தில் சுற்றுலாத் துறையில் நாடு மிகப்பெரிய மறுமலர்ச்சியைக் கண்டுள்ளது. அதன் மேம்பாட்டுக்காக சுற்றுலா துறையினரின் வசதிகளை மேம்படுத்த வேண்டியதன் அவசியத்தை தொழில் முயற்சியாளர்கள் குறிப்பிட்டனர்.

ஜனாதிபதியின் செயலாளர் காமினி செனரத், ஜனாதிபதியின் பிரதம ஆலோசகர் லலித் வீரதுங்க, நிதி அமைச்சின் செயலாளர் எஸ்.ஆர். ஆட்டிகல மற்றும் பல்வேறு துறைகளை பிரதிநிதித்துவப்படுத்தும் அதிகாரிகள் மற்றும் தொழில் முயற்சியாளர்கள் பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

நீதி மறுசீரமைப்பு நிகழ்ச்சித் திட்டம்...

அமைப்பால் 1 மில்லியன் யூரோவும் (இலங்கை மதிப்பில் ஏறத்தாழ 225 மில்லியன் ரூபாய்) வழங்கப்பட்டுள்ளதுடன்,நீதித் துறையில் உள்ள சகல தரப்பினரதும் ஒத்துழைப்புடன் நான்கரை ஆண்டுகளினுள் இந்த நிகழ்ச்சித் திட்டத்தைச் செயற்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

நீதிக்கான அணுகலை மேம்படுத்தும் நோக்கை அடிப்படையாகக் கொண்டு நடைமுறைப்படுத்தப்படும் இந் நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடாக நீதித் துறையின் வெளிப்படைத் தன்மை மற்றும் பொறுப்புணர்வை மேம்படுத்துதல், தரமான, வினைத்திறனான சேவைகளை வழங்குவதை உறுதிப்படுத்துதல் ஆகியவை நீதி அமைச்சின் எதிர்பார்ப்பாவதுடன், இந் நிகழ்ச்சி நீதி அமைச்சின் மறுசீரமைப்புச் செயற்தொடரின் பிரதான நிகழ்ச்சித் திட்டமாக செயற்படுத்தப்படவுமுள்ளது.

இதைத் தவிர இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடாக பெண்கள் மற்றும் சிறுவர்களின் நீதிக்கான அணுகலை மேம்படுத்தல், வர்த்தக விடயங்கள் தொடர்பிலான தகராறுகளைத் தீர்த்துவைக்கும் மாற்றீட்டுப் பொறிமுறைகளுக்கு உதவியளித்தல் மற்றும் டிஜிட்டல் தொழில்நுட்பப் பாவனையின் மூலம் நீதித் துறையின் செயற்பாடுகளின் வினைத்திறனை மேம்படுத்தல் தொடர்பில் முக்கிய கவனம் செலுத்தப்படும்.

வினைத்திறன் மற்றும் சுயாதீன நீதி அமைப்பைப் பேணிச் செல்வது இலங்கை குடியரசின் எதிர்காலத்துக்கான அடிப்படைத் தேவையாக அமைகிறது. சுயாதீன நீதித்துறையை உறுதிப்படுத்துவதுடன் சட்டத்தின் ஆதிக்கத்தைப் பாதுகாப்பதற்கும் இலங்கையின் நீதி வழங்கல் செயற்பாட்டை வலுப்படுத்த வேண்டுமெனவும்,

தர்கா நகர் வாசகர் வட்டத்தின் ஏற்பாட்டில் தினகரனின் மாபெரும் கலை, கலாசார மற்றும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டிகள், பரிசளிப்பு கொண்ட முப்பெரும் விழா எதிர்வரும் மார்ச் மாதம் 27ஆம் திகதி நடைபெறவுள்ளது. இதற்கான சகல ஏற்பாடுகள் தொடர்பிலான கலந்துரையாடல் தினகரன் ஆசிரிய பீடத்தில் நேற்று நடைபெற்றது. முப்பெரும் விழா ஏற்பாட்டுக் குழுத் தலைவர் பாஸி ஸுபைர் நேற்று தினகரன், வாரமஞ்சரி பத்திரிகைகளின் ஆசிரியர் செந்தில்வேலவரிடமிருந்து ஆவணங்களை பெற்று கொண்ட போது பிடிக்கப்பட்ட படம்.

மாத்தளையில் சேதன பசளையில் செழிப்பாக வளர்ந்த நெற் செய்கை

மாத்தளை சுழற்சி நிருபர்

சேதன ப் பசளையை பயன்படுத்தி மே ற்கொள்ளப்பட்ட நெற்செய்கை சிறந்த முறையில் செழிப்பாக காணப்படுவதாக மஹவளைப் பிரதேச விவசாயி ஒருவர் தினகரனுக்குத் தெரிவித்தார்

சேதனப் பசளை மாத்திரம் பயன்படுத்தி நெற்செய்கையில் ஈடுபட்டுவரும் மஹவளை புஹுமியாவ பகுதியைச் சேர்ந்த விவசாயி சிசிர திசாநாயக்கவே இவ்வாறு தெரிவித்தார்

எனது வீட்டு தோட்டத்தில் தயாரிக்கப்பட்ட சேதனப் பசளை மற்றும் அரசினால் வழங்கப்பட்ட நச்சுத் தன்மையற்ற உர வகைகளை மாத்திரமே இம்முறை பெரும் போகத்தில் தனது வயல் நிலத்தில் செய்கை பண்ணப்பட்ட நெற்செய்கைக்கு பயன் படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் வேளாண்மை செழிப்பாக காணப்படுவதுடன் அதிக விளைச்சலும் கிடைக்குமென தெரிவித்த அவர், நச்சு பாவனையற்ற விவசாய விளைச்சலை எதிர்காலத்தில் செயற்படுத்துவது அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும்

கலைஞர்களின் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி

74வது "சுதந்திர தினம்" கொண்டாடப்பட்டதை முன்னிட்டும் இலங்கையின் மக்கள் திலகமாக போற்றப்பட்ட மறைந்த சகோதர மொழி திரைப்படக் கலைஞர் விஜயகுமாரதுங்கவின் 34ஆவது ஆண்டு நினைவு கூரும் நோக்கோடும் கண்ணகி கலாலயம் மற்றும் N.M.புரடக்சன் ஏற்பாட்டில் கலைஞர்கள் மட்டும் கலந்து கொள்ளும் "மாபெரும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி" சுகாதார வழிமுறைகளை பின்பற்றி ஞாயிற்றுக்கிழமை விஜயகுமாரதுங்க விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

சிரேஷ்ட நடிகர்கள், இளம் நடிகர்கள், இசையமைப்பாளர்கள், பாடகர்கள், நடனத்தில் புகழ் பூத்தோர், இயக்குனர்கள், கலை இயக்குனர்கள், ஒப்பனைக் கலைஞர்கள் தயாரிப்பாளர்கள், புகைப்படப் பிடிப்பாளர்கள், ஒளிப்பதிவாளர்கள், ஊடகவியளாளர்கள், ஓவியர்கள், எழுத்தாளர்கள் என பல்துறை சார்ந்த கலைஞர்கள் பலர் பங்குபற்றும் சங்கம நிகழ்ச்சியாக அமையவுள்ளது.

இதில் கண்ணகி கலாலய கலைஞர்கள் சங்கத்தின் பிராந்திய மட்டத்தில் இயங்கும் கலை உறுப்பினர்களும் கலந்து கொள்கின்றனர். விளையாட்டு துறையிலும் எம்மவர்கள் எமது கலைஞர்கள் மிளிர வேண்டும் என்பதே எமது நோக்கமும் முயற்சியும்.

திகதி 20.02.2022 ஞாயிற்றுக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 4684
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 9,969,300.00
ஆங்கில எழுத்து X | வெற்றி இலக்கங்கள் 9 9 3 5 6 4 | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 46,099,468.00

கொவிசெத Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் : 2979
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,508,340.00
ஆங்கில எழுத்து S | வெற்றி இலக்கங்கள் 09 37 73 77 | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 66,829,322.40

இரண் வெற்றி Mega POWER மெகா பவர் 23+
சீட்டிழுப்பு இலக்கம் 1032 ரூ. 3,181,600.00
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 236,994,758.00
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து Y | சுப்பர் இலக்கம் 25 | வெற்றி இலக்கங்கள் 14 20 58 59

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 714
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,301,600.00
ஆங்கில எழுத்து X | வெற்றி இலக்கங்கள் 43 60 65 77 | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 98,291,148.00

NLB ஹந்தஹன ராசி சுப பலன்
சீட்டிழுப்பு இலக்கம் : 0025
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,901,680.00
இலக்கினம் கடகம் | வெற்றி இலக்கங்கள் 04 35 45 49 | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,550,342.72

ஜாதிக சம்பத JATHIKA SAMPATHA
சீட்டிழுப்பு இலக்கம் : 1214
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,747,780.00
வெற்றி இலக்கினம் கடகம் | வெற்றி இலக்கங்கள் 3 0 1 2 2 4 | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,103,428.80

ஜாதிக லொத்தர் மண்டலய
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
இலக்கம் 32, தேஷமான்ய N.W.L. முதலிகே மாவத, கொழும்பு 01
தொலைபேசி: 0114 607 000, 0112 324 324
பெக்ஸ்: 0114 669 416

தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்திச் சபை

NLDB

விலைமனுக்களுக்கான அழைப்பு

தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்திச் சபையின் தலைமை அலுவலகத்திற்கு (ஒருவருட காலத்திற்கு) பாதுகாப்புச் சேவைகளை வழங்குவதற்காக அரச பாதுகாப்பு அமைச்சில் பதிவு செய்துள்ள ஆகக் குறைந்தது 10 வருட கால பாதுகாப்பு அனுபவத்துடன் பாதுகாப்புச் சேவை வழங்கும் நிறுவனங்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

	தேவையான உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை	விலைக்கோரல் பிணைமுறி (ரூபா)
பாதுகாப்புச் சேவை வழங்குதல்	06	50,000.00

மீளளிக்கப்படாத 500.00 ரூபா கட்டணத்தை பிரதான அலுவலகத்தின் முகாமையாளருக்குச் (நிதி) செலுத்தி 2022 பெப்ரவரி மாதம் 21ஆம் திகதி முதல் 2022 மார்ச் மாதம் 11ஆம் திகதி ந.ப. 12.00 மணி வரை மட்டுமே விலைக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம். விலைமனு ஆவணங்களைப் பெற்றுக்கொள்வதற்கான வேண்டுகோள் கடிதத்தை தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி அதிகார சபையின் வழங்கல் பிரிவிற்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைக்கோரல் ஆவணங்களை 2022 மார்ச் மாதம் 14ஆம் திகதி பி.ப. 2.15 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் கொழும்பு-05, நாராஹென்பிட்டி, நாவல வீதி, 40ஆம் இலக்கம், தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி அதிகார சபையின் தலைவருக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது அவ்விடத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும் என்பதுடன் அன்றைய தினமே பி.ப. 2.30 மணிக்கு விலைமனுக்கள் திறக்கப்படும்.

தலைவர்,
தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்திச் சபை,
இல. 40, நாவல வீதி,
நாராஹென்பிட்டி, கொழும்பு-05.
தொலைபேசி இல. 0112501701/2

பெறுகை அறிவித்தல்

போதனா வைத்தியசாலை - களுத்துறை

மருத்துவ உபகரணங்களைக் கொள்வனவு செய்தல் - 2022

களுத்துறை - போதனா வைத்தியசாலையின் பெறுகைக் குழுத் தலைவரினால் களுத்துறை போதனா வைத்தியசாலைக்குத் தேவையான மருத்துவ மற்றும் ஆய்வுகூட உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக பின்வரும் வகையில் விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

No	Item Name	Requested Unit	No of Item	Bid Security Rs.
1	A - Scanner Machine	Eye Unit	01	30,000.00
2	Auto Kerato- Refractometer	Eye Unit	01	30,000.00
3	Slit Lamp	Eye Unit	02	30,000.00
4	Centrifuge	Lab	01	15,000.00

- மேற்படி மருத்துவ உபகரணங்களுக்குத் தேவையான விலைக்கோரல் ஆவணங்களை களுத்துறை போதனா வைத்தியசாலை நிதிப் பிரிவின் பெறுகைக் கிளையிலிருந்து 2022-02-22ஆம் திகதி முதல் 2022-03-12ஆம் திகதி வரையான அலுவலக நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 02.00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.
- ஒரு உருப்படிக்கு மீளளிக்கப்படாத கட்டணமாக 2,000.00 ரூபா அறவிடப்படும்.
- ஒவ்வொரு மருத்துவ உபகரணங்களுக்காகவும் வெவ்வேறாக விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
- 2022-03-14ஆம் திகதி மு.ப. 10.30 மணி வரை விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும். இந்த கேள்வி 2022-03-14ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு முடிவுறுத்தப்படும் என்பதுடன் அதனையடுத்து உடன் திறக்கப்படும். மேலதிக விபரங்களுக்கு 034 - 2222261/62 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.

தலைவர்,
பிராந்திய பெறுகைக் குழு,
போதனா வைத்தியசாலை,
களுத்துறை.

கடற்றொழில் அமைச்சு

அலங்கார மீன்கள், நன்னீர் மீன்கள், இறால்களை வளர்த்தல், கடற்றொழில் துறைமுகங்கள் அபிவிருத்தி, பலநாள் கடற்றொழில் அலுவல்கள் மற்றும் மீன் ஏற்றுமதி இராஜாங்க அமைச்சு

இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனம்

சிற்றுண்டிச்சாலையை குத்தகைக்கு வழங்கல் 2022/2023
Tender No: CFC/SD/Can/2022 - 2023

இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபன முகத்தவாரம் பிரதான காரியாலயத்தில் அமைந்துள்ள சிற்றுண்டிச்சாலையை நடாத்திச் செல்வதற்கு அது தொடர்பில் முன் அனுபவம் கொண்டவர்களிடமிருந்து தேசிய மனுக்கோரல் கோட்டி முறைக்கமைய விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

இது தொடர்பில் ஆர்வமுள்ள மனுதாரர்கள் மீளச்செலுத்தப்படாத **ரூபா. மூவாயிரம் (3,000/-)** ஐ காசாக செலுத்தி 2022.02.22 ஆம் திகதி தொடக்கம் 2022.03.15 ஆம் திகதி **பி.ப 03.00 மணி** வரை காரியாலய வேலை நாட்களில் விண்ணப்பங்களை பெற்றுக்கொள்ள முடியும். முத்திரையிடப்பட்ட மனுக்களை **ரூபா பத்தாயிரம் (10,000/-)** மனுக்காப்புறுதியுடன் 2022.03.16 ஆம் திகதி **பி.ப 02.00 மணிக்கு** அல்லது அதற்கு முன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விலாசத்தில் (நிர்வாக அலுவலகத்தில்) இடப்பட்டுள்ள மனுக்களை சேகரிப்பதற்காக வைக்கப்பட்டுள்ள பெட்டியில் இட வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு supply@cfc.gov.lk மின்னஞ்சல் அல்லது தொலைபேசி இலக்கம் :- 011-2540092, 071-2045355 இன் மூலம் இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் **வழங்கல் முகாமையாளரை** தொடர்பு கொள்வதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியும். மனு தொடர்பான கூட்டம் 2022.03.03 ஆம் திகதி **மு.ப 10.30** மணிக்கு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விலாசத்தில் இடம்பெறும்.

தலைவர்,
இலங்கை கடற்படை கூட்டுத்தாபனம்
ரொக் ஹவுஸ் ஒழுங்கை,
முகத்துவாரம், கொழும்பு 15.

பதவி வெற்றிடங்கள்

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை

(கூட்டுறவு சேவைகள், சந்தைப்படுத்தல் அபிவிருத்தி மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சு)

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையில் பின்வரும் பதவிகளுக்குப் பொருத்தமான விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

01. உதவி பணிப்பாளர் பதவி (நிருவாகம் மற்றும் மனித வளங்கள்) – எம்எம்.1 – 1 – (01 பதவிகள்)

வேலை விபரணம்:
மனிதவலு திட்டமிடல், ஆட்சேர்ப்புக்கள் மற்றும் ஊழியர்களைத் தெரிவு செய்வதற்குத் தேவையான உதவியினை வழங்குதல், பொருட்கள் மற்றும் சேவைகளின் அனைத்துப் பெறுகைகளினையும் மேற்பார்வை செய்தல், மனித வளங்கள் கொள்கையினை அமுலாக்குவதில் உதவியளித்தல், நிறைவேற்று அதிகாரமற்ற மட்டத்திலுள்ள ஊழியர்களின் ஒழுக்காற்று விடயங்களினைக் கையாளுதல், உதவிப் பணிப்பாளர் மட்டத்திற்கு கீழேயுள்ள ஆளணியினருக்குப் பொறுப்பாக இருத்தல், உத்தியோகபூர்வ போக்குவரத்து வசதிகளினை நிருவகித்தல், பிரசுரங்களினை வெளியீடு செய்தல், பொருட் பதிவேடு விடயங்கள் மற்றும் களஞ்சியசாலைகள் மேற்பார்வை செய்தல், வருகை, லீவு மற்றும் தாபன விடயங்களை மேற்பார்வை செய்தலும் கண்காணித்தலும், உரிய அரசாங்க சுற்றிக்கைகளினை இற்றைப்படுத்துதல், பதவியினர் இடமாற்றல் விடயங்களைக் அமுல்படுத்துதல், மனித வள முகாமைத்துவ முறைமைகளின் அமுலாக்கத்தினை கண்காணித்தலும் அமுலாக்குதலும், தேவையான பகுப்பாய்வுகள் குறித்து பயிற்சியளித்தல் மற்றும் பயிற்சி திட்டமிடல்களை விருத்தி செய்தல் மற்றும் அமுல்படுத்துதல், ஊழியர் பயன்கள் குறித்த அமுலாக்கங்களினைக் கண்காணித்தல், அனைத்து சேவை வழங்குனர்களின் உடன்படிக்கை அமுலாக்கலினை ஒருங்கிணைத்தல் மற்றும் பணிப்பாளரினால் (மனித வள மற்றும் நிருவாகம்) உரித்தளிக்கப்படும் வேறு ஏதேனும் கடமைகளினை நிறைவேற்றுதல்.

தகைமைகள்:
வெளியக: மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து மனித வள முகாமைத்துவம், ஆளணி முகாமைத்துவம், வியாபார நிருவாகம் மற்றும் பொது நிருவாகம் ஆகியவற்றில் ஒரு பட்டமொன்றினைப் பெற்றிருப்பதுடன் கூட்டுத்தாபனம், சபை அல்லது புகழ் பெற்ற வர்த்தக தாபனமொன்றில் மனித வள முகாமைத்துவம் மற்றும் நிருவாகத்தில் குறைந்தது 03 வருட தகைமை அனுபவத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

உள்ளக: பாவனையாளர் அலுவல்கள் சபையின் கனிஷ்ட முகாமையாளர் வகையீட்டில் (ஜேஎம் 1-1) இலுள்ள பதவியொன்றின் தரம் I இல் குறைந்தது 05 வருட திருப்திகரமான சேவையினை ஆற்றியிருத்தல் வேண்டும்.

சம்பள அளவுத்திட்டம்: முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றறிக்கை இல.02/2016 இன் நியதிகளின்படி,
MM 1-1 2016: ரூபா.(53,175-10x1,375-15x1,910-95,575)

வயது: 30 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். ஆகக்கூடிய வயதெல்லையானது உள்ளக பரீட்சார்த்திகளுக்குப் பொருந்தாது.

தொழில்சார் கொடுப்பனவு: முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றறிக்கை இல.02/2016 இன் நியதிகளின்படி, தொழில்சார் கொடுப்பனவானது வழங்கப்படும்.

(02) சட்ட அமுலாக்கல் அலுவலர் பதவி (தரம் II) ஜேம்.1 – 1 – (03 பதவிகள்)

வேலை விபரணம்:
பாவனையாளர் முறைப்பாடுகளினைக் கையாளுதல், சட்டத்தின் ஏற்பாடுகளின் நியதிகளுக்கமைவாக விசாரணைகளினை நடாத்துவதற்குத் தேவையான உதவுகையினை வழங்குதல், நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் தொடர்பில் அறிக்கைகள் மற்றும் குற்றப் பத்திரங்களைத் தயாரித்தல், நீதிமன்றத்தில் வழக்குகளை தாக்கல் செய்தலும் அதிகாரசபையின் சார்பில் நீதிமன்றில் ஆஜராதல், நீதிமன்றத்தில் வழக்குகளை நடாத்துதல், சட்டமா அதிபர் திணைக்கள அதிகாரிகள் மற்றும் ஏனைய சட்டவாதிகளுடன் இணைந்து அதிகாரசபைக்கெதிராக தாக்கல் செய்யப்பட்ட நீதிமன்ற வழக்குகளை கையாளுதல் மற்றும் பணிப்பாளரினால் உரித்தளிக்கப்படும் வேறு ஏதேனும் கடமைகளினை நிறைவேற்றுதல்.

தகைமைகள்:
வெளியக : இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சட்ட இளமாணி பட்டத்தினைக் கொண்டிருக்கும் சட்டத்தரணி
உள்ளக : மேலே வெளியக விண்ணப்பதாரிகளுக்குத் தேவைப்படும் தகைமைகளினைக் கொண்டிருத்தல்.
சம்பள அளவுத்திட்டம்: முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றறிக்கை இல.02/2016 இன் நியதிகளின்படி, JM 1-1 - 2016: ரூபா. (42,600–10x755–18x 1,135 – 70,580)
வயது : 22 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். ஆகக்கூடிய வயதெல்லையானது உள்ளக பரீட்சார்த்திகளுக்குப் பொருந்தாது.

பொதுவான நிபந்தனைகள்:
ஏனைய கொடுப்பனவுகள் : சம்பளத்திற்கு மேலதிகமாக வாழ்க்கைச் செலவுப் படி மற்றும் உரிய அரசாங்க சுற்றறிக்கைகளின் நியதிகளின்படி, ஏற்புடைய ஏனைய அனைத்துப் படிகளும் வழங்கப்படும்.
நியமனத்தின் தன்மை ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் என்பவற்றின் பங்களிப்புக்கும் உரிய அரசாங்க சுற்றறிக்கைகளின்படியான ஏற்பாடுகளுக்கு உரித்துடையதுமான நிரந்தரப் பதவி.
ஆட்சேர்ப்பின் போது சம்பளம் வெளியிலிருந்து ஆட்சேர்ப்புச் செய்யப்படுவோர் சம்பள அளவுத்திட்டத்தின் ஆரம்ப படிநிலையில் அமர்த்தப்படுவார்கள். உள்ளக ரீதியாக ஆட்சேர்ப்புச் செய்யப்படும் ஆட்களின் சம்பளமானது தாபனவிதிக் கோவையின் அத்தியாயம் VII இன் ஏற்பாடுகளின் நியதிகளின்படி தீர்மானிக்கப்படும்.
பதவியில் உறுதிப்படுத்துதல்: தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரிகள் மூன்று வருட தகுதி காண் காலத்தில் நியமிக்கப்படுவார்கள். அவர்கள் தகுதி காண் காலத்தில் நிறைவேற்றும் செயலாற்றுகை மற்றும் திருப்பதிகரமான நடத்தை என்பவற்றின் அடிப்படையில் அவர்களின் பதவியில் உறுதிப்படுத்தப்படுவார்கள். ஏற்கனவே பதவியில் உறுதிப்படுத்தப்பட்ட உள்ளக ரீதியாக தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் ஒரு வருட காலத்திற்கு பதில் கடமையாற்றுதல் வேண்டும்.
ஆட்சேர்ப்பு நடைமுறை: நியமனம் வழங்கும் அதிகாரியினால் நியமிக்கப்படும் நடுவர் குழாமொன்றினால் நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும்.
நேர்முகப் பரீட்சை
நேர்முகப் பரீட்சைக்கான புள்ளிகள் பின்வருமாறு ஒதுக்கீடு செய்யப்படும்:

தொடர்புடைய மேலதிக அனுபவம்	- 30 புள்ளிகள்
தொடர்புடைய மேலதிக தகைமை	- 30 புள்ளிகள்
ஏனைய திறமைகள்	- 15 புள்ளிகள்
நேர்முகப் பரீட்சையில் காட்டும் திறமை	- 25 புள்ளிகள்
மொத்தம்	- 100 புள்ளிகள்

ஏனையவை:
இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
நாட்டின் எப்பகுதியிலும் சேவையாற்றுவதற்குத் தயாராகவிருத்தல் வேண்டும்.
பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றக்கூடிய வகையில் உடல் மற்றும் உள ரீதியான ஆரோக்கியத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.
சிறந்த நல்லொழுக்கத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.
தகுதியுடைய விண்ணப்பதாரிகள் இந்த விளம்பரத்தின் கீழே தரப்பட்டுள்ள முகவரிக்குப் பதிவுத் தபாலில் தமது விண்ணப்பங்களை 2022.03.07 ஆம் திகதி அல்லது அதற்கு முன்பாக இந்த விளம்பரம் பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து 14 நாட்களினுள் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். தகைமைகளினை நிரூபிப்பதற்கான சான்றிதழ்களின் பிரதிகளும் விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். அரசாங்க நிறுவனங்களின் பணியாற்றும் ஊழியர்கள் தமது விண்ணப்பங்களை தமது நிறுவனத் தலைவரினூடாக அனுப்பி வைத்தல் வேண்டும். மேற்படித் தேவைப்பாடுகளினை நிறைவு செய்யாத விண்ணப்பங்கள், முறையாகப் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் மற்றும் விண்ணப்ப முடிவுத் திகதிக்குப் பின்னர் அனுப்பி வைக்கப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பிக்கும் பதவிப் பெயரானது தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் தெளிவாகக் குறிப்பிடப்படுதல் வேண்டும். தயவு செய்து தங்களின் விண்ணப்பங்களை கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

பணிப்பாளர் நாயகம்,
பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை,
02 ஆவது மாடி, சதொச செயலக கட்டிடம்,
இல.27, வொக்ஸோல் வீதி,
கொழும்பு 02.

தினகரன் வடக்கின் உதயம்

Vadakkin Uthayam

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ். மாவட்ட மாநாடு

யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தவிசாளருமான அங்கஜன் இராமநாதனின் தலைமையில், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ் மாவட்ட மாநாடு 2022 நேற்று முன்தினம் கரவெட்டி கொலின்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் பெருந்திரளான மக்கள் மத்தியில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தலைவரும், முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன, அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, இராஜாங்க அமைச்சர்களான தயாசிறி ஜயசேகர, துமிந்த திசாநாயக்க, பாராளுமன்ற உறுப்பினர்களான சாந்த பண்டார, கலாநிதி சுரேன் ராகவன், மத்திய மாகாண முன்னாள் முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க, முன்னாள் அமைச்சர் லக்ஸ்மன் வசந்த பெரேரா, உள்ளிட்ட பிரமுகர்களும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தொகுதி அமைப்பாளர்கள், பிரதேசசபை உறுப்பினர்கள், நகர சபை உறுப்பினர்கள், இணைப்பாளர்கள் மற்றும் பெருந்திரளான பொதுமக்கள் உட்பட பலரும் கலந்துகொண்டனர்.

வல்வெட்டித்துறை வைத்தியசாலை நோயாளர் விடுதி மீண்டும் ஆரம்பம்

அமைச்சர் டக்ளஸ் நடவடிக்கை

யாழ்.விசேட நிருபர்

வல்வெட்டித்துறை, ஊறணி பிரதேச வைத்தியசாலையின் நோயாளர் விடுதி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சியினால் மீண்டும் செயற்பட ஆரம்பித்துள்ளது.

தாதியர் பற்றாக்குறை காரணமாக வைத்தியசாலையின் நோயாளர் விடுதி (ward service) சேவை நிறுத்தப்பட்டிருந்தது. இதனால் பிரதேச மக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டு வந்தனர். இதுதொடர்பாக ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் வல்வெட்டித்துறை நகர சபை உறுப்பினர் கு.கமலதாஸினால் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருந்தது. இதனையடுத்து சம்மந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடிய கடற்றொழில் அமைச்சர், வைத்தியசாலையின் விடுதி சேவையை இயங்க வைப்பதற்கு தேவையான தாதியர்களை ஒப்பந்த அடிப்படையில் நியமிப்பதற்கு ஏற்பாடு செய்துள்ளார். இதனையடுத்து வைத்தியசாலையில் நோயாளர் விடுதியின் செயற்பாடுகள் சுமார் ஒரு மாதத்திற்குப் பின்னர் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

வடக்கு மீனவர்களின் பிரச்சினைக்கு அரசாங்கம் தீர்வினை வழங்கவேண்டும்

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன

கரவெட்டி தினகரன் நிருபர்

வடக்கு மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைக்கு தீர்வினைப் பெற்றுக் கொள்ள வேண்டியது தற்போதைய அரசின் பொறுப்பு என முன்னாள் ஜனாதிபதியும் சுதந்திரக் கட்சியின் தலைவருமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார். நேற்று உடுப்பிட்டி தேர்தல் தொகுதியில் இடம்பெற்ற சுதந்திர கட்சியின் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும்போது தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

சுதந்திரக் கட்சியானது ஏனைய கட்சிகளை விட ஒரு சிறந்த கட்சியாகும். எமது கட்சியில் சிறியவர் பெரியவர் என்று நாங்கள் பார்ப்பதில்லை. அனைவரையும் சமமாக பார்ப்பது எங்களது சுதந்திரக் கட்சியாக உள்ளது. அவ்வாறு கட்சி கடந்த பாராளுமன்ற தேர்தலில் வடக்கில் அதாவது தமிழர்கள் வாழும் பிரதேசத்தில் அதிகூடிய விருப்பு வாக்குகளைப் பெற்று ஒரு பாராளுமன்ற உறுப்பினரைப் பெற்றிருந்தமை வரலாற்றில் ஒரு முக்கியமான விடயமாகும். அதற்கு நான் அனைத்து உடுப்பிட்டி தொகுதி மக்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அத்தோடு எதிர்வரும் காலத்தில் எமது கட்சிக்கு அதாவது மாகாண சபை உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் போதும் எமது கட்சியை பலப்படுத்துவதற்கு அதிகளவில் மக்கள் எமக்கு ஆதரவளிக்க வேண்டும். எமக்கு ஆதரவு அளித்தால் நல்ல நிலைக்கு முன்நோக்கி கொண்டு செல்வோம்.

தற்போது நாட்டில் மக்கள் அதிகளவு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்றனர். எரிவாயு, பசளை, அத்தியாவசிய பொருள் விலையேற்றம் போன்ற பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்றனர். அவ்வாறான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குரிய நடவடிக்கைகளையும் முன்னெடுக்க வேண்டியுள்ளது. அத்தோடு நான் ஜனாதிபதியாக இருந்த காலத்தில் வட பகுதியில் பல திட்டங்களை முன்னெடுத்திருந்தேன் என்றார்.

சம்பள அதிகரிப்பு கோரி வடமாகாண ஆளுநரிடம் முன்பள்ளி ஆசிரியர்கள் மகஜர் கையளிப்பு

வவுனியா விசேட நிருபர்

சம்பள அதிகரிப்பு கோரி வவுனியாவில் முன்பள்ளி ஆசிரியர்கள் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்ததுடன், வடமாகாண ஆளுநரிடம் மகஜர் ஒன்றையும் கையளித்திருந்தனர்.

வவுனியா, பூங்கா வீதியில் உள்ள ஆளுநரின் பிராந்திய அலுவலகம் முன்பாக நேற்று (21.02) காலை கவனயீர்ப்பு போராட்டம் இடம்பெற்றது.

இதன்போது, 'முன்பள்ளி கலைத்திட்டத்தை மட்டும் மாற்றுவதால் என்ன பயன்?, இன்றைய விலை வாசியில் 6000 ரூபாய் போதுமானதா, உழைப்பிற்கான ஊதியமும் கௌரவமும் வழங்கப்பட வேண்டும், கல்விப் பயணத்தின் முதற்படியான ஆசிரியர்களை முழுமையாக்குங்கள்' என எழுதப்பட்ட சுலோக அட்டைகளையும் ஆர்ப்பாட்டக்காரர்கள் ஏந்தியிருந்தனர்.

அத்துடன், முன்பள்ளி ஆசிரியர்களாக பல வருடங்களாக நாம் பணியாற்றுகின்ற போதும், உதவித் தொகையான வெறும் 6000 ரூபாய் மட்டுமே எமக்கு கிடைக்கின்றது. தற்போதைய பொருட்களின் விலையேற்றத்திற்கு மத்தியில் இந்த 6000 ரூபாய் பணத்தை வைத்து நாம் எவ்வாறு குடும்பத்தை கொண்டு நடத்த முடியும்? பெண் தலைமைத்துவ குடும்பங்கள், யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பெண்கள் என பலரும் சேவை நோக்கத்தோடு பணியாற்றி வருகின்றோம். எனினும் எம்மால் தொடர்ந்தும் அவ்வாறு செயற்பட முடியாது. எமது குடும்பங்கள் பட்டினியால் இறக்கும் நிலை வரும். எனவே எமக்கான சம்பளத்தை அதிகரித்து வழங்குமாறு நாம் இந்த அரசாங்கத்திடம் கோருகின்றோம். ஒவ்வொரு அரசியல்வாதிகளும் வாக்குறுதிகளை மட்டுமே தருகிறார்கள் எமக்கு தீர்வு கிடைக்கவில்லை எனவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட முன்பள்ளி ஆசிரியர்கள் தெரிவித்தனர்.

இந்நிலையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களை சந்தித்த வடமாகாண ஆளுனர் ஜீவன் தியாகராஜா அவர்களது கோரிக்கை தொடர்பான மகஜரைப் பெற்றுக் கொண்டதுடன், ஒரு வாரத்துக்குள் தீர்க்கமான முடிவினைப் பெற்றுத் தருவதாக உறுதியளித்தார். இதனையடுத்து போராட்டம் தற்காலிகமாக கைவிடப்பட்டது.

கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் திருவள்ளுவர் குருபூசை கடந்த வெள்ளிக்கிழமை 19.02.2022 கலாசாலை திருவள்ளுவர் உருவச் சிலை முன்றிலில் நடைபெற்றது. தமிழ் சிறப்புக் கற்கை நெறியை சேர்ந்த ஆசிரிய மாணவர்களின் ஏற்பாட்டில் இந்நிகழ்வுகள் இடம்பெற்றன.

யாழ் தீவகப் பகுதி பெண்களுக்கு உதவ தயார்

வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா

கோப்பாய் குறூப் நிருபர்

யாழ் தீவகப் பகுதிகளில் சில இடங்களில் பெண்கள் சமூகத்துக்கு விரோதமான நடத்தைகளுக்கு தள்ளப்படுவது மிகவும் வருத்தமளிப்பதாகவும் அவ்வாறான பெண்களுக்கு உதவுவதற்கு தயாராக இருப்பதாகவும் வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தீவக பிரதேசத்தில் வாழும் மக்களின் வாழ்க்கை சாதாரண பகுதிகளோடு ஒப்பிடுகையில் கஷ்டமானது .

இருந்தாலும் சில தீவகப் பகுதிகளில் வாழும் பெண்கள் சமூகத்திற்கு ஒவ்வாத விடயங்களில் ஈடுபடுவது எனது கவனத்திற்கு வந்துள்ளது. இது எமது சமூகத்திற்கு அவமானமாகப் பார்க்கிறேன்.

யாழ் மாவட்ட செயலகம் ஊடாக தீவகப் பகுதிகள் தொடர்பான விவரங்களை கேட்டறிந்த போதே பெண்களின் நிலை தொடர்பில் இவ்வாறான தகவல்கள் வெளிவருவது வருத்தமளிக்கின்றது. ஆகவே சமூகத்திற்கு ஒவ்வாத செயற்பாடுகளில் ஈடுபடும் பெண்களுக்கு ஏற்ற தொழில் துறையை ஏற்படுத்துவதற்கு வடக்கு மாகாணத்தின் ஆளுநர் என்ற வகையில் எனது பொறுப்பை நிறைவேற்ற தயாராக இருக்கிறேன் என அவர் மேலும் தெரிவித்தார்.

வவுனியாவில் அரச திணைக்களங்களின் நடமாடும் சேவை

ஓமந்தை விஷேட நிருபர்

வடமாகாண அரச திணைக்களங்களின் பங்குபற்றுதலுடனான நடமாடும் சேவை வவுனியா பரகும் மகாவித்தியாலயத்தில் நேற்று (21) இடம்பெற்றது.

நடமாடும் சேவையினை வடமாகாண பிரதம செயலாளர் சமன் பந்துல சேனவினால் ஆரம்பித்து வைக்கப்பட்டதுடன் இச்சேவைகள் தொடர்பாகவும் பார்வையிட்டிருந்தார். வவுனியா தெற்கு பிரதேச சபைக்கான குறித்த நடமாடும் சேவையானது காலை 10 மணி தொடக்கம் மாலை 03 மணிவரை இடம்பெற்றது. இதேவேளை பொதுமக்கள் தாங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வு பெறும் நோக்குடன் மக்கள் அதிகளவில் கலந்து கொண்டதுடன், தங்களின் நீண்ட கால பிரச்சினைகளுக்கும் தீர்வினை பெற்றுச் செல்வதை அவதானிக்கக் கூடியதாகவிருந்தது.

வாள்வெட்டு சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேகநபர் கைது

யாழ்.விசேட நிருபர்

வாள்வெட்டு வன்முறைகளில் ஈடுபட்டு 6 மாதங்கள் தலைமறைவாகவிருந்த இளைஞன் ஒருவன் யாழ்ப்பாணம் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொக்குவிலைச் சேர்ந்த 22 வயதுடைய சந்தேகநபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

"கோப்பாய், யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவுகளில் இடம்பெற்ற 6 வாள்வெட்டு வன்முறைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர் என தெரியவந்துள்ளது. சந்தேகநபர் கடந்த 6 மாதங்களாகத் தேடப்பட்டு வந்தார்.

பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

கைமாறு கருதாது நன்மை செய்ய இயேசு எமக்கு விடுக்கும் அழைப்பு

"தாயைப்போல பிள்ளை" என்பது பழமொழி. ஒரு குழந்தை பிறந்தவுடன் அக்குழந்தை யாருடைய சாயலில் இருக்கின்றது என உற்றுநோக்குவர் வீட்டிலுள்ள பெரியோர். அக்குழந்தை வளரும்போது யாருடைய குணநலன்களைக் கொண்டு வளர்கிறது என்பதைக் கவனித்து அறிவர் அருகில் வாழ்வோர். எப்படியானாலும் ஒரு மனிதன் பிறப்பு முதல் இறப்பு வரை தன்னுடைய குணநலன்களோடு குடும்பத்திலுள்ள மற்றொருவருடைய பண்புகளை அல்லது சாயலை பிரதிபலிக்கிறான். இதுதான் எதார்த்தம். அறிவியல் உண்மை.

பரிசுத்த வேதாகமத்தின் அடிப்படையில் நாம் அனைவருமே கடவுளின் சாயலாகப் படைக்கப்பட்டவர்கள் என தொடக்கநூலில் வாசிக்கின்றோம். அப்படி கடவுளின் சாயலாகப் படைக்கப்பட்ட நாம் நாளடைவில் அக்கடவுளின் சாயலை இழக்கிறோமே அது ஏன்?

ஏனென்றால் நம் இருத்தலும் செயல்பாடுகளும் கடவுள் தன்மையை, அவர் குணங்களை பிறருக்குக் காட்டுவதாக அமைவதில்லை.கடந்த வாசகங்கள் இந்நிலையை நமக்கு உணர்த்தி நமக்குள் இருக்கும் கடவுளின் சாயலை மீண்டும் உயிர்ப்பிக்க புதுப்பிக்க நம்மை அழைக்கின்றன.

இன்றைய நற்செய்தி வாசகம் கடவுளின் சாயலை நாம் வெளிப்படுத்த பல வழிகளைக் கற்றுக்கொடுக்கின்றது.

எல்லாரிடமும் அன்பு செலுத்த வேண்டும். குறிப்பாக பகைவரிடம் அன்பு கூற வேண்டும். எதிர்பார்ப்பு இல்லாமல் பிறருக்குக் கொடுக்க வேண்டும்.

பிறரை கண்டனம் செய்யாமலும், குற்றவாளி எனத் தீர்ப்பளிக்காமலும் மன்னிப்பு வழங்க வேண்டும்.

கைமாறு கருதாது நன்மை செய்ய வேண்டும்.

அளந்து கொடுக்காமல் தாராளமாய் கொடுக்க வேண்டும்.

இவையெல்லாம் கடைபிடிப்பதற்கு கடினமான காரியங்களாக இருக்கலாம். ஆனால் இயலாத காரியங்கள் அல்ல. நம் ஆண்டவர் இயேசு இவைகள் அனைத்தையும் செய்தார். அனைவரையும் அன்புசெய்தார். சிலுவையில் கூட பகைவரை மன்னித்தார். மற்றவரால் தண்டனைக்கு அழைத்துவரப்பட்ட பெண்ணை அவர் தீர்ப்பிடவில்லை. அவரது செயற்பாடுகளை இன்னும் ஏராளமாகக் கூறலாம்.

இயேசுவைப் பற்றி. "விண்ணகத் தந்தை இரக்கமுள்ளவராய் இருப்பதைப் போல நீங்களும் இரக்கமுள்ளவராய் இருங்கள் "எனக் கூறியதோடு மட்டும் நின்றுவிடாமல் அதை வாழ்வாக்கியவர் இயேசு. விண்ணிலுள்ள தந்தையின் சாயலை இயேசு கொண்டிருந்ததைப் போன்று அதே விண்ணகத் தந்தையின் பிள்ளைகள் நாமும் அவர் சாயலைக் கொண்டிருக்க வேண்டாமா?

கடந்த ஞாயிறு முதல் வாசகத்தில் கடவுளின் மனதிற்கு நெருக்கமான தாவீது பதவிக்காக அவரைக் கொலை செய்யத் துணிந்த சவுலை கொலை செய்யமால் அவரை மன்னித்த நிகழ்வை நாம் தியானிக்கிறோம். எனவே இயேசு நமக்கு நற்செய்தியில் வழங்கிவரும் மதிப்பீடுகளின் படி அன்புள்ளவர்களாகவும் நன்மை செய்பவர்களாகவும் கொடுப்பவர்களாகவும் மன்னிப்பவர்களாகவும் வாழ முயற்சிப்போம். அதன்மூலம் இரக்கமுள்ள விண்ணகத் தந்தையின் சாயலை உலகிற்கு காட்டுவோம்.

அருட்பணி
குழந்தை இயேசு பாபு...

கிறிஸ்தவ நம்பிக்கை வெறும் மரபுகளுக்குள் முடங்கிவிடக்கூடாது

திருத்தந்தை பிரான்சிஸ்

இதயத்திலிருந்து பார்ப்பது உலகையும் நம் சகோதர சகோதரிகளையும் கடவுளின் கண்கள் வழியாகப் பார்ப்பதாகும் என திருத்தந்தை பிரான்சிஸ் தெரிவித்தார்.

"பிறவியிலேயே பார்வையற்றவர் பார்வை பெறுதல்" என்ற இறைவார்த்தையை மையப்படுத்தி, திருத்தந்தை பிரான்சிஸ் "ஒன்றிணைந்து பார்த்தல்"(Voir Ensemble) என்ற அமைப்பின் பிரதிநிதிகளைத் திருப்பீடத்தில் சந்தித்து அவர்களோடு தன் சிந்தனைகளைப் பகிர்ந்து கொண்டார்.

இக்காலத்தில் நாம் மிகவும் மேலோட்டமாக வெளிப்புறப் பொருட்களையே கூர்ந்து கவனிக்கிறோம் எனவும் உடல்தோற்றம், அணியும் ஆடைகள், அவர்களின் வீடுகள், விலையுயர்ந்த வாகனங்கள், சமுதாயத்தில் அவர்களின் நிலைமை, சொத்து போன்றவற்றை வைத்தே மக்கள் மதிப்பிடப்படுகின்றனர் என்று திருத்தந்தை கூறினார்.

நோயாளிகள் அல்லது மாற்றுத்திறன்கொண்டோரை அவர்களின் வலுவற்ற நிலையோடு நாம் ஏற்க வேண்டும் என்று நற்செய்தி நமக்குப் போதிக்கின்றது என்றும் இயேசு, பார்வையற்றவரை உற்றுநோக்கியது, அவரோடு சந்திப்பு நிகழ்த்த அழைப்பு விடுத்தது திருஅவை மற்றும் சமுதாயத்தில், உடன்பிறப்பு உணர்வு மற்றும்,தோழமையுணர்வைக் கட்டியெழுப்ப பாதையைத் திறக்கின்றது என்றும் திருத்தந்தை குறிப்பிட்டார்.

குறிப்பாக மாற்றுத்திறன் கொண்டோருடன் ஒருமைப்பாட்டுணர்வை, ஏற்படுத்துவதன் மதிப்பை குறிப்பிட்டுப் பேசிய திருத்தந்தை திருஅவை விபத்தில் சிக்கியவர்களுக்கு முதலுதவி வழங்கும் தற்காலிக மருத்துவமனை போன்றது என்றும் எத்தனையோ சகோதரர், சகோதரிகளின் காயங்கள் குணப்படுத்தப்படுவதற்கு நீட்டிய கரங்கள் தேவைப்படுகின்றன என்றும், திருத்தந்தை கூறினார்.

இதற்கு மற்றவரோடு, குறிப்பாக, குடும்பத்தில்வலுவற்றநிலையில் வாழ்வோரில் நோய் மற்றும், மரணப்படுக்கையில் இருப்போரோடு நம் உறவுகளை புதிய கண்ணோட்டத்துடன் பார்க்கவேண்டியது அவசியம் என்றுரைத்த திருத்தந்தை, நம் கிறிஸ்தவ நம்பிக்கை, வெறும் மரபுகளுக்குள் முடங்கிவிடாமல் உடன்பிறப்பு உணர்வுகொண்ட அன்பில் மற்றவரை வரவேற்கும் சான்று வாழ்வை வெளிப்படுத்துவதாய் இருக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

இதயத்திலிருந்து பார்ப்பது, உலகையும், நம் சகோதரர் சகோதரிகளையும் கடவுளின் கண்கள் வழியாகப் பார்ப்பதாகும் என்றும், மக்களையும், பொருட்களையும் பார்க்கும் முறையை புதுப்பிக்க வேண்டும் என்று இயேசு நமக்கு அழைப்பு விடுக்கிறார் என்றும் திருத்தந்தை தெரிவித்தார்.

மேரி தெரேசா...

ஆயித்தியமலை புனித சதாசகாய மாதா திருவிழா

மட்டக்களப்பு மறைமாவட்டத்தின் வரலாற்றுப் பிரசித்தி பெற்ற திருத்தலமான ஆயித்தியமலை புனித சதாசகாய மாதா ஆலய திருவிழா அருட்பணி லெபோன் சுதன் அடிகளாரின் தலைமையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. கடந்த 16ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமான திருவிழா நிகழ்வுகளில் தினமும் நவநாள் வழிபாடுகள் இடம்பெற்று 19ஆம் திகதி சனிக்கிழமை உறுதிப்பூசுதல் வழங்கல் சடங்கு மற்றும் வெஸ்பர்ஸ் ஆராதனை நடைபெற்று ஞாயிற்றுக்கிழமை காலை கூட்டுத்திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. அன்னையின் திருச்சொரூப பவனி இறுதி ஆசீரோடு திருவிழா நிகழ்வுகள் நிறைவு பெற்றன. (படங்கள்: கல்லடி குறூப் நிருபர்)

" மன்னியுங்கள் மன்னிப்புப் பெறுவீர்கள்"

தவக்காலத்தை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றோம்.மார்ச் 2ஆம் திகதி விபூதிப் புதனோடு இம்முறை தவக்காலம் ஆரம்பமாகின்றது.

வாழ்க்கையில் நாம் எவ்வாறானவற்றை கடைப்பிடிக்க வேண்டும் என்பதை நற்செய்தி வாசகங்கள் நமக்கு உணர்த்துகின்றன.

நாம் எமக்கு வழங்கப்பட்டுள்ள ஒரு கடமை போன்று ஆலயங்களுக்குச் செல்கின்றோம். ஒறுத்தல்களை மேற்கொள்கின்றோம். சிலுவைப்பாதை தியானம் செய்வதற்காக திருத்தலங்களுக்கு யாத்திரை செல்கின்றோம். புனித வாரத்திலே பாவ சங்கீர்த்தனம் செய்து மனஸ்தாபப்பட்டு என் பாவங்களுக்காக மன்றாடி மீண்டும் நம் ஆண்டவரின் உயிர்ப்பு விழாவை கொண்டாடுகிறோம்.

ஒவ்வொரு வருடத்திலும் இதனை தவக்காலத்தில் நாம் கட்டாயமாக்கிக் கொண்டுள்ளோம். இவற்றின் ஊடாக எங்கள் வாழ்க்கையில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் என்ன என்பதை நாம் சிந்திப்போம்.

எமது மொத்த வாழ்க்கையையும் நாம் எடுத்துப் பார்த்தால் எமது வாழ்க்கையில் நாம் கடைப்பிடிக்க வேண்டியவற்றை, நம்மை அன்பு செய்யும் ஆண்டவர் இயேசு எம்மிடம் எதிர்பார்க்கின்றவற்றை நாம் கடைப்பிடிக்கின்றோமா?

எமது வாழ்க்கை மற்றவர்களின் வாழ்க்கைக்கு முன்மாதிரியாக உள்ளதா? என்பதை சிந்தித்துப் பார்ப்போம். இம்முறை தவக்காலத்தில் நாம் எமது வாழ்க்கையில் பின்பற்ற வேண்டிய வற்றை இந்த ஞாயிறு எமக்குத் தரப்பட்டுள்ள நற்செய்தி வாசகங்கள் எடுத்துக் கூறுகின்றன. அதனை சற்று அவதானிப்போம்.

"உங்கள் பகைவரிடம் அன்பு கூறுங்கள்; உங்களை வெறுப்போருக்கு நன்மை செய்யுங்கள். உங்களை சபிப்போருக்கு ஆசி கூறுங்கள்; உங்களை இகழ்ந்து பேசுவோருக்காக இறைவனிடம் வேண்டுங்கள். உங்களை ஒரு கன்னத்தில் அறைபவருக்கு மறு கன்னத்தையும் திருப்பிக் காட்டுங்கள். உங்கள் மேலுடையை எடுத்துக் கொள்பவர் உங்கள் அங்கியையும் எடுத்துக் கொள்ளப்பார்த்தால்அவரைத் தடுக்காதீர்கள்; உங்களிடம் கேட்கும் எவருக்கும் கொடுங்கள் உங்களுடைய பொருள்களை எடுத்துக்கொள்வோரிடமிருந்து அவற்றைத் திருப்பிக் கேட்காதீர்கள். பிறர் உங்களுக்கு என்ன செய்ய வேண்டும் என்று விரும்புகிறீர்களோ, அதையே நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்.

உங்களிடம் அன்பு செலுத்துவோரிடமே நீங்கள் அன்பு செலுத்தினால் உங்களுக்கு வரும் நன்மை என்ன? பாவிகளும் தங்களிடம் அன்பு செலுத்துவோரிடம் அன்பு செலுத்துகிறார்களே. உங்களுக்கு நன்மை செய்பவர்களுக்கே நீங்கள் நன்மை செய்தால் உங்களுக்கு வரும் நன்மை என்ன? பாவிகளும் அவ்வாறு செய்கிறார்களே. திரும்பப் பெற்றுக்கொள்ளலாம் என எதிர்பார்த்து நீங்கள் கடன் கொடுத்தால் உங்களுக்கு வரும் நன்மை என்ன? ஏனெனில், முழுவதையும் திரும்பப் பெற்றுக்கொள்ளலாம் என்னும் நோக்குடன் பாவிகளும் பாவிகளுக்குக் கடன் கொடுக்கிறார்களே.

நீங்கள் உங்கள் பகைவரிடமும் அன்பு செலுத்துங்கள்; அவர்களுக்கு நன்மை செய்யுங்கள்; திரும்பக் கிடைக்கும் என எதிர்பார்க்காமல் கடன் கொடுங்கள். அப்போது உங்கள் கைம்மாறு மிகுதியாய் இருக்கும்.

எல். செல்வா...

நீங்கள் உன்னத கடவுளின் மக்களாய் இருப்பீர்கள். ஏனெனில் அவர் நன்றிகெட்டோருக்கும் பொல்லாதோருக்கும் நன்மை செய்கிறார். உங்கள் தந்தை இரக்கம் உள்ளவராய் இருப்பதுபோல நீங்களும் இரக்கம் உள்ளவர்களாய் இருங்கள்.

பிறர் குற்றவாளிகள் எனத் தீர்ப்பளிக்காதீர்கள்; அப்போது தான் நீங்களும் தீர்ப்புக்கு உள்ளாகமாட்டீர்கள். மற்றவர்களைக் கண்டனம் செய்யாதீர்கள்; அப்போதுதான் நீங்களும் கண்டனத்துக்கு ஆளாக மாட்டீர்கள். மன்னியுங்கள்; மன்னிப்புப் பெறுவீர்கள். கொடுங்கள்; உங்களுக்கு கொடுக்கப்படும்; அமுக்கிக் குலுக்கிச் சரிந்து விழும்படி நன்றாய் அளந்து உங்கள் மடியில் போடுவார்கள். நீங்கள் எந்த அளவையால் அளக்கிறீர்களோ அதே அளவையால் உங்களுக்கும் அளக்கப்படும்."

"மன்னியுங்கள் மன்னிப்பு பெறுவீர்கள்" "கொடுங்கள் உங்களுக்குக் கொடுக்கப்படும்" என்ற நம் ஆண்டவர் அதனை இந்தத் தவக்காலத்தில் கட்டாயமாக கடைப்பிடிக்குமாறு எமக்கு வலியுறுத்துகின்றார்.

இந்தத் தவக்காலத்தை நாம் அவருக்கு ஏற்ற விதத்தில் அனுஷ்டிப்பதற்கு தேவையான அருள் வரங்களை அவரிடம் மன்றாடுவோம்.

கிழக்கின் குரல்

சர்வதேச சக்திகளின் தலையீட்டிலிருந்து நாட்டையும் மக்களையும் பாதுகாக்க வேண்டும்

தேசிய காங்கிரஸின் 18வது பேராளர் மாநாட்டில் அதாஉல்லா எம்.பி

(பாலமுனை கிழக்கு தினகரன் நிருபர்)

நாட்டில் இனங்களுக்கிடையிலான இனவாதத்தையும் மதவாதத்தையும் தோற்றுவிக்கும் சர்வதேச சக்திகளின் தலையீட்டிலிருந்து நாட்டையும் மக்களையும் பாதுகாக்க வேண்டும் என்கின்ற நல்ல நோக்கிலேயே தேசிய காங்கிரஸ் கட்சி பயணித்துக் கொண்டிருக்கின்றது என தேசியகாங்கிரஸ் கட்சி தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஏ.எல்.எம்.அதாஉல்லா தெரிவித்தார்

தேசிய காங்கிரஸ் கட்சியின் 18 ஆவது பேராளர் மாநாடு ஞாயிற்றுக்கிழமை (20) அக்கரைப்பற்று கிழக்கு வாசலில் இடம்பெற்றது.

இதில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில், கடந்த காலத்தில் ஜனாதிபதி வேட்பாளராக மஹிந்த ராஜபக்ஷ போட்டியிட்ட போதும் தேசிய காங்கிரஸ் கட்சி அவரை ஆதரித்தது அதில் வெற்றிபெற்றது.

நாம் அன்று மஹிந்த ராஜபக்ஷவிடம் முன்வைத்த கோரிக்கை இணைக்கப்பட்ட வடக்கும், கிழக்கும் பிரிக்கப்பட்டு நாட்டில் புரையோடிப்போயுள்ள இனப் பிரச்சினையை தீர்த்துவைத்து மூவின மக்களும் சுதந்திரமாகவும் இன ஐக்கியத்துடனும் வாழ வேண்டிய சூழ்நிலையினை உருவாக்க வேண்டும் என்ற கோரிக்கையாகும்.

எமது கட்சிசார்பாக நாங்கள் அப்போது முன்வைத்த கோரிக்கையினை மஹிந்த ராஜபக்ஷ நிறைவேற்றித் தந்தார்.

அதற்கு நன்றிக்கடனாக கடந்த ஜனாதிபதித் தேர்தலில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ காட்டிய வேட்பாளரான கோட்டாபய ராஜபக்ஷ வுக்கு வாக்களித்தோம். எமது சமூகம் நன்றிகெட்டவர்கள் தொப்பி பிரட்டினார்கள் என்ற கருத்துக்கு மாற்றமாக எமது கட்சி நன்றிகடன் செலுத்தி முஸ்லிம் சமூகத்தின் மீதான தப்பபிப்பிராயத்தை நீக்கியுள்ளோம்.

சர்வதேச சக்திகளின் சதிவலை பின்னலில் இருந்து எமது சமூகத்தையும், நாட்டு மக்களையும் பாதுகாக்க வேண்டும் என்ற தூய நோக்கில் தேசிய காங்கிரஸ் கட்சி பயணித்துக் கொண்டிருக்கின்றது.

மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக்காலத்தின் போது எனக்கு கிடைத்த அதிகாரங்களை வைத்து இனவேறுபாடின்றி மூவின மக்களும் நன்மைபெறும் வகையில் சமமான சேவையினை வழங்கினேன். எமது கட்சி இனவாதக் கட்சியல்ல. எமது அரசியல் பயணம் தூய்மையானது.

மர்ஹூம் அஷ்ரபின் பாசறையில் இருந்த பலர்தான் இன்று தேசிய காங்கிரஸில் இருக்கின்றோம். எமது மக்களுக்கான விடிவை நோக்கி எமது அரசியல் பயணம் தொடர வேண்டும் என்றார்.

அரசறிவியல் பேராசிரியர் பாஸில் கௌரவிப்பு

(மருதமுனை தினகரன் நிருபர்)

இலங்கையின் முதல் முஸ்லிம் அரசறிவியல் பேராசிரியராகவும், தென்கிழக்குப் பல்கலைக்கழக கலாசார பீடத்தின் பீடாதிபதியாகவும் பதவி உயர்வு பெற்ற பேராசிரியர், கலாநிதி எம்.எம்.பாஸிலை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் மருதமுனை ஒக்காசியாகெஸ்ட் கவுசில் நடைபெற்றது.

மருதமுனை கடற்கரை நண்பர்கள் வட்டத்தின் தலைவர் ஏ.ஆர். அப்துல் சத்தார் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில், அமைப்பின் உறுப்பினர்களும், கடற்கரை நண்பர்கள் வட்டத்தின் உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். இங்கு பேராசிரியர் கலாநிதி எம்.எம்.பாஸிலுக்கு அமைப்பின் ஸ்தாபகர் எஸ்.எம்.அபூபக்கர் நஜீம், பொன்னாடை போர்த்தினார், அமைப்பின் தவிசாளர் எஸ்.எம்.ஹபீழா நினைவுச் சின்னம் வழங்கி கௌரவித்தார். அத்துடன் கல்முனை மாநகர சபை உறுப்பினர் எம்.எஸ்.உமர் அலி பரிசுப் பொதி வழங்கினார்.

இந் நிகழ்வில் பேராசிரியரின் தாயார் திருமதி உம்முசல்மா மன்சூர், மனைவி திருமதி பஸ்மியா பாஸில், அமைப்பின் தவிசாளர் எஸ்.எம்.ஹபீழா, ஆசிரியை முயினாஅமீர், மாணவன் சப்கஸ் அமீர் ஆகியோரும் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டனர்.

'அந்தி பூத்த வைகறை' கவிதை நூல் வெளியீடு

(பாலமுனை விசேட நிருபர்)

ஒலுவில் எஸ்.ஜலால்டீன் எழுதிய அந்தி பூத்த வைகறை கவிதை நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 27ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தென்கிழக்கு பல்கலைக்கழக தொழில்நுட்ப பீடத்தின் பீடாதிபதி கலாநிதி யூ.எல்.ஏ.மஜீட் தலைமையில் அட்டாளைச்சேனை அல்ஸகி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் தென்கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் பிரதம அதிதியாகவும், தென்கிழக்கு பல்கலைக்கழக தமிழ்த்துறை முதன்மைப் பேராசிரியர் கலாநிதி றமீஸ் அப்துல்லாஹ், கிழக்கு பல்கலைக்கழக முன்னாள் மொழித்துறைத் தலைவர் பேராசிரியர் கலாநிதி எஸ்.யோகராசா மற்றும் யாழ்ப்பாண பல்கலைக்கழக புவியியல் துறை ஓய்வுநிலை பேராசிரியர் கலாநிதி ஏ.எஸ்.ஆனந்தன் ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

கிழக்கு மாகாண முதலமைச்சின் முன்னாள் செயலாளர் யூ.எல்.ஏ.அஸீஸ், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம்.றிபாஸ், காத்தான்குடி ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் எம்.எஸ்.எம்.ஜாபீர், சிறுவர் வைத்திய நிபுணர் டொக்டர் பீ.எம்.அர்ஷாத் அஹமட், தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் புவியியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி திருமதி றபீக்கா அமிர்டீன் உள்ளிட்ட பலர் விசேட அதிதிகளாகவும், கலந்து கொள்ளவுள்ளனர்.

மாவடிவேம்பில் பிரம்பு உற்பத்திக்கான கட்டடம்

இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரனால் திறந்து வைப்பு

(கல்லடி குறூப் நிருபர்)

மட்டக்களப்பு செங்கலடி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மாவடிவேம்பு கிராம உத்தியோகத்தர் பிரிவில், சௌபாக்கியா உற்பத்தி கிராம திட்டத்தின் கீழ், பிரம்பு சார் உற்பத்தி கிராமமாக தெரிவு செய்யப்பட்டு, 9 மில்லின் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட பிரம்பு உற்பத்திக்கான பொதுக் கட்டடம் இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரனால் ஞாயிற்றுக்கிழமை (20) மாலை திறந்து வைக்கப்பட்டதுடன், தெரிவு செய்யப்பட்ட 45 பிரம்பு கைத்தொழில் உற்பத்தியாளர்களுக்கு துவிச்சக்கரவண்டி மற்றும் பிரம்பு உற்பத்திக்கான பொருட்கள் என்பனவும் வழங்கி வைக்கப்பட்டன. செங்கலடி பிரதேச செயலாளர் கே.தனபாலசுந்தரத்தின் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில், இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் பிரதம அதிதியாக கலந்துகொண்டிருந்தார்.

இத் திட்டத்திற்காக லிப்ட் தன்னார்வ தொண்டு நிறுவனம் பாரிய பங்காற்றியிருந்ததுடன், இந் நிகழ்வில் லிப்ட் நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் திருமதி ஜானு முரளிதரன் கலந்துகொண்டிருந்ததுடன், பொது மக்கள் பலரும் இந் நிகழ்வில் கலந்து கொண்டிருந்தனர்.

பயங்கரவாத தடைச் சட்டத்தை இரத்து செய்யுமாறு கையெழுத்து

(காரைதீவு குறூப் நிருபர்)

பயங்கரவாத தடைச் சட்டத்தை இரத்து செய்யக்கோரி நாடளாவிய ரீதியில் இடம்பெறும் கையெழுத்து போராட்டத்தின் ஓரங்கமாக ஞாயிற்றுக்கிழமை (20) அம்பாறை மாவட்டத்தில் பல இடங்களில் கையெழுத்து வேட்டை நடைபெற்றது.

காரைதீவு பொதுச்சந்தைக்கு முன்னால் கையெழுத்து வேட்டை இ.த.அ.கட்சி மாவட்ட அமைப்பாளரும் காரைதீவு தவிசாளருமான கி.ஜெயசிறில் தலைமையில் ஆரம்பமாகியது. அம்பாறை மாவட்ட த.தே.கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் த.கலையரசன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கோடீஸ்வரன், முன்னாள் மட்டு.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான பா.அரியநேத்திரன், ஞா.சிறிநேசன், மட்டக்களப்பு மாநகர சபை மேயர் தி.சரவணபவன் உள்ளிட்ட பிரமுகர்கள் முதலில் கையெழுத்திட்டனர். இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வாலிப முன்னணி இந்த ஏற்பாட்டை செய்திருந்தது.

மர்ஹூம் ஜவாட் நினைவுப் பேருரை

புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்

காத்தான்குடி பள்ளிவாசல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனத்தின் ஆயுட்கால பிரதித் தலைவரும் அதனது ஸ்தாபக உறுப்பினர்களில் ஒருவருமான 'நூறுல் உம்மத்' சட்டத்தரணி மர்ஹூம் ஏ. எல். அப்துல் ஜவாட் நினைவுப் பேருரை நிகழ்வு சம்மேளனத்தின் ஏற்பாட்டில் கடந்த (18) ஏ. அஹமது லெப்பை ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் இடம் பெற்றது.

காத்தான்குடி பள்ளிவாசல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனத்தின் தலைவர் மௌலவி எம் ஐ.ஆதம்லெவ்வை தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில், காத்தான்குடி பள்ளிவாசல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளன முக்கியஸ்தர்கள், காத்தான்குடி உலமா சபை உலமாக்கள் முக்கியஸ்தர்கள், பிரமுகர்கள் அவரின் குடும்ப உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது மர்ஹூம் ஜவாட் பற்றி ஓய்வு பெற்ற அதிபர் எம்.எச்.எம். இஸ்மாயில் முன்னாள், கிழக்கு மாகாண சபை உறுப்பினர் யு.எல்.எம்.முபீன் கவிஞர் சாந்தி முகைதீன், மௌலவி எம்.எச்.எம். புகாரி ஆகியோர் நினைவு பேருரைகளை நிகழ்த்தினர்.

கார் விபத்து; நால்வர் படுகாயம்

தோப்பூர் குறூப் நிருபர்

தோப்பூர் பிரதேசத்தில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த மோட்டார் கார் திங்கட்கிழமை (21) அதிகாலை குருநாகல் கிரிவுல்ல பிரதேசத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனத்தில் மோதி, விபத்துக்குள்ளானதில் அதில் பயணித்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வரும் படுகாயமடைந்த நிலையில், குருநாகல் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். இவ்விபத்தில் தோப்பூர் பிரதேசத்தைச் சேர்ந்த சமூக சேவையாளர் எஸ்.எல். அப்துல் ரஸாக் (நளீமி), அவரது மனைவி, மகன் மற்றும் உறவு முறை பெண் குழந்தை ஒன்றும் படுகாயமடைந்த நிலையில் அதி சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறமை குறிப்பிடத்தக்கதாகும்.

அம்பாறை மாவட்டத்திற்கு ரூ.3120 மில்லியன் ஒதுக்கீடு

(ஒலுவில் விசேட நிருபர்)

சமுர்த்தி பயனாளிகளுக்கு அதிகரிக்கப்பட்டுள்ள சமுர்த்தி மானியக் கொடுப்பனவு வழங்குவதற்கு அம்பாறை மாவட்டத்திற்கு 3120 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக, அம்பாறை மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் எம்.எஸ்.எம். சப்றாஸ் தெரிவித்தார்.

2022 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவு திட்ட முன்மொழிவிற்கமைய இக் கொடுப்பனவு வழங்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

நான்கு அல்லது அதற்கு மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட சமுர்த்தி நிவாரணம் பெறும் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டு வந்த 03 ஆயிரத்தி 500 ரூபாய் மானிய கொடுப்பனவு 04 ஆயிரத்தி 500 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

இரண்டு அல்லது மூன்று உறுப்பினர்களைக் கொண்ட சமுர்த்தி நிவாரணம் பெறும் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டு வந்த 02 ஆயிரத்தி 500 ரூபாய் மானிய கொடுப்பனவு 03 ஆயிரத்தி 200 ரூபாவாகவும் மற்றும் 1,500 ரூபாய் மானிய கொடுப்பனவு 1,900 ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டத்தில் 89 ஆயிரத்தி 637 சமுர்த்தி நிவாரணம் பெறக்கூடிய குடும்பங்களுக்கு இக் கொடுப்பனவு வழங்கப்படுகிறது.

அம்பாறை மாவட்ட மகளிர் சம்மேளன மாநாடு

(மாளிகைக்காடு குறூப் நிருபர்)

அம்பாறை மாவட்ட மகளிர் சம்மேளன ஏற்பாட்டில் "ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன பெண்கள் முன்னணி" அம்பாறை மாவட்ட மாநாடு அண்மையில் அம்பாறை மாநகர சபை கேட்போர் கூடத்தில் சிறப்பாக நடைபெற்றது.

அம்பாறை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலுமுள்ள சிங்கள, தமிழ், முஸ்லிம் மகளிர் அமைப்புகளைச் சேர்ந்த பெண்கள் அதிகளவில் கலந்து கொண்டனர்.

மார்ச் மாதம் அனுஸ்டிக்கப்படவுள்ள சர்வதேச பெண்கள் தினத்தை கொண்டாடும் முன்னேற்பாடாக இது அமையப் பெற்றுள்ளதுடன், பெண்கள் எதிர்நோக்கும் பல பிரச்சினைகள் இந்நிகழ்வின் போது முன்வைக்கப்பட்டு அதற்கான தீர்வுகளும் எட்டப்பட்டன. இந் நிகழ்வில், திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் வனவிலங்கு பாதுகாப்பு இராஜாங்க அமைச்சருமான விமலவீர திஸாநாயக, திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள், நகர சபை உறுப்பினர்கள் , பிரதேச சபை உறுப்பினர்கள், கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ரஞ்சித் பண்டார, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் அம்பாறை மாவட்ட அரசியல் அதிகார சபையின் செயற்குழு உறுப்பினர் திருமதி சுதர்மா விஜேரத்ன மற்றும் விசேட அதிதிகள் பலர் கலந்து கொண்டனர்.

பாலம் அமைக்கும் பணிகள் ஆரம்பிப்பு

கந்தளாய் தினகரன் நிருபர்

கந்தளாய் வலயக் கல்வி அலுவலகத்திற்குட்பட்ட வான்எல கனிஷ்ட வித்தியாலயத்தின் முன்னால் பாலம் அமைக்கும் பணிகளை திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கபில அத்துக்கோரல ஞாயிற்றுக்கிழமை (20) ஆரம்பித்து வைத்தார்.

பாடசாலையின் முன்னால் மழை காலங்களில் நீர் தேங்கி நிற்பதாகவும் இதனால் பாடசாலை செல்லும் மாணவர்கள் பலரும் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வந்த நிலையில், பாடசாலை அதிபர் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கபில அத்துக்கோரலவிடம் விடுத்த வேண்டுகோளுக்கிணங்க பாலம் அமைப்பதற்காக உத்தியோகபூர்வமாக அடிக்கல் நாட்டப்பட்டு ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மலைச்சாரலி

பிரம்பு கைத்தொழிலை கைவிடும் நிலையில் உற்பத்தியாளர்கள்

இரத்தினபுரி சுழற்சி நிருபர்

பிளாஸ்டிக் உற்பத்தி பொருட்கள் சந்தையில் நிரம்பியிருப்பதால் எஹலியகொடை உட்பட்ட அண்மித்த பிரதேச பிரம்பு உற்பத்தியாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக கவலை தெரிவிக்கின்றனர்.

சுமார் 20 வருடங்களுக்கு முன் பிரம்பினால் உற்பத்தி செய்யப்படும் கதிரைகள் உட்பட வீட்டு உபயோகப்பொருட்கள் பெருமளவில் வீடுகளில் பாவிக்கப்பட்டு வந்த போதிலும் தற்போது பிளாஸ்டிக் பொருட்களின் வருகையால் பெரும் வீழ்ச்சியடைந்துள்ளதாக இவர்கள் தெரிவிக்கின்றனர். எஹலியகொடை உட்பட அயல் பிரதேசங்களில் பரவலாக வீடுகளில் பிரம்புக் கைத்தொழில் சிறப்பாக இடம்பெற்று வந்த போதிலும் தற்போது தங்களின் வருமானம் முடக்கமடைந்துள்ளதாக இவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

எனவே தமது தொழில் துறையை விருத்தி செய்ய உரிய தரப்பினர் வசதிகளை செய்து தர வேண்டும் என தொழிலாளர்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

மகளிரை வலுப்படுத்தும் வேலைத்திட்டம்

கினிகத்தேனை தினகரன் நிருபர்

மகளிரை வலுப்படுத்தும் வேலைத்திட்டத்தின் கீழ் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவினால் ஒழுங்கமைக்கப்பட்ட சந்திப்பொன்று அம்பகமுவ பிரதேச சபையின் தவிசாளர் ஜெயசங்க பெரேராவின் தலைமையில் அம்பகமுவ பிரதேச சபை கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இக்கூட்டமானது நுவரெலியா பாராளுமன்ற உறுப்பினரான வனவிலங்கு மற்றும் வனத்துறை பாதுகாப்பு அமைச்சர் சி.பி.ரத்நாயக்கவின் அனுசரனையில் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது. இந்நிகழ்விற்கு பிரதம அதிதியாக போக்குவரத்து அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி கலந்துக்கொண்டு உரையாற்றினார். இதில் அமைச்சர் சி.பி.ரத்நாயக்கவின் புதல்வர் பிரேவ் ரத்நாயக்க, பிரதேச சபை உறுப்பினர்கள் மற்றும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன பெண் அங்கத்தவர்கள் ஆகியோர் கலந்துகொண்டு நிகழ்வை சிறப்பித்தனர்.

இந்து இளைஞர் மன்ற வருடாந்தக் கூட்டம்

பதுளை தினகரன் விசேட நிருபர்

பண்டாரவளை இந்து இளைஞர் மன்ற வருடாந்தக் கூட்டம் நேற்று பண்டாரவளை இந்து கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது நடப்பு வருட நிர்வாகத் தெரிவும் இடம்பெற்றது. மன்றத் தலைவராக என். செல்வராஜ், செயலாளராக ஆர். கிருஸ்ணமூர்த்தி, பொருளாளராக வீ. சூரியகுமார் ஆகியோரும் தெரிவாகினர். கடந்த கால நிர்வாக சபையினர்களான முன்னாள் மாகாண கல்வி அமைச்சர் எம். சச்சிதானந்தன், தொழிலதிபர்களான வீ. குமாரவேல், என். ரகுபதி ஆகியோர் கடந்த கால செயற்பாடுகள் குறித்து உரையாற்றினர்.

நாவலப்பிட்டி நகர சபையூடாக கால்வாய் புனரமைக்கும் திட்டம்

கினிகத்தேனை தினகரன் நிருபர்

நாவலப்பிட்டி நகர சபையூடாக நகரத்தின் மத்திய பகுதியில் மேலதிக நீரை வெளியேற்றும் வகையில் கால்வாயினை அகலப்படுத்தி கொங்கிறீட் இடும் வேலைத்திட்டம் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

நகரத்தின் இரு மருங்கிலும் முன்பிருந்த கால்வாயானது மிக சிறியதாக காணப்பட்டது. இது அதிக நீரை வெளியேற்ற முடியாத பகுதியாக காணப்பட்டது. இதனால் மழை காலங்களில் நீர் முறையாக வெளியேறாமையால் வீதியில் வெள்ள நீர் பெருக்கெடுக்க ஆரம்பிக்கும்.

மழை காலங்களில் நாவலப்பிட்டி நகர மத்தியின் முச்சந்தி தொடக்கம் கண்டி வீதியானது வெள்ள நீரால் ஆறாகவும் தோற்றமளிக்கும். இதனால் மக்கள் மழைக்காலங்களில் பெரும் அசௌகரியங்களை அனுபவித்தனர்.

மேலும் வியாபார நிலையங்களுக்குள்ளும் மழை நீர் உட்புகுந்துவிடக் கூடிய நிலை காணப்படும். வெள்ள நீர் வற்றிய பின்னரே வியாபார நிலையங்களை சுத்தம் செய்ய வேண்டிய நிலை ஏற்படுவதோடு சில பொருட்களுக்கும் சேதம் ஏற்பட்டும் விடும்.

மேலும் மழை காலங்களில் வெள்ள நீர் வீதியில் காணப்படும் தருணங்களில் பாதசாரிகள் சிரமங்களுக்குள்ளாவர். அத்துடன் வியாபார நிலையங்களுக்கு செல்லும் வாடிக்கையாளர்களும் தமக்கு வேண்டிய பொருட்களை கொள்வனவு செய்ய முடியாத நிலையும் ஏற்பட்டு விடும்.

இப்படியான சூழ்நிலையிலே மழை நீர் மற்றும் மேலதிக நீரை முறையாக வெளியேற்றும் வகையில் முன்பிருந்த கால்வாய் மேலும் அகலப்படுத்தி நீர் வெளியேறும் வகையில் தற்போது கொங்கிறீட் இடும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது. அவ்வாறு இவ்வேலைத்திட்டம் முறையாக நிறைவுறுமாக இருந்தால் அது தமக்கு பலவழிகளிலும் நன்மையை ஏற்படுத்தும் என்றும் பிரதேச மக்கள் கருத்து தெரிவிக்கின்றனர்.

மலையக மக்களுக்காக சர்வதேசம் செல்லவும் தயங்க மாட்டேன்

மலையக மக்களின் சக்தியை எவரும் விலை பேச முடியாது என பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் தெரிவித்துள்ளார்.

இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பண்டாரவளை, ஹப்புத்தளை, வெலிமடை ஊவா பரணகம முக்கியஸ்தர்களுடனான கலந்துரையாடலை தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,

எதிர்வரும் 24ஆம் திகதி பெருந்தோட்டத் தொழிலாளர்களின் 1000 ரூபாய் வேதன வழக்கு மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்படுகின்றது.

பெருந்தோட்ட மலையக மக்கள் மேல் உண்மையான அக்கறை உள்ள பெருந்தோட்ட மலையக தலைவர்கள் தொழிற்சங்கங்கள் அன்றையதினம் நீதிமன்றத்துக்கு சமூகமளித்து உங்களுடைய நிலைப்பாட்டை முன் வைக்க வேண்டும்.

இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம் தொடர்ந்து 1000 ரூபாய் வேதன வழக்கில் முன்நின்று செய்யப்பட்டமை அனைவரும் அறிந்ததே.

பெருந்தோட்ட நிர்வாகங்களின் கீழ் இயங்கும் தோட்டங்களை சேர்ந்த தொழிலாளர்களுக்கு பகிர்ந்தளிப்பதன் மூலம் இலங்கைத் தேயிலையின் கேள்வியை அதிகரிப்பதுடன் தொழிலாளர்களாக இருக்கும் பெருந்தோட்ட மக்களை முதலாளிகளாக மாற்றி அவர்களுடைய வாழ்வாதாரத்தை உயர்த்தி அவர்களுடைய இருப்பையும் உறுதி செய்ய முடியும். ஆயிரம் ரூபாய் வேதன அதிகரிப்பு என்பது அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவின் அடிப்படையில் தற்போது நிலவுகின்ற வாழ்வாதாரத்திற்கு ஏற்புடையதல்ல. மேலும் பெருந்தோட்டங்களில் வெளியாட்கள் ஆக்கிரமிப்பினால் மிகவும் மோசமான முறையில் மக்கள் பாதிப்புக்குள்ளாகி இருக்கின்றனர்.

ஆகவே பெருந்தோட்டத் தொழிலாளர்களை நிம்மதியாக வாழவிடுங்கள். பெருந்தோட்ட மலையக மக்களின் சக்தியை எவராலும் விலை பேசி விட முடியாது. இந்நிலைமை தொடருமேயானால் சர்வதேசம் செல்லவும் தயங்க மாட்டேன் என கருத்து தெரிவித்தார்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் 82ஆவது பட்டமளிப்பு விழா

எம்.ஏ.அமீனுல்லா

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் 82ஆவது பட்டமளிப்பு விழா (22) இன்று இடம்பெறவுள்ளதாக பல்கலைக்கழக ஊடகப் பேச்சாளரும், பிரதி உபவேந்தருமான பேராசிரியர் டெரன்ஸ் மதுஜித் தெரிவித்தார்.

பல்கலைக்கழகத்தின் செனட் கூட்ட மண்டபத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பேராதனை பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் கே.எம்.டி சில்வா மற்றும் உபவேந்தர் பேராசிரியர் எம்.டீ லமாவன்ச ஆகியோரின் தலைமையில் பல்கலைக்கழக உள்ளக விளையாட்டரங்கில் இன்று ஆரம்பிக்கப்படும் பட்டமளிப்புவிழா தொடராக நாளையும் (23) நாளை மறுதினமும் (24) நடைபெறும் என பிரதி உபவேந்தர் தெரிவித்தார். மேற்படி பட்டமளிப்பு விழாவில் 2019ஆம் ஆண்டு தமது பாடநெறிகளை முழுமையாக பூர்த்திசெய்துள்ள 3890 மாணவர்களுக்கு பட்டங்கள் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளன.

இதில் முதுநிலை பட்டதாரிகள் 779 உள்வாங்கப்பட்டுள்ளதாகவும் 2020ஆம் ஆண்டுக்கான பட்டமளிப்பு விழா இந்த ஆண்டு மே மாதத்திலும் நடைபெறவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

மேலும் பேராசிரியர் ஹெர்பர்ட் எம்.அபொன்சோ மற்றும் கலாநிதி குணதாச அமரசேகர ஆகியோர் நாட்டுக்காக ஆற்றிய சேவைக்காக இரண்டு விசேட கௌரவப் பட்டங்களை வழங்க பேராதனை பல்கலைக் கழகம் தீர்மானித்துள்ளது.

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் 82ஆவது பட்டமளிப்பு விழாவிலேயே கௌரவப்பட்டங்கள் வழங்கப்படவுள்ளன.

நூறு கோடி மக்களின் எழுச்சி நிகழ்வு

நோட்டன் பிரிட்ஜ் நிருபர்

வருடாந்தம் உலகளாவிய ரீதியில் கொண்டாடப்படும் நூறுகோடி மக்களின் எழுச்சி இம்முறை இலங்கையிலும் கொண்டாடப்பட்டது. வன்முறைகள் இல்லாது வாழ்தல், பெண்கள் மீது நிகழ்த்தப்படும் வன்முறைகள் நிறுத்தப்பட வேண்டும் என்ற தொனிப்பொருளுடன் இம்முறை கொண்டாடப்பட்டு வருகின்றது.

அந்தவகையில் ஹற்றன் நோர்வூட் மைதானத்தில் தேசிய ரீதியில் பதிவு செய்யப்பட்ட அரச சார்பற்ற நிறுவனமான சமூக நல்வழி மன்றத்தின் பிரதான பொறுப்பாளர் சந்திரமதியின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில், மலையகத்திலுள்ள மன்றத்தை சார்ந்த பெண்கள், மற்றும் ஏனைய இளம் பெண்கள் இணைந்து இந்நிகழ்வை ஒரு கொண்டாட்டமாக நடத்தியுள்ளனர். இந்நிகழ்வில், மலையகத்தின் பாரம்பரிய விளையாட்டு நிகழ்வுகள் இடம்பெற்றதுடன் நாட்டார் பாடல்கள் என்பன பெண்களால் அருமையாக பாடப்பட்டன.

இலங்கையில் தெற்காசிய பெண்கள் அமைப்பின் உறுப்பினரும் பெண்ணிய செயற்பாட்டாளருமான கமலா வாசுகியினால் இந்நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

கண்டி உதவி இந்தியத்தூதுவர் தமிழ் ஊடகவியலாளர்களுக்கிடையில் சந்திப்பு

கண்டி உதவி இந்தியத்தூதுவர் டாக்டர் எஸ் ஆத்திராவுக்கும் கண்டி தமிழ் ஊடகவியலாளர்களுக்குமிடையே சிநேகபூர்வமான சந்திப்பொன்று அண்மையில் இடம்பெற்றது. இந்திய உதவித்தூதுவராயலம் மலையக மக்களின் சமூக கல்வி. கலை கலாசார மற்றும் பல்வேறு துறைகளில் மேற்கொண்டு வரும் சேவைகள் குறித்து பாராட்டுக்கள் தெரிவிக்கப்பட்டன. படம்: அக்குறணை குறூப் நிருபர்

கந்தளாய் சீனித் தொழிற்சாலை விற்கப்படுவதாக எதிர்க்கட்சி பொய்ப்பிரச்சாரம்

அமைச்சர் ஜானக வக்கும்புர

இரத்தினபுரி சுழற்சி நிருபர்

நல்லாட்சி அரசாங்கம் கந்தளாய் சீனித் தொழிற்சாலையை இந்தியக் கம்பனி ஒன்றுக்கு குத்தகைக்கு விற்பனை செய்ததால் பல பாதிப்புக்கள் ஏற்பட்ட போதிலும் புதிய ஒப்பந்தத்தால் தொழிற்சாலையின் சொத்துக்கள் பறிபோகவில்லை என ஏற்றுமதி அபிவிருத்தி அமைச்சர் ஜானக வக்கும்புர நேற்று முன்தினம் தெரிவித்தார்.

இவ்விடயமாக அவர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில், நல்லாட்சி அரசாங்கத்தின் நாட்டுக்கு பாதகமான குத்தகை உடன்படிக்கையை புதிப்பித்து இங்குள்ள 53.0 மில்லியன் ரூபாய் பெறுமதியான இரும்புகளை மீண்டும் கம்பனி வசமாக்கவும் காணி உரிமையை கம்பனிக்கு செல்லாமல் பாதுகாக்க வாய்ப்புக் கிடைத்தது.

நல்லாட்சி அரசின் தவறான செயற்பாடுகளால் இக்கம்பனி இலங்கை அரசுக்கு எதிராக சிங்கப்பூரில் வழக்கு தொடர்ந்தது. இதனால் இரும்புத் தொகையுடன் 100 மில்லியன் டொலரையும் அபராதம் செலுத்த வேண்டி வந்தது. எனினும் எமது அரசு கம்பனியுடன் பேசி இரும்பு தொகையையும் காணியையும் எமது உரிமை பாதிக்காத விதத்தில் புதிய ஒப்பந்தம் ஒன்றைச் செய்தது. ஆனால் எதிர்க்கட்சிகள் கூறுவது போன்று இத்தொழிற்சாலையை விற்பதற்கு நாம் முயற்சிக்கவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

நகர்வலம்

மாத்தறை மாவட்ட அபிவிருத்தி குழுக்கூட்டம் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் அபிவிருத்தி குழுத் தலைவரும் மாத்தறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான நிபுன ரணவக்கவின் பங்கேற்புடன் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் அண்மையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தென் மாகாண ஆளுநர் கலாநிதி விலிகமகே மற்றும் மாத்தறை மாவட்ட பிரதேச செயலாளர்கள், அரச அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.
(படங்கள்: வெலிகம தினகரன் நிருபர்)

மதவாச்சியில் கட்டுத்துவக்கு வைத்திருந்தவர் கைது

அநுராதபுரம் தினகரன் நிருபர்

ஐந்து கட்டுத் துவக்குகளை வைத்திருந்த சந்தேக நபர் ஒருவரை மதவாச்சி பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நேற்று முன்தினம் (20) மதவாச்சி துமிந்தேகம பகுதியில் பொலிசார் நடாத்திய சுற்றிவளைப்பின் போது சந்தேக நபர் கைது செய்யப்பட்டார். அந்நபரின் வீட்டிற்கு பின்னாலுள்ள காட்டுப்பகுதியில் மறைத்து வைத்திருந்த ஐந்து கட்டுத்துவக்குகள், வெடிமருந்து மற்றும் ஈயக்குண்டுகள் சிலவற்றையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் வடமத்திய மாகாணத்தில் அனுராதபுரம், பொலன்னறுவை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 10 பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயங்களுக்கு 10 கெப் வண்டிகள் நேற்று (21) கையளிக்கப்பட்டன. வடமத்திய மாகாண ஆளுனர் மஹிபால ஹேரத், அவற்றை பிரதேச சுகாதார வைத்திய அதிகாரிகளிடம் கையளித்த போது எடுத்த படம்
(படம்: அநுராதபுரம் மேற்கு தினகரன், கல்நேவ தினகரன் விசேட நிருபர்கள்)

"முல்லைத்தீவு முதல் புத்தளம் வரை" பெப்ரவரி 27இல் நூல் வெளியீடு

ஏ.எஸ்.எம்.ஜாவித்

முல்லைத்தீவு தண்ணீரூற்றைச் சேர்ந்த முஸ்தபா மன்ஸூர் (இளைய முஸ்தபா) எழுதிய"முல்லைத்தீவு முதல் புத்தளம் வரை தீனுடையானின் அனுபவப் பகிர்வு" நூல் வெளியீட்டு நிகழ்வு எதிர்வரும் 27ஆம்திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 3.30 முதல் புத்தளம் பெருக்கு வற்றான் அல் மின்ஹாஜ் முஸ்லிம் மஹா வித்தியாலய கேட்போர் கூடத்தில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

புத்தளம் காஸிமியா அரபுக்கல்லூரி அதிபரும் புத்தளம் மாவட்ட உலமா சபைத் தலைவருமான அப்துல்லா மஹ்மூத் மதனியின் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் தொழிலதிபர் எம்.ஐ.எம்.நயீம் முதல் பிரதியை பெற்றுக் கொள்வார்.

எம்.ஐ. கைஸர்கான் கபூரி வரவேற்புரை நிகழ்த்த புத்தளம் மன்ப உல் பெண்கள் அரபுக் கல்லூரி அதிபர் எம்.எம்.எம்.றியாஸ் தேவ்பந்தி வாழ்த்துரை வழங்குவார். சாமசிறி அப்துல் சத்தார் மதனி கருத்துரையும் தாராபுரம் ஹாஜா அலாவுதீன் நூல் பற்றிய திறனாய்வையும் நிகழ்த்துவார்கள்.

சேதனப்பசளை இயந்திரங்கள் வழங்கிவைப்பு

அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்

அனுராதபுரம் மாவட்ட செயலகத்திற்கு கிடைக்கப்பெற்ற சேதனப் பசளை இயந்திரங்கள் மாவட்ட செயலாளர் தலைமையில் பசளை உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அனுராதபுரம் மாவட்டத்தில் சேதனப் பசளை மற்றும் உர உற்பத்தியில் ஈடுபட்டுள்ள தொழில் முனைவோரை உற்பத்தித்துறையில் மேம்படுத்தும் வகையில் அரச நிதி மூலம் சேதனப் பசளை தயாரிக்கும் இயந்திரம் வழங்கும் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட உர உற்பத்தியாளர்கள் மற்றும் 10 கமநல சேவை திணைக்களங்களுக்கும் இவ் இயந்திரங்கள் வழங்கப்பட்டன.

இன ஐக்கியத்திற்கு மட்டுமன்றி

நாட்டின் சகல துறைகளிலும் முஸ்லிம்கள் பங்களித்துள்ளனர்

தெமட்டகொடை கைரியா மகளிர் கல்லூரியின் 140ம் வருட நிகழ்வில் நீதியமைச்சர்

(தெஹிவளை கல்கிசை விசேட நிருபர்)

இலங்கையில் 1100 ஆண்டுகளுக்கு மேலான வரலாற்றை கொண்ட முஸ்லிம்கள், பாதுகாப்புத்துறை, புலனாய்வுத்துறை, பொருளாதாரத்துறை, நீதித்துறை, வைத்தியத்துறைகளுக்கு மட்டுமன்றி இன ஐக்கியத்தினை கட்டியெழுப்புவதற்கும் பங்காற்றி வந்துள்ளனர். அத்துடன் இரண்டு சமூகங்களுக்கிடையே சமாதான பாலமாகவும் முஸ்லிம் இருந்து வந்துள்ளார்கள் என நீதியமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

தெமட்டகொடை கைரியா மகளிர் கல்லூரியின் 140ம் வருட நிகழ்வுகள் கொழும்பு தாமரைத் தடாக கலையரங்கில் நடைபெற்றது. இந் நிகழ்விற்கு பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே நீதியமைச்சரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான அலி சப்ரி மேற்கண்டவாறு தெரிவித்தார். கல்லூரியின் அதிபா நஸீரா ஹசனார் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் மருத்துவம், முகாமைத்துவம், சட்டம், கலைத்துறைகளுக்கு தெரிவாகி பல்கலைக்கழகம் செல்லும் மாணவிகள் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர். கல்லூரி அதிபரின் சேவையைப் பாராட்டி விருது வழங்கி கௌரவிப்பட்டார்.

அமைச்சர் மேலும் அங்கு உரைநிகழ்த்துகையில்,

கொழும்பில் உள்ள முஸ்லிம் பெண்களுக்கு மட்டுமன்றி ஏனைய பிரதேச வாழ் முஸ்லிம் பெண்களுக்கும் கல்வி புகட்டி பல பெண் சாதனையாளர்களையும் புத்திஜீவிகளையும் உருவாக்கிய ஓர் வரலாறு கொண்ட பாடசாலையாக தெமட்டகொடை கைரியா விளங்குகின்றது. இக் கல்லூரியின் 140 வருட கால நீண்ட பயணத்தின் வரலாறுகளை இங்கு அவதானிக்கும்போது அதன் வளர்ச்சி கண்டு முஸ்லிம்கள் பெருமையடைகின்றனர். கொழும்பில் 140 வருட கால வரலாறு கொண்ட ஒரே ஒரு முஸ்லிம் பெண்கள் பாடசாலையாக கைரியா மகளிர் கல்லூரி மட்டுமே இருக்கமுடியும் .

இக் கல்லூரி உருவாக்கிய பல சாதனையாளர்கள், பெண் தலைவிகள் சிறந்து விளங்கியுள்ளனர். இக் கல்லூரியின் மாணவிகள் மும்மொழிகளிலும் நாட்டில் உள்ள சகல பல்கலைக்கழகங்களிலும் மருத்துவத்துறை, முகாமைத்துவம், சட்டம், கலைத்துறைகளில் தமது உயர்கல்வியைத் தொடர்கின்றார்கள். இதற்காக சேவையாற்றிய சகல ஆசிரியைகள் சகல அதிபர்களுக்கும் நாம் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம்.

இந்தநாட்டில்வாழும்99வீதமான மக்கள் சகல இனங்களுடன் ஐக்கியத்துடனும் சகோதரத்துடனும் சமதானமாக வாழ்ந்துவருகின்றனர். பெண்களின் பல்கலைக்கழக கல்வி வளர்ச்சி 61.5 வீதமாக அதிகரித்துள்ளது. தற்பொழுது அரசியலைத் தவிர ஏனைய சகல துறைகளிலும் பெண்கள் முன்னேறி வருகின்றனர். இதே போன்று முஸ்லிம் பெண்களும் கல்வியில் வளர்ச்சி கண்டு வருகின்றனர்.

அமெரிக்காவில் கூட கடந்த ஆண்டு பல்கலைக்கழகம் செல்லும் பெண்கள் 58 வீதமாக வளர்ச்சி கண்டுள்ளது.இதற்காக பெண்களது வளர்ச்சிக்கும் தலைமைத்துவத்திற்கும் ஆண்கள் தம்மாலான சகல ஒத்துழைப்புகளையும் வழங்க வேண்டும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இந்து சமயகலாசார அலுவல்கள் அமைச்சின் ஏற்பாட்டில் கொழும்பு விவேகானந்த சபையினால் ஒழுங்கு செய்யப்பட்ட மது, போதைப்பொருள் தடுப்பு தொடர்பான கருத்தரங்கு இடம்பெற்றது. இதில் புத்தசாசன மற்றும் மத விவகார அமைச்சின் போதைப்பொருள் தடுப்பு பிரிவின் தேசிய இணைப்பாளரான அமரசிங்க, ஜனாதிபதி செயலகத்தின் மொழிப் பெயர்ப்பாளரும் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் மது, போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் இணைப்பாளருமான உதயரூபன் ஆகியோர் வளவாளர்களாக கலந்துகொண்டு அறநெறி ஆசிரியர்களுக்கு விளக்கமளித்த போது,..

முந்தல் உதவி பிரதேச செயலாளராக நியமனம்

கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்

முந்தல் பிரதேச செயலகத்தின் புதிய உதவி பிரதேச செயலாளராக டபிள்யூ. ரி.எம்.எஸ்.பி. மல்வில நியமிக்கப்பட்டுள்ளார்.

முந்தல் பிரதேச செயலகத்தின் உதவி பிரதேச செயலாளராக கடமையாற்றி வந்த தேசானி ஹசன் திகா, மாதம்பை பிரதேச செயலகத்திற்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளார்.

இதனால், ஏற்பட்ட உதவி பிரதேச செயலாளர் வெற்றிடத்திற்கே டபிள்யூ. ரி.எம்.எஸ்.பி. மால்வில நியமிக்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு புதிதாக நியமிக்கப்பட்ட முந்தல் பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர், கடந்த வெள்ளிக்கிழமை (18) தனது கடமைகளை பொறுப்பேற்றுக்கொண்டார்.

இந்த நிகழ்வில் முந்தல் பிரதேச செயலாளர் விஜானி வசந்திக்கா உட்பட பிரதேச செயலகத்தில் உள்ள பிரிவுகளின் பிரதானிகள், உத்தியோகத்தர்கள் என பலர் கலந்துகொண்டனர்.

புத்தளம் கிராமிய ஆஸ்பத்திரிகளில் வைத்தியர்கள் பற்றாக்குறை

அபிவிருத்தி குழுக்கூட்டத்தில் அலிசப்ரி ரஹீம் எம்பி தெரிவிப்பு

கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்

புத்தளம் மாவட்டத்தில் உள்ள பல கிராமிய வைத்தியசாலைகளில் வைத்தியர்களுக்கு பற்றாக்குறை காணப்படுவதாகவும் அதனால் மக்கள் பல சிரமங்களை எதிர் நோக்கி வருவதாகவும் புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலிசப்ரி ரஹீம் சுட்டிக்காட்டினார்.

புத்தளம் மாவட்ட அபிவிருத்திக் குழு கூட்டம் இணைத் தலைவர்களான வடமேல் மாகாண ஆளுநர் அட்மிரல் வசந்த கரன்னாகொட மற்றும் புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அசோக பிரியந்த ஆகியோரின் தலைமையில் வெள்ளிக்கிழமை (18) இடம் பெற்ற போதே அலிசப்ரி ரஹீம்எம்.பி, வைத்தியர்கள் பற்றாக்குறை தொடர்பில் சுட்டிக்காட்டினார்.

புத்தளம் கரைத்தீவு, உடப்பு மற்றும் கொத்தாந்தீவு உள்ளிட்ட பல கிராமிய வைத்தியசாலைகளில் வைத்தியர்கள் உட்பட ஆளணிப் பற்றாக்குறைபாடுகளுடன் காணப்படுகிறது எனவும் அவர் குறிப்பிட்டார்.

இன்னும் சில வைத்தியசாலைகள் வைத்தியர்களின்றி மூடப்பட்டிருக்கிறது. இதனால், மக்கள் தமது மருத்துவ தேவைகளுக்காக நீண்ட தூரம் பயணிக்க வேண்டிய நிலை காணப்படுவதாகவும் அவர் கூறினார்.

எனவே, பொதுமக்கள் தமது மருத்துவ தேவைகளுக்காக வீதியில் இறங்கும் வரை பார்த்துக்கொண்டிருக்காமல் அவசரமாக வைத்தியர்கள் பற்றாக்குறை காணப்படுகின்ற வைத்தியசாலைகளுக்கு வைத்தியர்கள் உட்பட ஆளணிப் பற்றாக்குறைகளையும் நிவர்த்தி செய்ய மாகாண சுகாதார பணிப்பாளர் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

இதன்போது பாராளுமன்ற உறுப்பினர் முன்வைத்த வைத்தியசாலை பிரச்சினை தொடர்பில் கவனம் செலுத்துவதாக மாகாண சுகாதார பணிப்பாளர் வாக்குறுதி அளித்தார்.

இந்த அபிவிருத்தி குழுக் கூட்டத்தில் இராஜாங்க அமைச்சர் சனத் நிசாந்த பெரேரா, பாராளுமன்ற உறுப்பினர், சிந்தக மாயாதுன்ன, புத்தளம் நகர பிதா எம்.எஸ்.எம். ரபீக்,வடமேல் மாகாண பிரதம செயலாளர், பிரதேச செயலாளர்கள், புத்தளம் மாவட்ட செயலாளர் உட்பட அரச திணைக்கள உயர் அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

அனுராதபுரம் பலாகல பிரதேச செயலக பகுதிக்குட்பட்ட ஆனகட்டாவ பாடசாலைக்கு முன்னால் செல்லும் குறுக்கு வீதி அனுராதபுரம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இஷாக் ரஹுமானின் நிதி ஒதுக்கீட்டின் மூலம் குற்றுக்கல் இட்டு அபிவிருத்தி செய்யப்பட்டது. இதனை மக்களின் பாவனைக்காக இஷாக் ரஹுமான் எம்.பி, திறந்து வைத்த போது(16) பிடிக்கப்பட்ட படம். (படம்: அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்)

கௌரவ பிரதமர் அவர்களின் செய்தி

இலங்கையின் முதலாவது பல்கலைக்கழகம் பேராதனைப் பல்கலைக்கழகம் என்பதைக் குறிப்பிடுவதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன். இலங்கைப் பல்கலைக்கழகம் (University of Ceylon) என்று அழைக்கப்பட்ட இப் பல்கலைக்கழகம் 2022ஆம் ஆண்டில் 80 வருடங்களை நிறைவு செய்கிறது.

2019 பட்டமளிப்பு விழாவில் 3890 பட்டதாரிகளை இப் பல்கலைக்கழகம் உருவாக்கியுள்ளது. உண்மையிலேயே இப் பல்கலைக்கழகம் நாட்டிற்கும் உலகிற்கும் ஒரு சொத்து. இலங்கையில் இலவசக் கல்வியின் அதிகபட்ச பலன்களைப் பெற்ற பட்டதாரிகள் நாட்டின் சமூக-பொருளாதாரத்திற்கு தனித்துவமான பங்களிப்பை வழங்குவது பட்டதாரிகளின் முழுமையான பொறுப்பாகும். நீங்கள் நாட்டின் வளர்ச்சிக்கு பங்களிப்பு செய்து இலங்கையை வழிநடத்துவீர்கள் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

உலகின் முதல்தர 500 பல்கலைக்கழகங்களின் வரிசையில் பேராதனைப் பல்கலைக்கழகமும் இடம்பெற்று எமது நாட்டிற்கு சர்வதேசப் புகழை கொண்டுசேர்த்துள்ளது. அத்தகைய பெருமையை நாட்டிற்கு ஈட்டித்தந்த பல்கலைக்கழக நிர்வாகம் மற்றும் கல்வி, கல்விசாரா ஊழியர்களின் அர்ப்பணிப்புடனான சேவைக்கு இலங்கையின் பிரதமராகிய நான் நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன்.

அத்துடன் கலாநிதி குணதாச அமரசேகர (D.Litt) மற்றும் பேராசிரியர் ஹெர்பர்ட் அப்போன்சோ (D.Sc) ஆகியோர் நாட்டுக்கு ஆற்றிய விலைமதிப்பற்ற சேவைகளைகளுக்கும் பங்களிப்பிற்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பேராதனை பல்கலைக்கழகத்தின் 82வது பொது பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெறும் பட்டதாரிகள் மற்றும் முதுகலைப் பட்டதாரிகளுக்கும் சிறப்பான எதிர்காலத்திற்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மஹிந்த ராஜபக்ஷ, கௌரவ பிரதமர்
இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு

கௌரவ கல்வி அமைச்சரின் செய்தி

நாட்டின் முதலாவது கலை மற்றும் ஆய்வு பல்கலைகழகமான பேராதனை பல்கலைகழகத்தின் 2019 ஆம் ஆண்டு பொதுப்பட்டமளிப்பு விழாவில் பட்டதாரிகளுக்கு எனது உளமார்ந்த நல்வாழ்த்துக்களை தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

பேராதனை பல்கலைகழகமானது, நாட்டிற்கு பெரும் அபிமானமாக இருப்பதுடன், இந்த ஆண்டு 80 வருட உன்னதமான சேவை நிறைவுடன் தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் புகழ்பெற்றதுடன் உலகில் அதிசிறந்த 500 பல்கலைகழகங்களில் ஒன்றாக விளங்குகிறது. அதிமேதகு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவர்களின் தலைமைத்துவம் மற்றும் அவரது தேசிய கொள்கையான. "சிறந்த நற்பிரஜைகளுடன் தன்னிறைவும் சௌபாக்கியமும், ஒழுக்கம் மிக்க சமுதாயத்துடனான தேசத்தை கட்டியெழுப்புதல்" என்ற கொள்கையின் கீழ் இந்த பல்கலைக்கழகத்தை அதி உன்னதமான கல்வியுடன் சிறந்த ஆய்வை மேற்கொண்டு உரிய கல்வி வழிக்காட்டலை காட்டும் நிறுவனமாக அரசு பாதுகாத்து வருகிறது. இந்த பல்கலைகழகம், அதிமேதகு ஜனாதிபதியின் அழைப்பின் பேரில் "ரஸ்பிரோன் நனோ AV-99" என்ற முகக்கவசத்தை தயாரித்து வழங்கும் நிகழ்வில் அமைச்சரவை - அமைச்சர்கள் முன்னால் அது தொடங்கிவைக்கப்பட்டதை இத்தருணத்தில் விசேடமாக நினைவூட்டுகின்றேன். இதே போல் கடந்த பல தசாப்தங்களாக மேலும் பல வெற்றிகரமான நிகழ்வுகளை நாம் மீட்டிப்பார்க்க முடிவதுடன் இதன் உபவேந்தர் கல்விசார் மற்றும் கல்விசாரா ஊழியர்கள் அனைவருக்கும் பல ஆண்டுகளாக இதன் கல்வி நிலையை நாட்டின் மிக உச்சத்தில் பேணி பாதுகாத்து உயர்த்தி வருவதனால் எனது பாராட்டுகளை தெரிவிப்பதுடன், இது போன்று மேலும் பரந்த செயற்பாடுகளுடன் உங்கள் ஆய்வில் பல புதிய கண்டுபிடிப்புக்கள் இடம்பெறும் என எதிர்பார்க்கின்றேன்.

புகழ்மிக்க பேராதனை பல்கலைகழகத்தின் எதிர்காலம் மேலும் பல வெற்றிகளையும் நிறைவான சுபீட்சத்தையும் வழங்குமென வாழ்த்துகின்றேன்.

கௌரவ திணேஷ் குணவர்த்தா
கல்வி அமைச்சர் - பாராளுமன்ற சபை முதல்வர்

கல்வி அமைச்சின் செயலாளரின் செய்தி

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் 82-வது பொது பட்டமளிப்பு விழாவை முன்னிட்டு இந்த செய்தியை அனுப்புவதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். நாட்டின் ஒன்பது கல்விப் பீடங்களில் பல்கலைக்கழகக் கல்வியில் முன்னோடியாகத் திகழும் இந்த உலகத் தரம் வாய்ந்த மதிப்புமிக்க பல்கலைக்கழகத்தில் இருந்து இன்று பட்டம் பெற்ற அனைத்து பட்டதாரிகள் மற்றும் முதுகலை பட்டதாரிகளை நான் வாழ்த்துகிறேன்.

தொற்றுநோய் நிலைமை கல்வி முறையை மோசமாகப் பாதித்திருந்தாலும் பேராதனைப் பல்கலைக்கழகம் அதன் சவால்களை மாற்றியமைத்து வெற்றிபெற முடிந்தது இந்த பட்டமளிப்பு அதன் மூவாயிரத்து எண்ணூற்று தொண்ணூறு மாணவர்கள் இன்று அவர்களை நேரில் சந்திக்க முன்வந்துள்ளதற்கு ஒரு சான்றாகும். இலங்கையின் உயர்கல்வித் துறையானது அதன் வளர்ந்து வரும் தேவைகளுக்கும் உண்மையில் உலகிற்கும் தேவையான திறன்களைக் கொண்ட பட்டதாரிகளை உருவாக்க விரும்புகிறது அதேவேளையில் பொறுப்புமிக்க சமூக விழிப்புணர்வு மற்றும் உணர்திறன் மிக்க வாழ்நாள் முழுவதும் கற்கும் உயர்தர உலகளாவிய பிரஜைகளை உருவாக்குகிறது.

இந்த எதிர்பார்ப்பை நிறைவேற்றுவதில் இலங்கையின் முன்னணி நிறுவனமாக பேராதனைப் பல்கலைக்கழகம் திகழ்கிறது தற்போதைய உலகளாவிய நெருக்கடியின் கோரிக்கைகளை பூர்த்தி செய்யும் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் உயர்தர புதுமையான ஆராய்ச்சி வெளியீடு சர்வதேச தளத்தில் இந்தப் பல்கலைக்கழகத்தின் உயர் நிலையை பிரதிபலிக்கிறது. இது ஆராய்ச்சியின் திறம்பட மற்றும் திறமையான பயன்பாட்டிற்கான தொழில்முனைவை ஊக்குவிக்கிறது. துணைவேந்தர் அவர்களுக்கும் இந்நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு இன்று பட்டம் பெறுகின்ற மாணவர்களை அவர்களின் எதிர்கால முயற்சிகள் மற்றும் அபிலாஷைகள் அனைத்திலும் வெற்றி பெற வாழ்த்துகிறேன்.

பேராசிரியர் கபில சி.கே. பெரேரா
கல்வி அமைச்சின் செயலாளர்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தலைவரின் செய்தி

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொதுப் பட்டமளிப்பு - 2019 ஐ முன்னிட்டு இந்த வாழ்த்துச் செய்தியை எழுதுவதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். இந்த மதிப்பிற்குரிய பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பு முடித்தவர்களுக்கு முதலில் எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். இது உண்மையில் உங்கள் வாழ்க்கையில் ஒரு பெரிய மைல்கல். நீங்கள் பல சவால்களை எதிர்கொண்டு அழகாக மேலே வந்துள்ளீர்கள் தொற்றுநோய்க்கு மத்தியிலும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் விருப்பத்திற்கு இணங்க பட்டமளிப்பு நடத்தப்பட்டதில் பட்டதாரிகள் மகிழ்ச்சியடைய வேண்டும். பேராதனைப் பல்கலைக்கழகம் நிறுவப்பட்டது முதல் சிறந்த கல்வித் தரத்தைப் பேணுவதன் மூலம் தேசத்திற்குப் போற்றத்தக்க வகையில் சேவையாற்றி வருகிறது.

இலங்கையின் தேசிய பல்கலைக்கழக அமைப்பில் உள்ள மிகவும் மதிப்புமிக்க பல்கலைக்கழகங்களில் ஒன்றான பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பட்டதாரி மாணவராகத் தகுதிபெறுவது உண்மையிலேயே ஒரு கௌரவமாகும். Times Higher Education தரவரிசைப்படி பேராதனைப் பல்கலைக்கழகம் முதல் 4வது இடத்தைப் பிடித்துள்ளது. தொடர்ந்து மூன்று ஆண்டுகளாக உலகெங்கிலும் உள்ள பல்கலைக்கழகங்கள். நாட்டிற்கு சர்வதேச நற்பெயரைக் கொண்டு வரும் வகையில் சமீபத்தில் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் ஒன்பது கல்வி உறுப்பினர்களை உலகின் சிறந்த விஞ்ஞானிகளில் முதல் 2இடங்களுக்கு சேர்த்துள்ளனர்.

உலகளாவிய தரவரிசையில் பல்கலைக்கழகம் 215 இடத்தில் உள்ளது கலாநிதி குணதாச அமரசேரா மற்றும் பேராசிரியர் ஹெர்பர்ட் அபோன்சோ ஆகியோர் தேசத்திற்கு அவர்களின் சிறப்பான பங்களிப்புகளுக்காக கௌரவிக்கப்படுகிறார்கள். பல்கலைக்கழகம் வழங்கக்கூடிய மிக உயர்ந்த தனிச்சிறப்பைப் பாராட்டி வாழ்த்த விரும்புகிறேன்.

பேராசிரியர் சம்பத் அமரசிங்க
தலைவர்
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

பல்கலைக்கழக வேந்தரின் செய்தி

பொது பட்டமளிப்பு-2019 நிகழ்வில் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பட்டதாரிகளை வாழ்த்துவதில் மகிழ்ச்சி பேராதனைப் பல்கலைக்கழகம் இலங்கையில் மூன்றாம் நிலைக் கல்வியை வழங்கும் ஒரு முன்னோடி நிறுவனமாகும் 1942ஆம் ஆண்டு முதல் 80 ஆண்டுகால இருப்புடன் சந்தேகத்திற்கு இடமின்றி சிறந்த இலங்கைப் பல்கலைக்கழகமாக பேராதனை விளங்குகிறது. டைம்ஸ் உயர் கல்வி தரவரிசையின் படி உலகம் இப்போது அதன் 3வது தொழில்துறை புரட்சியை நோக்கி நகர்கிறது மற்றும் நமது மாணவர்கள் அதன் மூலம் செழிக்க தங்கள் திறனை உறுதி செய்ய வேண்டும். எங்கள் பட்டதாரிகள் எப்பொழுதும் திறமையான நபர்களாக நிரூபிக்கப்பட்டுள்ளனர். அவர்களின் நிபுணத்துவம் தேசிய மற்றும் சர்வதேச அளவில் பல துறைகளில் பிரதிநிதித்துவம் செய்யப்படுகிறது. நமது பட்டதாரிகளின் முக்கிய அம்சம் பல்கலைக்கழகத்தில் கற்றல் நிகழ்ச்சிகளின் போது அவர்கள் சேகரித்த அறிவைப் பயன்படுத்துவதன் மூலம் சமூகத்திற்கு பங்களிக்கும் திறனாக இருக்கலாம். கடந்த சில தசாப்தங்களாக. நாட்டின் விரைவான வளர்ச்சிக்கு எங்கள் மாணவர்கள் பங்களிததனர் இதை அடைய எமது குறிக்கோள் அவர்களின் அறிவுத் தாகத்தைத் தணிப்பது மட்டுமல்லாமல் அவர்களுக்குத் தேவையான திறமையைக் கொண்டு அவர்களைப் பலப்படுத்துகின்றது. உலகை வெல்ல வேண்டும். இவை அனைத்தும் அவர்களின் ஆளுமையை வளர்ப்பதில் சிறந்தவை என்று நாங்கள் நம்புகிறோம். பேராதனைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பீடாதிபதிகள் முதுகலைப் பட்டதாரிகளின் பணிப்பாளர்கள் மற்றும் பிற கல்வியாளர்கள் நிர்வாக மற்றும் கல்விசாரா ஊழியர்களின் வழிகாட்டலும் ஆதரவும் எமது மாணவர்களை திறமையான நபர்களாக மாற்றுவதில் சந்தேகத்திற்கு இடமின்றி பங்காற்றியுள்ளன. அவர்களுக்கு மனமார்ந்த பாராட்டுக்கள் இறுதியாக எங்கள் புதிய பட்டதாரிகளை நான் வாழ்த்துகிறேன் மற்றும் அவர்கள் அனைவரும் வெற்றிபெற வாழ்த்துகிறேன்.

பேராசிரியர். கே.எம்.டி சில்வா BA (சிலோன்) Ph.D, DLit (லண்டன்)
வேந்தர்
பேராதனைப் பல்கலைக்கழகம்

துணைவேந்தரின் பட்டமளிப்புச் செய்தி

"பேராதனை எனும் பெயர் நிச்சயமாக உலகின் அழகான பெயர்களில் ஒன்றாகும்" எனபல்கலைக்கழக இளைஞர்கள் அனுபவிக்கும் சிறப்பானதும் செழிப்பானதுமான கற்றல் சூழலை கருத்திற்கொண்டு பேராதனைப் பல்கலைக்கழகத்தின் முதல் துணைவேந்தர் சேர். ஐவர் ஜென்னிங்ஸ் ஒரு முறை குறிப்பிட்டார்.

இது ஒரு உயர் தரத்திலான நிறுவனம் என்பதோடு இதன் இன்றைய பட்டதாரிகளும் மிகச் சிறப்பானவர்களாவர். முன்னெப்போதும் இல்லாத வகையில் இடம்பெற்ற உலகளாவிய நெருக்கடி காரணமாக முழுமையாக இரண்டு வருடங்கள் இந்நிகழ்வுக்காகப் பொறுமையுடன் காத்திருந்த 2019ஆம் ஆண்டு பட்டதாரி மாணவர்களை வாழ்த்துகின்றேன். பட்டதாரிகளே, எண்ணற்ற அழுத்தங்களின் கீழும் அற்புதமான சாதனைகளை நிகழ்த்திய இந்தப் பல்கலைக்கழக சமூகத்தை வளப்படுத்துவதில் உங்களது பங்களிப்பையும் மிகச் சிறப்பாக நல்கியுள்ளீர்கள். எவ்வாறாயினும், உங்களின் கற்றல் நடவடிக்கைகளும், உங்களுக்கு வழங்கப்பட்ட உங்களது பட்டம் நோக்கிய சமூகப் பொறுப்பும் இன்னமும் நிறைவுபெறவில்லை. வாழ்க்கை நெடுகிலும் கற்றல் என்பது ஒரு தெரிவு என்பதல்லாது ஒரு யதார்த்தம் என்னும் வகையில் இந்தப் பல்கலைக்கழகத்தின் விருது வாக்கியமான "அறிவே அனைத்துக்குமான கண்" என்பது உங்கள் வாழ்க்கை முழுமைக்குமான பயனுள்ள வழிகாட்டல் கொள்கையாக இருக்கும் எனலாம்.

இந்த உலகளாவிய பெருந்தொற்றுக்கு இடையிலும் கல்விசார் நடவடிக்கையினைத் தொடர்ந்து முன்னெடுக்கத் தேவையான நிதிகளையும் உள்ளகக் கட்டமைப்புக்களையும் வழங்கிக் கொண்டிருக்கும் இலங்கை அரசாங்கத்திற்கு நான் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். விலைமதிப்பற்ற வழிகாட்டல்களையும் மதிப்பார்ந்த சேவைகளையும் எமக்கு வழங்கும் பேரவை உறுப்பினர்களுக்கும் எனது உணர்வுபூர்வமான நன்றிகளைத் தெரிவிப்பதில் நான் பெருமகிழ்வடைகின்றேன். மேலும், இந்த 82வது பொதுப்பட்டமளிப்பு விழாவினை மிகச்சிறப்பாக நிகழ்த்த தமது மனப்பூர்வமான அர்ப்பணிப்பை வழங்கிய பட்டமளிப்பு விழாவிற்கான செயற்பாட்டுக் குழுவிற்கும் கல்விசார், நிர்வாக மற்றும் கல்விசாரா ஊழியர்களுக்கும் எனது நன்றிகளை உரித்தாக்குகின்றேன்.

மாணவர்களே, உங்களது பட்டமளிப்பு நாளில் உங்களைப் பாரரட்டுவதோடு, உங்களது எதிர்கால முயற்சிகளுக்கும் உங்களை வாழ்த்துகிறேன்.

பேராசிரியர் எம்.டி. லமாவன்ச
துணைவேந்தர்
பேராதனைப் பல்கலைக்கழகம்

பிரதி துணைவேந்தரின் செய்தி

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் 82ஆவது பட்டமளிப்பு விழாவை முன்னிட்டு இந்த வாழ்த்துச் செய்தியை அனுப்புவது எனக்கு மட்டற்ற மகிழ்ச்சியையும் பெருமையையும் தருகிறது. இந்த பட்டமளிப்பு விழாவில் ஒன்பது பீடங்களைச் சேர்ந்த 3890 பட்டதாரிகள்: சுகாதார, அறிவியல், விவசாயம், கலை, பல், மருத்துவ, அறிவியல், பொறியியல், மேலாண்மை, மருந்து, விஞ்ஞானம், கால்நடை மருத்துவம் மற்றும் விலங்கு விஞ்ஞானம் மற்றும் மூன்று முதுகலைப் பட்டதாரி நிறுவனங்களான விவசாய முதுகலை நிறுவனம், விஞ்ஞான முதுகலை நிறுவனம், மற்றும் மனிதநேயம் மற்றும் சமூக விஞ்ஞான முதுகலை நிறுவனம் ஆகியவற்றுக்கு அதிபர் பேராசிரியர் கே.எம். டி சில்வா அவர்கள் பட்டங்களை வழங்குவார். இதில் இரண்டு கௌரவ 43 முனைவர் 84 எம். பில். 1065 முதுகலை மற்றும் 2725 இளங்கலை பட்டங்கள் அடங்கும்.

பட்டமளிப்பு விழா என்பது பல கஷ்டங்களை கடந்து பட்டப்படிப்புகளை முடித்த மாணவர்களுக்கு கொண்டாட்ட நாளாக அமைகிறது.

இது அவர்களின் வாழ்க்கையில் ஒரு புதிய பக்கத்தைத் திருப்புகிறது இது வெற்றி மற்றும் பெருமைக்கு வழிவகுக்கும் தகுதியான பாராட்டுக்கான சான்றிதழ். அவர்களின் பெற்றோர் மற்றும் உறவினர்களுக்கு இது அர்ப்பணிப்பு மற்றும் தியாகத்தின் ஆண்டுகளைக் குறிக்கும் நாள். மாணவர்களைப் பயிற்றுவித்து அழகுபடுத்திய ஆசிரியர்களுக்கு தங்கள் வாழ்வில் வெற்றி பெற்ற மாணவர்களைப் பற்றி பெருமைப்படும் நாள்.

2022 ஆம் ஆண்டில் பல்கலைக்கழகம் தனது 80வது ஆண்டைக் கொண்டாடும் வேளையில் இந்தப் பட்டமளிப்பு விழா சிறப்பு வாய்ந்தது. கடந்த இரண்டு ஆண்டுகளாக உலகளாவிய தொற்றுநோய் காரணமாக பட்டமளிப்பு விழாவை நடத்துவது உண்மையிலிருந்து வெகு தொலைவில் இருந்தது அதே நேரத்தில் பட்டமளிப்பு விழாவை ஏற்பாடு செய்வது மிகவும் சவாலானது.

பேராசிரியர் டெரன்ஸ் மதுஜித், பிரதி துணைவேந்தர்
(பட்டமளிப்பு ஏற்பாட்டுக் குழுத் தலைவர்)

பதிவாளர் செய்தி

பேராதனைப் பல்கலைக் கழகத்தின் 82வது பொதுப் பட்டமளிப்பு விழாவிற்கு வாழ்த்துச் செய்தியை அனுப்புவதில் மகிழ்ச்சி அடைகிறேன். இந்த மகிழ்ச்சியான சந்தர்ப்பத்தில் பட்டம் பெற்ற மாணவர்கள் அவர்களது பெற்றோர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்கு எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாணவர்களின் சாதனைகளை பிரதிபலிக்கும் வகையில் பட்டமளிப்பு விழா ஒரு பல்கலைக்கழகத்திற்கு ஒரு மைல்கல். சமீபகாலமாக உலகம் ஒரு இக்கட்டான காலத்தை கடந்து கொண்டிருக்கும் நேரத்தில் சவால்களை எதிர்கொள்ளக்கூடிய புதுமையான மற்றும் திறமையான பட்டதாரிகள் நாட்டிற்கு தேவை. அதன் பெருநிறுவன இலக்குகளில் ஒன்றோடு நன்கு இணங்கி சவால்களை எதிர்கொள்ளும் வகையில் பட்டதாரிகளை உருவாக்குவதில் படிப்புத் திட்டங்களின் தரம் மற்றும் பொருத்தத்தை நோக்கிய அனைத்து முயற்சிகளையும் பல்கலைக்கழகம் பயன்படுத்தியுள்ளது. உலகளாவிய தொற்றுநோய் எதிர்கொள்ளும் சவால்கள் இருந்தபோதிலும், பட்டமளிப்பு - 2019 ஐ நனவாக்குவதில் அயராத முயற்சிகளை மேற்கொண்டதற்காக பல்கலைக்கழகத்தின் கல்வி நிர்வாக மற்றும் கல்விசாரா ஊழியர்களுக்கு நன்றி தெரிவிக்க இந்த வாய்ப்பைப் பயன்படுத்துகிறேன். விழா மாபெரும் வெற்றியடைய வாழ்த்துகிறேன்.

திருமதி. ஏம்.ஜீ.ஜே. தர்மசிறி,
பதிவாளர் (பதில் கடமை),
பேராதனைப் பல்கலைக்கழகம்

பேராசிரியர் ஹெர்பர்ட் ஆலன் அபோன்சோவுக்கு அறிவியல் மருத்துவர் பட்டம் (கௌரவ பட்டம்)

பேராசிரியர் ஹெர்பர்ட் ஆலன் அப்போன்சோ மார்ச் 25, 1925 இல் பிறந்தார். அவர் மொரட்டுவை பிரின்ஸ் ஒப் வேல்ஸ் கல்லூரியில் பயின்றவர். 1949 இல் கொழும்பு பல்கலைக்கழகத்தின் மருத்துவக் கல்லூரியில் பட்டம் பெற்றார். பின்னர் அவர் ஐக்கிய இராச்சியத்திற்குச் சென்று குழந்தைகளுக்கான புகழ்பெற்ற கிரேட் ஆர்மண்ட் ஸ்ட்ரீட் மருத்துவமனையில் பயிற்சி DCH (லண்டன்) பெற்றார். MRCPCH (எடின்பர்க்) FREPS, MD மற்றும் FRCP.

பேராசிரியர் அப்போன்சோ இலங்கைப் பல்கலைக்கழகத்தின் குழந்தை மருத்துவத்தில் மூத்த விரிவுரையாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பின்னர் பேராதனையில் புதிதாக நிறுவப்பட்ட மருத்துவப் பள்ளியில் சிரேஷ்ட விரிவுரையாளராகச் சேர்ந்தார். இத்துறையின் வெற்றிக்காக மிகுந்த அர்ப்பணிப்பையும் ஆர்வத்தையும் வெளிப்படுத்திய அவர் 1977ல் குழந்தை மருத்துவத்தில் பேராசிரியராக நியமிக்கப்பட்டார். சமூக குழந்தை மருத்துவத்தில் அவர் கொண்டிருந்த ஈடுபாடு பேராதனையில் உள்ள துறைகளுக்கிடையேயான சமூக சுகாதாரக் கற்கைகளுக்கான மையத்தை அமைப்பதில் அவரை முன்னோடியாக மாற்றியது. அவர் குழந்தைகளுக்கான ஊட்டச்சத்து மற்றும் சமூக குழந்தை மருத்துவம் குறித்து விரிவான ஆராய்ச்சி செய்துள்ளார் மேலும் குழந்தை மருத்துவத்தில் அதன் தீர்க்கப்படாத பல மருத்துவப் பிரச்சனைகளை வெளிச்சம் போட்டுக் காட்டுவதன் மூலம் அதன் வளர்ச்சிக்கு மகத்தான பங்களிப்பை வழங்கினார். அவரது மகத்தான பங்களிப்புகள் தொழில்முறை அமைப்புகளுக்கு மட்டுப்படுத்தப்படவில்லை ஆனால் சமூக சேவைகளையும் உள்ளடக்கியது. அவர் 1993 இல் பல்கலைக்கழக சேவையிலிருந்து ஓய்வு பெற்றார் இருப்பினும் மருத்துவ மாணவர்களுக்கு கற்பித்தல் மற்றும் பல ஆண்டுகளாக நோயாளிகளுக்கு சேவை செய்தார். அது அவரது வாழ்நாள் முழுவதும் அவருக்கு பலமாகவும் இருந்தது. அவரது சாதனை மற்றும் புகழ்பெற்ற தொழிலை அங்கீகரிக்கும் வகையில் பேராதனைப் பல்கலைக்கழகம் அவருக்கு கௌரவ டாக்டர் பட்டம் வழங்குகிறது.

மருத்துவ பீடத்தின் பேராசிரியர் வசந்தி பிண்டோ
